# இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்



# ஆண்டறிக்கை

# 2023

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | | |
|---|---|---|
| • | தவிசாளரின் செய்தி | I-II |
| 01. | நிறுவனத்தின் தோற்றப்பாடு/ அமுல்படுத்துவதன் பொழிப்பு | 1-3 |
| 02. | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவனக் கட்டமைப்பு | 4-20 |
| 03. | கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள் | 21-30 |
| 04. | நிருவாக அலுவல்கள் | 31-33 |
| 05. | பணிப்பாளர் சபை அறிக்கை | 34-36 |
| 06. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை | 37-39 |
| 07. | 2023 ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை | 40-43 |
| 08. | செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள நடுத்தரகால நடவடிக்கைகள் | 44-50 |
| 09. | செயலாற்றுகை பற்றிய 05 வருடகால பொழிப்பு | 51-53 |
| 10. | அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் | 54 70 |
| 11. | கணக்காய்வு அறிக்கை | 71-83 |
| 12. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை சீராக்கல் செய்துகொள்ள மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் | 84-108 |
| 13. | 05 வருட கால கணக்குகளின் பொழிப்பு | 109-110 |




## தவிசாளரின் செய்தி

உள்நாட்டு பெருந்தோட்டத்துறையின் முன்னேற்றத்திற்கு பெரும் பங்களிப்பை வழங்கி உள்நாட்டு மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை மேம்படுத்துவதற்காக பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தியை அறிமுகம் செய்து, மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மரமுந்திரிகை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவித்து, தமது 50 ஆவது ஆண்டு நிறைவை விமரிசையாக பூர்த்தி செய்துள்ள இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் இந்த சந்தர்ப்பத்தில் அதற்கான செய்தியொன்றை வெளியிடக் கிடைத்ததையிட்டு முதலில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வடகிழக்கு பிரஸீலில் தோன்றிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை 16 ஆவது நூற்றாண்டில் இந்தியாவின் கோவா மாநிலம் ஊடாக போர்த்துக்கேயர்களினால் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. இது இலங்கையின் வடமேல் கரையோர வலயத்தில் ஆரம்பத்தில் பயிர் செய்யப்பட்டதுடன், பிற்காலத்தில் உலர் காலநிலை நிலவுகின்ற வலயங்களில் கூடுதலாக பயிர்செய்யக்கூடிய பயிரொன்றாக பிரபல்யமடைந்தது. இன்று இது வணிக ரீதியில் மிக முக்கியத்துவம்வாய்ந்த உயர்மட்டப் விவசாய வாய்ப்புக்களைக் கொண்ட பயிரொன்றாக இதனை அறிமுகம் செய்ய முடியும்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் விவசாயத்துறையில் ஈடுபட்டவர்கள் மரமுந்திரிகை தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளார்கள் என்பதுடன், குறிப்பாக 1973 இல் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டதன் பின்னர் மரமுந்திரிகைக் கைத்தொழில் பிரபல்யமடைந்துள்ளது. இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு மரமுந்திரிகைக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வது முக்கியமாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

தற்போது மரமுந்திரிகை பருப்பு மூலம் தயார் செய்யப்பட்ட உணவுகள், குறிப்பாக சிங்கள, தமிழ் புத்தாண்டு மற்றும் நத்தார் பண்டிகைக் காலத்தில் இனிப்புப் பண்டங்கள், கேக், உணவுக்குப் பயன்படுத்தப்படுவதுடன், மரமுந்திரிகை தோல் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் திரவத்தை (Cashew nut liquid oil) அரக்கு, வண்ணப்பூச்சுக்கள், பிளாஸ்ரிக் உற்பத்திகளுக்கான மூலப் பொருளாக பயன்படுத்தும் ஆற்றலும் உள்ளது.

முந்திரிகைப் பருப்பு மற்றும் மரமுந்திரிகை உற்பத்திக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையில் பாரிய கேள்வி நிலவுகின்றது. இலங்கையின் முந்திரிகைப் பருப்பிலுள்ள யாணைத்தந்த நிறம், அளவில் பெரியதாக உள்ளமை, முந்திரிகை பருப்பை சுற்றியுள்ள இனிப்புமிக்க ஓரப்பகுதி காரணமாக உலக சந்தியல் பாரிய கேள்வி நிலவுவதுடன், மேற்படி கேள்வியை பூர்த்தி செய்வதற்குப் போதியளவு மரமுந்திரிகை உற்பத்தி இடம்பெறுவதில்லை. வருடாந்தம் தோலுடனான மரமுந்திரிகை சுமார் 25,000 மெற்றிக் தொண் கேள்வி காணப்படுவதுடன், உற்பத்தி செய்யப்படுவது சுமார் 13,100 மெற்றிக் தொண் மாத்திரமாகும். இந்த நிலைமை ஏற்றுமதியை மேம்படுத்துவதில் பாதகமான முறையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

2023 ஆம் ஆண்டில் இலங்கையில் தோலுடனான மரமுந்திரிகை அறுவடை 13,014 மெற்றிக் தொண்கள் ஆகும் என்பதுடன், இந்த ஆண்டில் ஏற்றுமதியளவு மெ.தொ. 68.34 ஆகும் என்பதுடன், ஏற்றுமதிப் பெறுமதி ரூ.மி. 311.08 ஆகும். 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது உயர்மட்ட வளர்ச்சியாகும்.

2023 ஆம் ஆண்டில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சகல சேவைகளையும் வணிக நடவடிக்கைகளையும் மிக்க மகிழ்ச்சிகரமான மட்டத்தில் பேணிவர முடிந்ததுடன், அதற்காக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பில் எனது மனப்பூர்வமான நன்றிகளையும், கௌரவத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக கூட்டுத்தாபனத்தின் சகல செயற்பாடுகளையும் உச்சளவான விளைத்திறனுடனும், வினைத்திறன்மிக்கவாறும் பேணிவருவதற்காக பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர்கள் உள்ளிட்ட சகல பதவியணியினரும் கடும் அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொண்டார்கள் என்பதுடன், அவர்களின் சேவையையும் உயர்வாக மதிக்கின்றேன்.

சிறியளவிலான தயாரிப்பாளர்கள், மரமுந்திரிகை உற்பத்தி ஏற்றுமதியாளர்கள், மரமுந்திரிகை சிறு தோட்ட உரிமையாளர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் உட்பட சகல தரப்பினர்களும் எனக்கு வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பின் பேரில் இந்த வெற்றிகளை அடைந்துகொள்ள முடிந்ததுடன், இதனை மிக்க உயர்வாக மதிக்கின்றேன்.
பெருந்தோட்டத்துறை அமைச்சர் கௌரவ ரமேஷ் பத்திரண அவர்கள் மற்றும் சிறு தோட்டப் பயிர்செய்கை அபிவிருத்தி பிரிவின் செயலாளர் உட்பட அமைச்சின் பதவியணியினர் எமது கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய வழிகாட்டல்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



**சட்டத்தரணி உதார விஜேசிங்க**
**தவிசாளர்**
**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்**

# 1. நிறுவனத்தின் தோற்றப்பாடு/அமுல்படுத்துவதன் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் அரச வியாபார நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டதன் காரணமாக மரமுந்திரிகை துறை தொடர்பான வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஆரம்பம் முதல் முன்னெடுத்துவந்துள்ளது. பிற்காலத்தில் மரமுந்திரிகைத் துறை சார்ந்ததாக உள்நாட்டில் எழுந்த சிக்கல்களைத் தீர்த்துவைக்க தலையீடு செய்து சேவையாற்றி வருவதில் ஈடுபட்டுள்ளது. அதற்கமைய, தற்போது இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனமானது அரச தொழில்முயற்சிசார் நிறுவனம் என்ற வகையில் மற்றும் மரமுந்திரிகை பயிர் செய்கை தொடர்பிலான விஸ்தரித்தல் சேவைகள், ஆராய்ச்சி மற்றும் தயாரிப்புச் சேவைகளை வழங்கும் நிறுவனமாகவும் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

## 1.2 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அமைத்துருவாக்கம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் 1972 இன் 11 ஆம் இலக்க அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 1973 மே மாதம் 15 ஆம் திகதிய 60/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய தாபிக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம் முதல் அரச தொழில்முயற்சியொன்றாக இயங்கிவருவதுடன், மரமுந்திரிகைக் கைத்தொழிலுக்கு சகல சேவைகளையும் பெற்றுக் கொடுப்பதுடன், வணிக நடவடிக்கைகளையும் இலாபகரமான மட்டத்தில் மேற்கொள்கின்றது.

## 1.3 நிறுவனத்தின் நோக்கு

மிக்க உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகையை உற்பத்தி செய்வதன் மூலம் இலங்கை உலகின் மரமுந்திரிகை ஏற்றுமதியில் முன்னோடி நாடாக மாறுதல்.

## 1.4 நிறுவனத்தின் செயற்பணி

மரமுந்திரிகை செய்கை, உற்பத்தி, பதப்படுத்தல் தொழில்நுட்பம், பெறுமதி சேர்த்தல், ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு தொழில்சார் வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நீண்டகால வர்த்தக ரீதியான வாய்ப்பை அடைந்துகொள்ளக்கூடிய வகையில் மரமுந்திரிகை கைத்தொழிலைக் கட்டியெழுப்புதல்.

## 1.5 இலக்கு மற்றும் நோக்கங்கள்

பூகோள ரீதியல் அங்கீகாரம் பெற்ற வர்த்தகப் பெயர் மற்றும் உயர்மட்ட ஏற்றுமதிக் கொள்ளளவுக்காக இலங்கையில் மரமுந்திரிகை உற்பத்தில் வியாபித்தல், பதப்படுத்தல், சந்தைப்படுத்தல் மற்றும் சான்றுப்படுத்தலின் விளைதிறனை மேம்படுத்தல்.

- பயிர்செய்கையை விஸ்தரிப்பதன் மூலம் விளைச்சலை அதிகரித்தல்.
- மரமுந்திரிகை பதப்படுத்தல் கைத்தொழில் மற்றும் தோட்டங்களின் விளைதிறனை மேம்படுத்தல்.
- இலங்கையின் மரமுந்திரிகைக்கு பூகோள ரீதில் அங்கீகாரம் பெற்ற வர்த்தகப் பெயரை ஏற்படுத்தல்.
- பெறுமதி சேர்த்தல் மற்றும் புதிய உற்பத்தி அபிவிருத்தி.
- மரமுந்திரிகை ஏற்றுமதியை ஊக்குவித்தல்.
- இலங்கையை மரமுந்திரிகை உற்பத்தியின் முன்னோடியாக மாற்றுதல்.
- இலாபம் உழைப்பதன் மூலம் தன்னிறைவடைந்த அரச கூட்டுத்தாபனமாக மாறுதல்.

## 1.6 அரச விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் முதலாவது அட்டவணைக்கு அமைய மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் பணிகள்

(அ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.

(ஆ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(இ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஈ) மரமுந்திரிகையை பயிரிடல், பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் சம்பந்தமான தொழில்நுட்பம், சந்தைப்படுத்தல் மற்றும் வேறு தகவல்களை சேகரித்தல்,

தயார் செய்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகம் மற்றும் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடன் இணைந்து செயற்படுதல்.

(உ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை பதனிடுவதற்காக தாபிக்கப்படுபின்ற தொழில்சாலைகளை தாபிக்க வேண்டிய இடங்கள், அவற்றின் அளவு மற்றும் தொழில்நுட்ப ரீதியான தரத்தை நிர்ணயித்தல் மற்றும் புதிய தொழில்சாலைகளைத் தாபிப்பதற்கும் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அப்போது செயற்பட்டு வந்த தொழில்சாலைகளை இயங்கச் செய்தல்.

(ஊ) மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகை உற்பத்திகளை கொள்வனவு செய்தல், விநியோகம், விற்பனை மற்றும் ஏற்றுமதி செய்தல்.

(எ) மரமுந்திரிகை பயிர்செய்கை, பதனிடல், சந்தைப்படுத்தல், மரமுந்திரிகை உற்பத்தி, பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஆட்களைப் பயிற்றுவித்தலுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுத்தல்.

(ஏ) மரமுந்திரிகை பயிர்செய்கை, பதனிடல் வசதிகள் மற்றும் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் பணிக்குத் தேவையான அடிப்படை ஒழுங்கமைப்பைத் தாபித்தல் மற்றும் மேற்படி ஒழுங்கமைப்பை தாகிக்க உதவி வழங்குதல்.

(ஐ) மரமுந்திரிகை உற்பத்தியை பிரபல்யப்படுத்தல் மற்றும் விற்பனைக்குத் தேவையானதெனக் கருதப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உலக சந்தையில் குறித்த உற்பத்திகளுக்குள்ள கேள்வியை மேம்படுத்தல் மற்றும் அப்பணிக்கு அல்லது அது சம்பந்தமான பணிகளுக்கு பிரச்சார செயற்பாடுகளுக்கு நிதி செலவிடல், அந்நடவடிக்கைகளை உபநிருவகித்தல் மற்றும் அந்நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குவதை ஆரம்பித்து அதற்கு அனுசரணை வழங்குதல்.

## 2. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

### 2.1 பணிப்பாளர் சபை

**அட்டவணை 2.1 : 2023.01.01 திகதி முதல் 2023.12.31 ஆம் திகதி வரை பணிப்பாளர் சபையில் அங்கம் வகித்த உறுப்பினர்கள்**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திரு டபிள்யு.எச்.எம். உதார விஜேசிங்க | தவிசாளர் |
| 02. | செல்வி அசோகா லங்காதிலக்க | பிரதித் தவிசாளர் |
| 03. | திருமதி ஏ.யு.கே. தொடம்வல | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) 2023.03.24 வரை |
| 04. | திருமதி சுஜந்தி மாயாதுன்னே | பணிப்பாளர் சபை உறுப்பினர் (பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதி) |
| 05. | செல்வி கே.ஏ.சீ. பிரியதர்ஷனீ | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி) 2023.03.30 முதல் 2023.09.05 வரை |
| 06. | திருமதி ஏ.பீ.டி.டி. சந்துரங்கி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி) 2023.10.31 முதல் |
| 07. | திரு சாமர சுபசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08. | திரு உபாலி வடுஆரச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 09. | திரு ஐ.டபிள்யு.ஏ. சமன் குமார | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 10. | திரு கே.எஸ். விஜயகீர்த்தி | பதில் பொது முகாமையாளர், பணிப்பாளர் சபையின் செயலாளர் |
| 11. | திருமதி வை.ரீ. துசங்கா | பொது முகாமையாளர் |

## 2.2 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

அட்டவணை 2.2 : 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | செல்வி கே.ஏ.சீ. பிரியதர்ஷனீ | குழுவின் தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி (2023.07.31 திகதி வரை) |
| 02. | திருமதி ஏ.பீ.டி.டி. சந்துரங்கி | குழுவின் தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி (2023.12.22 திகதி முதல்) |
| 03. | திருமதி ஏ.யு.கே. தொடம்வல | குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2023.02.24 திகதி வரை) |
| 04. | திருமதி ஆர்.ஏ.எஸ். மாயாதுன்ன | குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப்பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2023.06.16 திகதி முதல்) |
| 05. | திரு சாமர சுபசிங்க | குழுவின் உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 06. | திரு கே.எஸ். விஜயகீர்த்தி | குழுவின் செயலாளர், (பதில்), பொது முகாமையாளர் (பதில்) |
| 07. | திரு கே.ஏ.சீ. சாமந்த | குழுவின் அவதானிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு (2023.02.24 திகதி முதல்) |
| 08. | திரு வீ.யூ. லியனகே | குழுவின் ஏற்பாட்டாளர் மற்றும் குழு உறுப்பினர், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) |
| 09. | திரு டீ.எம்.யூ.எஸ். தர்மஜீவ | குழுவின் அவதானிப்பாளர், கணக்காய்வு அலுவலர், தேசிய கணக்காய்வு அலுவலகம் (2023.02.24 திகதி முதல்) |

## 2.3 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் உயர் மட்ட முகாமைத்துவம்

i). திரு கே.எஸ். விஜயகீர்த்தி - பொது முகாமையாளர் (பதில்)

ii). திருமதி ஐ.ரீ. துசங்கா - பிரதிப் பொது முகாமையாளர்

## 2.4 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நடுத்தர மட்ட முகாமைத்துவ பதவியணி

| | | | |
|---|---|---|---|
| i) | திரு எம்.ரீ.எஸ்.கே. பீரிஸ் | - | உதவிப் பொது முகாமையாளர் - நிதி |
| ii) | திரு வீ.யு. லியனகே | - | உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வாளர் |
| iii) | திரு பீ.எம்.ஏ.பீ.கே. விஜேதுங்க | - | உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் |
| iv) | திரு எம்.டி.ரீ.டபிள்யு. பிரார்த்தன | - | உதவிப் பொது முகாமையாளர் - விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்ச (2023.12.27 திகதி முதல்) |
| v) | திரு பிரசன்ன குணவர்த்தன | - | உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் (2023.12.27 திகதி முதல்) |

## 2.5 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 07 பிரிவுகள் காணப்படுவதுடன், மேற்படி ஒவ்வொரு பிரிவுகளும் மற்றும் மேற்படி ஒவ்வொரு பிரிவுகளினதும் செயற்பணிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

01. விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு
02. மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிருவாகப் பிரிவு
03. நிதிப் பிரிவு
04. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
05. பெருந்தோட்டப் பிரிவு
06. சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவு
07. கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

## 2.5.1 விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மரமுந்திரிகைக் கைத்தொழிலின் மேம்பாட்டுக்கு பொறுப்புக்கூறும் பாரிய வகிபாகத்தை நிறைவேற்றி வருகின்றது. இதன் போது குறிப்பாக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவினால் மரமுந்திரிகை பயிர்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலம் முக்கியதொரு செயற்பணி ஆற்றப்பட்டு வருகின்றது.

- மரமுந்திரிகை பயிர்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் பயிர்செய்கையின் விளைச்சலை மேம்படுத்துவதற்காக விவசாயிகளுக்கு உதவுதல்.
- விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் தடைகளை இனங்கண்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- இயற்கை சூழல் பாதுகா சூழலை பாதுகாத்தல் மற்றும் சகவாழ்வை மேம்படுத்துவதற்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் விளைச்சலை அதிகரித்தல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கை அபிவிருத்திக்கு அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- கூடுதல் விளைச்சலைக் கொண்ட, பல்வேறு காலநிலை மாற்றங்களுக்கும் ஈடுகொடுக்கின்ற குறைந்த இரசாயன உரம் மற்றும் கலைகொள்ளி பயன்படுத்தப்பட்ட மரமுந்திரிகை வகைகளை அறிமுகம் செய்தல்.
- உயர் தொழில்நுட்ப முறையியல்களைப் பயன்படுத்தி சுற்றாடல் பாதுகாப்புடன் கூடுதல் விளைச்சலை பெற்றுக் கொள்வது பற்றி விவசாயிகளை விழிப்புணர்வூட்டல்.
- நுகவர்வோரின் தேவைகளுக்குப் பொருத்தமானவாறு விளைச்சலை அதிகரித்தல், பெறுமதி சேர்த்தல், பின் அறுவடை தொழில்நுட்பம் மற்றும் பொதியிடல் பற்றிக் கவனம் செலுத்தி அதற்கான ஆராய்ச்சிகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விஸ்தரித்தல் பிரிவின் கீழ் காணப்படுகின்ற ஆராய்ச்சிப் பிரிவினால் மரமுந்திரிகை செடி, மரமுந்திரிகை செய்கை மற்றும் உற்பத்திகள் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆராய்ச்சிகள் நடாத்தப்படுகின்றன. இப்பிரிவின் கீழ் பிரதானமாக இரண்டு நிலையங்கள் புத்தளம் மாவட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ளன.
இலங்கை மரமுந்திரிகை கைத்தொழிலின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுதல் மற்றும் நிலைபேறான, சுற்றாடலுக்கு சாதகமான முறையியல்களை மேமபடுத்துவது ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.

### 2.5.2 மனிதவள முகாமைத்துவம் மற்றும் நிருவாகப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபதன்தின் குறிக்கோள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மனித வளங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் பயன்படுத்திக் கொள்ளல் மற்றும் அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதை மனித வளம் மற்றும் நிரவாகப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற பிரதான பணிகளாகக் குறிப்பிட முடியும்.

இப்பணிகளுக்கு மேலதிகமாக மனித வளம் மற்றும் நிருவாகப் பிரிவினால் பின்வரும் பயன்களும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

- ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் கடமை இடங்களுக்கு இணைப்புச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.மரமுந்திரிகை
- தொழில் உருவாக்கம் மற்றும் பகுப்பாய்வு
- பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
- ஊழியர்களின் சம்பள முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஊழியர்களின் பிரச்சனைகள் கவலைகள் பற்றிய முகாமைத்துவம்.
- ஊழியர்களின் செயலாற்றுகை மதிப்பீடு போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய ஊழியர்களின் விளைதிறன், விடயரீதியான அறிவு மற்றும் வினைத்தினை வளர்ப்பதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் உத்தேச குறிக்கோள் மற்றும் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு மனித வள முகாமைத்துவம் மற்றும் நிருவாகப் பிரிவு பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது,

### 2.5.3 நிதிப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு தேவையான நிதிகளை உகந்த வழிமுறைகளிலிருந்து உருவாக்கிக் கொண்டு மேற்படி நிதியை விளைதிறன்மிக்கவாறு முதலீடு செய்து, கூட்டுத்தாபனத்தின் இலாபத்தை மேம்படுத்துவதற்கு நிதிப் பிரிவு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தை மேம்படுத்தல், நிதிசார் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் திரவத்தன்மையை சிறந்த மட்டததில் பேணிவருவது நிதிப் பிரிவின் நோக்கங்களாகும் என்று குறிப்பிட முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் நிதிப் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றன.

- சரியான நிதி முகாமைத்துவத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் வினைத்திறனையும், விளைதிறனையும் மேம்படுத்தல்.

- குறித்த நிதிசார் சட்டங்கள், ஒழுங்குவிதிகளுக்கு இணங்க கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.

- பல்வேறு பிரிவுகள் மற்றும் கருத்திட்டங்களின் வருமானம், செலவினம், இலாபம் மற்றும் நட்ட நிலைமைகளைக் குறிப்பிட்டு மாதாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.

- ஒவ்வொரு வருட இறுதியிலும் வணிக மற்றும் சேவைசார் துறைகளின் இலாபங்களைக் குறிப்பிட்டு இறுதிக் கணக்குகளைத் தயார் செய்து அமைச்சிடம் சமர்ப்பித்தல்.

## 2.5.4 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிச் செயற்பாடுகளின் அடிப்படையிலான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றி அடிக்கடி மற்றும் சுயாதீனமான மதிப்பீட்டை மேற்கொண்டு, அதனூடாக ஏற்புடையதாகின்ற உள்ளகப் பரிசோதனைகளின் போதியளவிலான தன்மை மற்றும் செல்லுபடியான தன்மையை உறுதி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வளங்களை முறையான கட்டுப்பாட்டின் கீழ் மென்மேலும் விளைதிறனும், வினைத்திறனும்மிக்கதாகவும் மற்றும் பொருளாதார ரீதியில் நிறுவனத்தின் அன்றாட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்குத் தேவையான பல்வேறு முறைகளை அறிமுகம் செய்தல் மற்றும் அவற்றின் செயன்முறை உபயோகம் பற்றி பின்னூட்டல் மற்றும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முன்னேற்றம் மற்றும் அபிவிருத்திக்கு ஏற்புடையதாகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தொடர்பில் தொடர்ச்சியான மதிப்பீட்டை மேற்கொள்ளல் மற்றும் அவற்றில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம் பற்றி நிருவாக அதிகாரசபைக்கு அறிக்கையிடல் ஆகிய பணிகளின்

அடிப்படையில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பொது இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை இப்பிரிவு வழங்குகின்றது.

## 2.5.5 பெருந்தோட்டப் பிரிவு

இலங்கையின் உள்நாட்டு மரமுந்திரிகை நுகர்வுக்குத் தேவையான உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகையை உற்பத்தி செய்வதன் மூலம் உத்தேச இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வது பெருந்தோட்டப் பிரிவின் முக்கிய செயற்பணியாகும் என்பதுடன், அப்பிரிவினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளைப் பராமரிப்புச் செய்து இலாபகரமான முறையில் பேணிவருதல்.
- இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் வகையில் பயிர்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தோட்டங்கள் மற்றும் நாற்று மேடைகளை மையமாகக் கொண்டு கிராமப் புறங்களில் வாழும் மக்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு உற்பத்தியின் தரம் மற்றும் அளவை மேம்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.
- மரமுந்திரிகை செய்கையை மாதிரி பயிர்செய்கையாக பேணிவருவதுடன், முதலீட்டாளர்கள் மற்றும் பதனிடுவோரை ஈர்த்தல்.

மேலும் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவினால் மரமுந்திரிகை செய்கையை விஸ்தரிப்பதற்குத் தேவையான உண்மையான (Authentic) ஒட்டுச் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, நாடு முழுவதிலும் மரமுந்திரிகை பயிர் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதும் மேற்கொள்ளப்படுவதுடன், உண்மையான (Authentic) மரமுந்திரிகை ஒட்டுச் செடிகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கூட்டுத்தாபனத்தின் இலாபத்தை அதிகரிக்க உச்சளவில் பங்களிப்பு வழங்குகின்றது.

## 2.5.6 சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் பிரிவினால் உள்நாட்டு மரமுந்திரிகை நுகர்வுக்கான நுகர்வோரின் தேவைகள் பற்றி ஆராய்ந்து அவர்களின் கேள்விக்கு உகந்தவாறு அல்லது அவர்களின் தேவைகள்

மற்றும் திருப்திக்காக உகந்த மரமுந்திரிகை உற்பத்திகளை பெற்றுக் கொடுப்பதன் மூலும் கூட்டுத்தாபனத்தின் உத்தேச் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

- உற்பத்திச் செலவினத்தைக் குறைத்தல், விளைச்சலை அதிகரிப்பதன் மூலம் மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழிலை மேம்படுத்தல்.
- சர்வதேச தரநியமங்களுக்கு பொருத்தமானவாறு பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்தியாளர்களின் தரம் மற்றும் சுவையை மேம்படுத்தல்.
- மரமுந்திரிகை சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் கைத்தொழிலின் முன்னேற்றத்துக்காக அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்களுடன் சிறந்த தொடர்பைப் பேணி வருவதுடன் வருடாந்தம் அத்துறையில் அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
- இலாபகரமான தன்மையை மேம்படுத்தி மற்றும் சந்தையில் போட்டியாளர்களுடன் நல்லதொரு உறவைப் பேணி, சந்தைப்படுத்தல் பிரிவை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் பேணிவருதல்.
- ஊழியர்களின் அறிவை இற்றைப்படுத்தல், திறமைகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதும், பலப்படுத்துவதும்.

கூட்டுத்தாபன தோட்டங்களிலிருந்து வருடாந்தம் கிடைக்கின்ற தோலுடனான மரமுந்திரிகை விளைச்சலின் பெறுமதியை சேகரித்து மரமுந்திரிகைகளை உட்கொள்ளும் நுகர்வோரின் தேவைகள் மற்றும் அவசியங்களுக்கு ஏற்றவாறு மேற்படி தோலுடனான மரமுந்திரிகைகளை பதனிட்டு பெறுமதி சேர்த்து மரமுந்திரிகை உற்பத்திகளை சந்தையில் சமர்ப்பிப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பதனிடல் நிலையங்கள் 02 காணப்படுகின்றன. மேற்படி பதனிடல் நிலையங்கள் இரண்டும் புத்தளம் மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் தாபிக்கப்பட்டுள்ளன.

### 2.5.7 கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவு

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் உத்தேச குறிக்கோள்களைத் தாபித்தல் மற்றும் மேற்படி குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான உரிய கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் அமுல்படுத்தல், மதிப்பீடு செய்யும் பணிகளை மேற்கொள்ளல், கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவின் முக்கிய செயற்பணியாகும் என்பதுடன், கொள்கை மற்றும் திட்டமிடல்

பிரிவினால் பல்வேறு வகையிலான திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன், அவை மூலம் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய குறிக்கோள்கள் மற்றும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளும் முறை பற்றி இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்திற்கு வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன. மேற்படி பணிகளுக்கு மேலதிகமாக கொள்கை மற்றும் திட்டமிடல் பிரிவினால் பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கூட்டுத் திட்டம் மற்றும் செயற்றிட்டத்தை வருடாந்தம் தயார் செய்தல்.
- கூட்டுத் திட்டம் மற்றும் செயற்றிட்டம் தொடர்பான நோக்கங்கள் மற்றும் இலக்குகளை உண்மைச் செயற்பாடுகளுடன் ஒப்பிடு செய்து மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உயர் முகாமைத்துவம், பணிப்பாளர் சபை மற்றும் ஏனைய தரப்பினர்களுக்கு அறிவித்தல் மற்றும் இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள தடைகளுக்கான தீர்வுகளை கண்டறிதல், ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், செயலாற்றுகை மற்றும் சிக்கல்களை அறிக்கையிடல்.
- மரமுந்திரிகை விவசாயிகள் மற்றும் பதனிடுவோரின் செயற்பாடுகள் மற்றும் கூட்டுத்தாபனத்தின் சகல வணிகப் பணிகள் தொடர்பிலுமான தரவுக் களஞ்சியமொன்றை பேணிவருதல்.
- இலக்குகளை அடைந்துகொள்வதிலுள்ள தடைகளை இனங்காணல், அதற்குத் தேவையான கொள்கைகளை வகுத்தல், கூட்டுத்தாபனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகொள்வதற்கான திட்டங்களை குறைந்த செலவில் மேற்கொள்ளல்.
- மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் பெற்றுக் கொள்ளும் வெற்றிகள் மற்றும் நன்மதிப்பை மேம்படுத்தல், மரமுந்திரிகை செய்கையின் பயன்களை மக்களுக்கு அறிவிக்கும் பொருட்டு பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வருடாந்த அறிக்கைகளைத் தயார் செய்தல்.

## 2.6 தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்கள்

### 2.6.1 தலைமை அலுவலகம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் இலக்கம் 1334, பழைய கோட்டே வீதி, ராஜகிரிய எனும் முகவரியில் அமைந்துள்ளது. தலைமை அலுவலகத்திற்கு மேலதிகமாக மரமுந்திரிகைக் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் விற்பனை நிலையமொன்றும் இதே இடத்தில் அமைந்துள்ளது.

**அட்டவணை 2.6.1 : தலைமை அலுவலகத்தின் தொலைபேசி இலக்கங்கள்**

| **தொலைபேசி இலக்கம்** | |
|---|---|
| தவிசாளர் | 0112 - 871005 |
| பிரதித் தவிசாளர் | 0112 - 869844 |
| பொது முகாமையாளர் | 0112 - 876134 |
| பெக்ஸ் | 0112 - 867843 |
| மின்னஞ்சல் | cashewco@sltnet.lk |
| இணையத்தளம் | www.cashew.lk |

## 2.6.2 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பிராந்திய அலுவலகங்கள்

**அட்டவணை 2.6.2. : பிராந்திய அலுவலகங்கள்**

| **பெயரும், பதவியும்** | **உள்ளடங்கும் மாவட்டம்** | **அலுவலகம்** | **தொலைபேசி இலக்கம்** |
|---|---|---|---|
| 1. திருமதி டபிள்யு.என்.பீ. தர்மரத்ன பிராந்திய முகாமையாளர் | அநுராதபுரம் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கக் கட்டிடம், கொடகே மாவத்தை, அநுராதபுரம் | 025-2227071<br>070-1229968 |
| 2. திருமதி சமிலா தெனகம பிராந்திய முகாமையாளர் | பதுளை/கண்டி | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், சீ.ரீ.சீ. சந்தி, அளுத்தரம, மஹியங்கனை | 071-6153963 |
| 3. திரு ரஞ்ஜித் கமகே, உதவிப் பிராந்திய முகாமையாளர் (பதில்) | இரத்தினபுரி | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், மத்திய நாற்றுமேடை கிரலவெல்கொட்டுவ, எம்பிலிபிட்டிய | 070-5617732 |
| 4. திரு எல். சஞ்ஜீவன், உதவிப் பிராந்திய முகாமையாளர் | கிளிநொச்சி/ முல்லைத்தீவு/ யாழ்ப்பாணம்/ வவுனியா/ மன்னார் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பழைய கச்சேரிக் கட்டிடம், கிளிநொச்சி | 021-2283830<br>077-9850497 |
| 5. திரு சீ.எம்.சீ. விஜேகுமார பிராந்திய முகாமையாளர் (பதில்) | அம்பாறை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், 40 ஆம் மைல் கல், மங்களகம, அம்பாறை | 071-4970974 |

| பெயரும், பதவியும் | உள்ளடங்கும் மாவட்டம் | அலுவலகம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 6. திரு கே.ஏ.ஏ.என். அமரசிங்க, உதவிப் பிராந்திய முகாமையாளர் | மொனராகலை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், ஹோமாகமவத்த, 22 ஆம் மைல் கல், நக்கல, மொனராகலை | 055-2252090<br>071-8159195 |
| 7. திரு கே.பீ.எஸ்.ஜே. காரியவசம், உதவிப் பிராந்திய முகாமையாளர் | ஹம்பாந்தோட்டை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், சில்வாஸ், மல்பெத்தாவ, அம்பலாந்தோட்டை | 047-2223407<br>071-8576359 |
| 8. திருமதி டபிள்யு.என்.பீ. தர்மரத்ன பிராந்திய முகாமையாளர் (பதில்) | புத்தளம் | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், புனிதமரியாள் வீதி, சேனகுதிரிப்பு, புத்தளம் | 032-2265998<br>070-1229968 |
| 9. திரு எச்.ரீ.டி. தயாரத்ன, உதவிப் பிராந்திய முகாமையாளர் | மட்டக்களப்பு/ பொலன்னறுவை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், பொது நூலகம், வீ.சீ. வீதி, வந்துரமூலை | 065-3658566<br>070-4902580 |
| 10. திரு பீ.ஜி. குமாரசிங்க உதவிப் பிராந்திய முகாமையா ளர் | மாத்தளை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், நாலந்தா விதை பூங்கா, மடவல, உல்பத்த, மாத்தளை | 071-4481510 |
| 11. திரு ஆர்.எஸ். நரேஷ் குமார், நிலையப் பொறுப்பு அலுவலர் | திருகோணமலை | இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், கண்டி வீதி, தம்பலகாமம், திருகோணமலை | 077-1303648 |

## 2.7 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்கள்

**அட்டவணை 2.7 : தோட்டங்கள் மற்றும் காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | தோட்டத்தின் பெயர் | அமைந்துள் ள மாவட்டம் | மொத்த ஏக்கர் அளவு | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|
| 01. | கமன்தலுவ தோட்டம் | புத்தளம் | 548 | 494 |
| 02. | ஆச்சிகெவத்த தோட்டம் | புத்தளம் | 961 | 761 |
| 03. | ஹாடி தோட்டம் | மட்டக்களப்பு | 365 | 190 |
| 04. | கொண்டச்சி தோட்டம் | மன்னார் | 6,498 | 765 |

| தொடர் இல. | தோட்டத்தின் பெயர் | அமைந்துள் ள மாவட்டம் | மொத்த ஏக்கர் அளவு | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|
| 05. | மாங்கேணி தோட்டம் | மட்டக்களப்பு | 1,075 | 115 |
| 06. | பூநகரி தோட்டம் | கிளிநொச்சி | 479 | 250 |
| 07. | வெல்லன்குள் தோட்டம் | கிளிநொச்சி | 500 | 265 |
| 08. | திரியாய தோட்டம் | திருகோணம லை | 35 | 5 |
| | **மொத்தம்** | | **10,461** | **2,845** |

- கொண்டச்சி தோட்டத்தில் 1,435 ஏக்கர் பரப்பளவு சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் பராமரிப்புச் செய்யப்பட்டு பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனது,

## 2.8 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான விதைத் தோட்டங்கள்

**அட்டவணை 2.8 : விதை தோட்டங்கள் அமைந்துள்ள காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | விதைத் தோட்டத்தின் பெயர் | அமைந்துள்ள மாவட்டம் | மொத்த ஏக்கர் அளவு | பயிரிடப்பட்டுள்ள ஏக்கர் அளவு |
|---|---|---|---|---|
| 01. | எழுவன்குளம் விதைத் தோட்டம் | புத்தளம் | 616 | 245 |
| 02. | விளச்சிய விதைத் தோட்டம் | அநுராதபுரம் | 25 | 17 |
| 03. | சுதுவத்துர விதைத் தோட்டம் | மொனராகலை | 45 | 45 |
| 04. | மஹஓயா விதைத் தோட்டம் | அம்பாறை | 81 | 80 |
| 05. | நாலந்தா விதைத் தோட்டம் | மாத்தளை | 135 | 50 |
| | **மொத்தம்** | | **902** | **437** |

## 2.9 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான விதைத் தோட்டங்கள்

**அட்டவணை 2.9 : மத்திய நாற்றுமேடையின் அமைந்துள்ள காணிகள் ஏக்கர்களில்**

| தொடர் இல. | மத்திய நாற்றுமேடையின் பெயர் | உள்ளடங்கும் மாவட்டங்கள் | ஏக்கர் | செடி உற்பத்திக் கொள்ளளவு (செடிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 01. | மிகிந்தலை நாற்றுமேடை | அநுராதபுரம் /வவுனியா/ கிளிநொச்சி/முல்லைத்தீவு/ மன்னார் | 2.5 | 160,000 |
| 02. | தம்புளை நாற்றுமேடை | மாத்தளை/ பொலன்னறுவை | 3.0 | 50,000 |

| தொடர் இல. | மத்திய நாற்றுமேடையின் பெயர் | உள்ளடங்கும் மாவட்டங்கள் | ஏக்கர் | செடி உற்பத்திக் கொள்ளளவு (செடிகளின் எண்ணிக்கை) |
|---|---|---|---|---|
| 03. | கமன்தலுவ நாற்றுமேடை | புத்தளம்/ குருநாகல் | 3.0 | 240,000 |
| 04. | ஹாதி நாற்றுமேடை | மட்டக்களப்பு/ திருகோணமலை | 1.0 | 40,000 |
| 05. | கும்புக்கன நாற்றுமேடை | மொனராகலை | 3.0 | 150,000 |
| 06. | மகியங்கனை நாற்றுமேடை | பதுளை/ கண்டி | 1.5 | 60,000 |
| 07. | சாந்திரிக்கா வாவி நாற்றுமேடை | ஹம்பாந்தோட்டை /இரத்தினபுரி | 1.0 | 60,000 |
| 08. | மங்கலகம நாற்றுமேடை | அம்பாறை | 0.25 | 15,000 |
| **மொத்தம்** | | | **15.25** | **775,000** |

## 2.10 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான பதனிடல் நிலையங்கள்

**அட்டவணை 2.10 : பதனிடல் நிலையங்கள்**

| தொடர் இல. | பதனிடல் நிலையம் | மாவட்டம் |
|---|---|---|
| 01. | நெந்தகமுவ பதனிடல் நிலையம் | கம்பஹா |
| 02. | புத்தளம் பதனிடல் நிலையம் | புத்தளம் |

## 2.11 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஆராய்ச்சி அலகுகள்

**அட்டவணை 2.11 : ஆராய்ச்சி அலகுகள்**

| தொடர் இல. | ஆராய்ச்சி அலகு | மாவட்டம் |
|---|---|---|
| 01. | கமன்தலுவ ஆராய்ச்சி அலகு | புத்தளம் |
| 02. | புத்தளம் ஆராய்ச்சி அலகு | புத்தளம் |

## 2.12 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பிரதான கூட்டு ஆராய்ச்சி ஒத்துழைப்பு

இலங்கை வடமேல் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் வருடாந்தம் அமுல்படுத்தப்படுகின்றன.

## 2.13 இலங்கை மரமுந்தகக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள்

**அட்டவணை 2.13 : இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள்**

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 01. | ராஜகிரிய மரமுந்திரிகை விற்பனை நிலையம், இல. 1334, பழைய கோட்டே வீதி, இராஜகிறிய | கொழும்பு |
| 02. | கொல்லுப்பிட்டி விற்பனை நிலையம், இல. 518, காலி வீதி, கொழும்பு 03 | கொழும்பு |
| 03. | நாராஹேன்பிட்ட மரமுந்திரிகை விற்பனை நிலையம், அரச வர்த்தகக் கூட்டுத்தாபனக் கட்டிடம் | கொழும்பு |
| 04. | பலாங்கொட மரமுந்திரிகை விற்பனை நிலையம், 122 D, பான்ஸ் ரத்வத்த மாவத்தை, பலாங்கொடை | இரத்தினபுரி |
| 05. | இரத்தினபுரி மரமுந்திரிகை விற்பனை நிலையம், இலக்கம் 32, பிரதான வீதி, இரத்தினபுரி | இரத்தினபுரி |

## 2.14 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள்

**அட்டவணை 2.14 : உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள்**

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 01. | ஆனந்த புட் சிட்டி இல. 272, அங்குரவாதொட்ட வீதி, ஹொரனை | களுத்துறை |
| 02. | சுனிலா குரொசரி, இல. 35, புதிய வீதி, அம்பலாங்கொடை | காலி |
| 03. | கோல்டன் மேட், 144, காலி வீதி, அஹுங்கம | காலி |
| 04. | ருகுனு ரசார, விவசாயத் திணைக்களம், லபுதுரவ, காலி | காலி |
| 05. | சம்பத் பாமசி என்ட் குரொசரி, இல. 39 E, மாத்தறை வீதி, அகுரஸ்ஸ | மாத்தறை |
| 06. | ருகுனு ரசார, விவசாயத் திணைக்களம், மாத்தறை | மாத்தறை |
| 07. | அபேகுணவர்த்தன ஸ்ரோர்ஸ், தெனியாய | மாத்தறை |
| 08. | வரை. யட்டிநுவர கங்கபளாத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பொல்கஹுமுல சந்தி, பேராதனை | கண்டி |
| 09. | வரை. யட்டிநுவர மெத்த பளாத பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், எம்பில்மீகம, பிலிமதலாவ | கண்டி |
| 10. | வரை. மத்திய மாகாண கூட்டுறவுச் சங்கம், எஹெலபொல குமாரிஹாமி மாவத்தை, போகம்பர, கண்டி | கண்டி |
| 11. | வரை. பூஜாபிட்டிய கூட்டுறவுச் சங்கம், பூஜாபிட்டிய | கண்டி |

| தொடர் இல. | கூட்டுத்தாபனத்தின் உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்கள் | மாவட்டம் |
|---|---|---|
| 12. | வரை. கண்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கோப்சிட்டி விற்பனை நிலையம், பல்லேகெலே | கண்டி |
| 13. | கோப் சிட்டி, குண்டசாலை | கண்டி |
| 14. | செப்கோ சுப்பர், போகம்பர | கண்டி |
| 15. | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கண்டி | கண்டி |
| 16. | Royal Mall (Pvt) Ltd, கண்டி | கண்டி |
| 17. | Sunrise Super, குண்டசாலை | கண்டி |
| 18. | EPPCO Mini Mart, பிரதான வீதி, மாவனெல்ல | கேகாலை |
| 19. | பிரஷ் பார்ம் சொப், காலி வீதி, ஹிக்கடுவ | காலி |
| 20. | தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை, மெல்சிறிபுர | குருநாகல் |

## 2.15 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதிகள்

| சுற்றுலா விடுதி | மாவட்டம் |
|---|---|
| 1. புத்தளம் சுற்றுலா விடுதி | - புத்தளம் |
| 2. ஹாதி சுற்றுலா விடுதி | - மட்டக்களப்பு |

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான கொண்டச்சி தோட்டத்தில் சுற்றுலா விடுதியொன்று தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

## 2.16 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பதவியணி

**அட்டவணை 2.16 : இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பதவியணி - 2023**

| சம்பளக் குறியீடு | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2023 ஆம் ஆண்டில் உள்ள பதவியணி எண்ணிக்கை | | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | ஒப்பந்தம் | |
| HM 1-3 | பொது முகாமையாளர் | 01 | - | - | 01 |
| HM 1-1 | பிரதிப் பொது முகாமையாளர் | 01 | 01 | - | - |
| MM 1-1 | உதவிப் பொது முகாமையாளர் - நிதி | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - வியாபித்தல் மற்றும் ஆராய்ச்சி | 01 | 01 | - | |
| | உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - சந்தைப்படுத்தல் மற்றும் பதனிடல் | 01 | 01 | - | - |

| சம்பளக் குறியீடு | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | 2023 ஆம் ஆண்டில் உள்ள பதவியணி எண்ணிக்கை | | வெற்றிடம் |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தரம் | ஒப்பந்தம் | |
| | உதவிப் பொது முகாமையாளர் - பெருந்தோட்டம் | 01 | 01 | - | - |
| | உதவிப் பொது முகாமையாளர் - மனிதவளம் மற்றும் நிருவாகம் | 01 | - | - | 01 |
| | உதவிப் பொது முகாமையாளர் - கொள்கை மற்றும் திட்டமிடல் | 01 | - | - | 01 |
| JM 1-1 | பிராந்திய முகாமையாளர் / உதவிப் பிராந்திய முகாமையாளர் | 11 | 08 | 01 | 02 |
| | சிரேஷ்ட ஆராய்ச்சி அலுவலர் /ஆராய்ச்சி அலுவலர் | 02 | 01 | - | 01 |
| | பெருந்தோட்ட அலுவலர் | 01 | - | - | 01 |
| | வியாபித்தல் அலுவலர் | 01 | - | - | 01 |
| | தோட்ட அத்தியட்சகர் | 04 | 04 | - | - |
| | தரச்சான்றுப்படுத்தல் அலுவலர் | 02 | - | - | 02 |
| | நிருவாக அலுவலர் | 01 | 01 | - | - |
| | நிதி அலுவலர் | 01 | 01 | - | - |
| | சந்தைப்படுத்தல் மேம்பாட்டு அலுவலர் | 01 | 01 | - | - |
| | உள்ளகக் கணக்காய்வு அலுவலர் | 01 | - | - | 01 |
| | திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலர் | 01 | - | - | 01 |
| MA - 4 | மொழிபெயர்ப்பாளர் | 01 | - | - | 01 |
| MA 2-1 | பெருந்தோட்ட உதவியாளர் | 37 | 15 | 01 | 21 |
| | தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | - | - |
| | கணக்காய்வு உதவியாளர் | 02 | 02 | - | - |
| | நிதி உதவியாளர் | 01 | 01 | - | - |
| | போக்குவரத்து உதவியாளர் | 01 | 01 | - | - |
| MA 1-1 | முகாமைத்துவ உதவியாளர் | 57 | 40 | 05 | 12 |
| | வெளிக்கள உதவியாளர் | 22 | 08 | - | 14 |
| PL - 3 | சாரதி | 26 | 21 | 02 | 03 |
| | போயிலர் இயந்திர இயக்குனர் | 02 | - | - | 02 |
| PL - 2 | தொழிலாளர் நிருவாக அலுவலர் | 07 | 08 | - | - |
| | சுற்றுலா விடுதிப் பொறுப்பாளர் | 03 | - | - | 03 |
| PL - 1 | அலுவலக சிற்றூழியர் | 16 | 14 | 05 | - |
| | காவலாளி | 11 | 06 | 03 | 02 |
| | வாகன உதவியாளர் | 02 | 02 | - | - |
| | | 224 | 141 | **17** | **70** |

- சேவைசார் அவசியத்தன்மையின் பேரில் மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்களுக்கு அமைய தொழில் நிருவாக அலுவலர் 01 மற்றும் அலுவலக சிற்றூழியர் பதவிகள் 03 என்ற வகையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மேலதிகமாக மிகையாக ஊழியர்கள் சேவையாற்றி வருகின்றார்கள்.

## 2.17 இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிறுவன ஒழுங்கமைப்பு



# 3. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகள்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் பிரதானமாக 9 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றது.

01. பயிர்செய்கைப் பொருட்களை உற்பத்தி செய்தல் (நிவாரண உதவிக் கருத்திட்டங்களுக்கு)
02. மரமுந்திரிகை நிவாரண உதவித்திட்டம்.
03. பெருந்தோட்ட முகாமைத்துவம்
04. வணிக நடவடிக்கைகள், தோட்டக்களில் பயிர்செய்கைக்கு மற்றும் வேறு கருத்திட்டங்களுக்கு மரமுந்திரிகை கன்றுகளை உற்பத்தி செய்தல்.
05. நிலத்தின் விளைதிறனை மேம்படுத்தல்.
06. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.
07. மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி
08. மனித வள முகாமைத்துவம்
09. விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்தல்.

## 3.1 பயிர்செய்கைப் பொருட்களை உற்பத்தி செய்தல் (நிவாரண உதவிக் கருத்திட்டங்களுக்கு)

கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற கமன்தலுவ, மிகிந்தலை, ஹாடி, தம்புளை, கும்புக்கன, சந்திரிக்கா வாவி, மஹியங்கனை மற்றும் மங்கலகம ஆகிய மத்திய நாற்றுமேடைகளில் பயிர்செய்கை பொருட்கள் அதாவது மரமுந்திரிகை செடி உற்பத்தி செய்யப்படுவதுடன், நல்ல உற்பத்தி முறையியல்களின் (GAP) கீழ் உயர்தர உற்பத்தி நிலைமைகளைப் பேணி குறித்த மரமுந்திரிகைச் செடிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்ற மரமுந்திரிகை கன்றுகள் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற மரமுந்திரிகை நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 20 மாவட்டங்களை உள்ளடக்கியதாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் இந்த நாற்றுமேடைகளில் ஒட்டு மரமுந்திரிகை செடிகள் 93,560 உற்பத்தி செய்யப்பட்டு மரமுந்திரிகை நிவாரண உதவிக் கருத்திட்டத்தின் கீழ் முறையானவாறு தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்பட்டன.

## 3.2 மரமுந்திரிகை நிவாரண உதவித்திட்டம்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் மரமுந்திரிகை பயிர்செய்கையை மேம்படுத்தும் நோக்கத்துடன் இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், இக்கருத்திட்டத்திற்கு திறைசேரியினால் வருடாந்தம் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படுகின்றன.

இக்கருத்திட்டத்தின் கீழ் 20 மாவட்டங்களை உள்ளடக்கியதாக மரமுந்திரிகை பயிர்செய்கைக்கு பொருத்தமான காணிகள் உள்ள விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு தமது பயிர்செய்கைகளை மேற்கொள்ளத் தேவையான தொழில்நுட்ப அறிவு, நுட்ப முறைகள் பற்றிய பயிற்சி வழங்கப்பட்டு பயிர்செய்கைகளை மேற்கொள்ளத் தேவையான மரமுந்திரிகை செடிகளும் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

**அட்டவணை 3.2 : 2023 ஆம் ஆண்டில் நிவாரண உதவி மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப் பகுதியின் அளவு**

| | மாவட்டம் | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) |
| 1 | புத்தளம் | 104 | 25 | 1 | - |
| 2 | குருநாகல் | 61.3 | - | 3.7 | - |
| 3 | கேகாலை | 2.5 | - | 2.5 | - |
| 4 | கம்பஹா | 49.43 | - | - | - |
| 5 | அநுராதபுரம் | 118 | - | 32 | - |
| 6 | வவுனியா | 40 | - | - | - |
| 7 | மன்னார் | 10 | 1 | - | - |
| 8 | முல்லைத்தீவு | 20 | 22.5 | - | - |
| 9 | யாழ்ப்பாணம் | 10 | - | - | - |
| 10 | கிளிநொச்சி | 30 | 5 | - | - |
| 11 | மோனராகலை | 96.74 | - | 25 | - |
| 12 | மாத்தளை | 45 | - | 30 | 33.25 |
| 13 | அம்பாறை | 50 | 75 | 25 | - |
| 14 | பொலன்னறுவை | - | 122.5 | - | - |
| 15 | பதுளை | 50 | - | 55 | - |

| | மாவட்டம் | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை | |
|---|---|---|---|---|---|
| | | | | ஒட்டு மரமுந்திரிகை (ஏக்கர்) | விதை மரமுந்திரிகை (ஏக்கர்) |
| 16 | அம்பாந்தோட்டை | 118 | - | - | - |
| 17 | இரத்தினபுரி | 15 | 10 | 20 | 5 |
| 18 | மட்டக்களப்பு | 75 | 50 | 25 | - |
| 19 | திருகோணமலை | 50 | - | 40 | - |
| 20 | கண்டி | - | - | 20 | - |
| **மொத்தம்** | | **945** | **311** | **279.2** | **38.25** |

இந்த ஆண்டில் ஒட்டு மரமுந்திரிகை ஏக்கர் 945 மற்றும் விதை மரமுந்திரிகை ஏக்கர் 311 பயிர்செய்யப்பட்டதுடன், இந்த நிவாரண உதவித்திட்டத்தினால் வீட்டுப் பயிர்செய்கையின் கீழ் 317.45 ஏக்கர்களுக்கு மரமுந்திரிகை கன்றுகள் வழங்கப்பட்டன. மேலும் இக்கருத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிக் குடும்பங்கள் 3,036 இற்கு பயிற்சியும் வழங்கப்பட்டது.

## 3.3 பெருந்தோட்ட முகாமைத்துவம்

### 3.3.1 விதைப் பூங்கா அபிவிருத்தி

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 06 விதைப் பூங்காக்கள் காணப்படுகின்றன. அவை சுதுவத்துர ஆர, கொண்டச்சி, திரியாய, எழுவங்குளம் 11, புத்தளம் மற்றும் மான்கேணி கட்டம் 11 ஆகியனவாகும்.

இவ்வாறு விதை பூங்காவில் ஒட்டு செடிகள் உற்பத்திக்குத் தேவையான கொழுந்துகளை சேகரித்தல் மற்றும் தாய் விதைகள் தெரிவு செய்யப்படும். தாய் விதைகளை பயன்படுத்திக் கொண்டு ஒட்டுவதற்குத் தேவையான செடி உற்பத்தி செய்யப்படுவதுடன், தாய் செடிகளிலிருந்து பொருத்தமான கொழுந்துகளை பெற்றுக் கொண்டு அவை ஒட்டு போடப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு கூட்டுத்தாபன விதைப் பூங்காவில் ஒட்டு இடுவதற்குத் தேவையான கொழுந்துகள் 231,250 சேகரிக்கப்பட்டுள்ளதுடன், தாய் விதைகள் 289,062 தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் கூட்டுத்தாபன விதைப் பூங்காக்களில் 1,115 ஏக்கர்கள் பராமரிப்பு செய்தல் மற்றும் மீளத்தாபித்தல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு மேலதிமாக இந்த ஆண்டில் எழுவங்குளம் கட்டம் 11 இல் 40 ஏக்கர்களில் புதிய பயிர்செய்கையை மேற்கொள்ளத் தேவையான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## 3.3.2 கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான தோட்டங்களைப் பராமரிப்புச் செய்தல்.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தோட்டப் பிரிவினால் 2023 ஆம் ஆண்டில் பிரதான 13 தோட்டங்கள் பேணிவரப்பட்டன. இத்தோட்டங்களை பராமரிப்புச் செய்வதன் மூலம் உள்ளூர் நுகர்வுக்கு தரமான உயர்மட்ட மரமுந்திரிகை பருப்பு உற்பத்தி செய்யத் தேவையான தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் வருடாந்தம் பெற்றுக் கொள்வது மேற்கொள்ளப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் இந்தத் தோட்டங்களில் 3,178 ஏக்கர் அளவு பூரணமாக பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி ஒவ்வொரு தோட்டங்களிலும் பராமரிப்புச் செய்யப்பட்ட ஏக்கர்களின் அளவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.2 : 2023 ஆம் ஆண்டில் நிவாரண உதவி மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலப் பகுதியின் அளவ**

| | தோட்டத்தின் பெயர் | பராமரிப்புச் செய்யப்பட்ட ஏக்கர் அளவு |
|---|---|---|
| 1 | விளச்சிய | 25 |
| 2 | எழுவன்குளம் | 210 |
| 3 | மஹஓயா | 45 |
| 4 | நாலந்தா | 50 |
| 5 | ஹாடி | 190 |
| 6 | வெல்லன்குள் | 200 |
| 7 | புத்தளம் | 761 |
| 8 | திரியாய | 10 |
| 9 | கொண்டச்சி | 475 |
| 10 | பூநகரி | 479 |
| 11 | சுதுவத்துர ஆர | 45 |
| 12 | கமன்தலுவ | 548 |
| 13 | மாங்கேணி I | 140 |
| **மொத்தம்** | | **3,178** |

உள்ளூர் நுகர்வுக்குத் தேவையான மரமுந்திரிகை பருப்பு உற்பத்தி செய்வதற்காக 2023 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத் தோட்டங்களிலிரந்த பெற்றுக் கொள்ளப்பட்ட தோலுடனான மரமுந்திரிகை மெ.தொ. 85.06 (களஞ்சிய நிறை) அளவு பதனிடல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

மேலும், கூட்டுத்தாபனத் தோட்டங்களில் தென்னைப் பயிர்செய்கையும் மேற்கொள்ளப்படுவதுடன், இந்த ஆண்டில் 57,425 தேங்காய்கள் விளைச்சலாகப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

## 3.4 மரமுந்திரிகை செடி உற்பத்தி (நாற்றுமேடை முகாமைத்துவம்)

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 08 மத்திய நாற்றுமெடைகள் காணப்படுவதுடன், குறித்த மத்திய நாற்று மேடைகளில் வணிக நடவடிக்கைகள் மற்றும் விசேட கருத்திட்டங்களுக்கான மரமுந்திரிகை கன்று உற்பத்தி செய்யப்படுவதுடன், 2023 ஆம் ஆண்டில் உயர் தரத்தைக் கொண்ட கூடுதல் விளைச்சல் தரும் புதிய வகைகளை உள்ளடக்கிய 171,400 ஒட்டுக் கன்றுகள் வெற்றிகரமாக உற்பத்தி செய்யப்பட்டன.

குறித்த மத்திய நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற ஒட்டுச் செடிகள் கூட்டுத்தாபன தோட்டங்களுக்கு. வணிக நடவடிக்கைகளுக்கு, நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தனியார் தோட்ட உரிமையாளர்களுக்கு மற்றும் அரச அனுசரணையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற வேறு விசேட கருத்திட்டங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன.

## 3.5 நிலத்தின் விளைதிறனை மேம்படுத்தல்

மரமுந்திரிகை பயிர்செய்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் நோய்கள், கிறுமிகளை அழிப்பதற்காக பயன்படுத்திக் கொள்ளக்கூடிய சரியான விவசாய முறைகளைப் பயன்படுத்தி விளைதிறனை அதிகரிப்பதற்கு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஆராய்ச்சிப் பிரிவு ஊடாக பல்வேறு ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த அண்டில் தோட்டங்களில் மரமுந்திரிகை பயிர்செய்கையில் தாக்கதை ஏற்படுத்தும் கிறுமிகள் மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக 3,604 ஏக்கர் பிரதேசத்திற்கு கிறுமிநாசினிகள் இடப்பட்டன. இதற்காக எசடமைட்பிரிட் 20% (Mospilan 100g) 120.4 kg இரசாயனப் பதார்த்தம் பயன்படுத்தப்பட்டது.

மேலும் மேலதிக வருமானத்தை உழைக்கும் நோக்கத்துடன் கூட்டுத்தாபனத் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் தென்னைப் பயிர்செய்கையின் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கத்துடன் விளைச்சல் தரும், விளைச்சல் தராத பயிர்செய்கைகளை இனங்கண்டு அவற்றுக்கு உரம் இடுவதற்கும் இந்த ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## 3.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் 02 ஆராய்ச்சிப் பிரிவுகள் காணப்படுகின்றன. புத்தளம் மற்றும் கமன்தலுவ பகுதியில் அவை தாபிக்கப்பட்டுள்ளன. மரமுந்திரிகை பயிர்செய்கையின் தரம் மற்றும் விளைச்சலை அதிகரிப்பதற்கான நிலைபேறான மற்றும் வினைத்திறன்மிக்க முறையியல்களின் நவீனமயப்படுத்தல்களை மேற்கொள்ளல் மற்றும் மரமுந்திரிகை செய்கைக்குத் தேவையான நவீன தொழில்நுட்ப முறைகளை மேம்படுத்துவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வது ஆராய்ச்சிப் பிரிவின் முக்கிய செயற்பணியாகும் என்பதுடன், இதற்கு மேலதிகமாக பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

01. மரமுந்திரிகை செய்கைகளின் தரம் மற்றும் அறுவடையை அதிகரித்தல்.
02. நிலைபேறான மற்றும் வினைத்திறன்மிக்க மரமுந்திரிகை பயிர்செய்கை முறைகளை அபிவிருத்தி செய்தல்.
03. உயர் விளைச்சலைக் கொண்ட நவீன மரமுந்திரிகை வகைகளை இனங்காண்பதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
04. மரமுந்திரிகை பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் மற்றும் மரமுந்திரிகை சார்ந்த உற்பத்திகளை நவீனமயப்படுத்தல்.
05. மரமுந்திரிகை பயிர்செய்கையில் தாக்கத்த ஏற்படுத்தும் கிறுமிகள் மற்றும் நோய்களுக்கு எதிராக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
06. மரமுந்திரிகை பயிர்செய்கைக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை மேம்படுத்தல்.
07. ஆராய்ச்சிப் பெறுபேறுகளை விவசாயிகள் மற்றும் உரிய தரப்பினர்களுக்கு சாட்டுதல் செய்தல் போன்ற ஆராய்ச்சிப் பணிகள் ஆராய்ச்சிப் பிரிவினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை வடமேல் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுவதுடன், 2023 ஆம் ஆண்டில் 07 ஆராய்ச்சி வகுதிகளின் கீழ் புத்தளம் ஆராய்ச்சிப் பிரிவில் 05 ஆராய்ச்சிகளும், கமன்தலுவ ஆராய்ச்சிப் பிரிவில் 08 ஆராய்ச்சிகளும் அமுல்படுத்தப்பட்டன. மேற்படி ஆராய்ச்சிகளின் காலஎல்லைகள் பின்வருமாறாகும்.

அட்டவணை 3.6 : 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள்

| | ஆராய்ச்சிப் பிரிவு | ஆராய்ச்சி | ஆராய்ச்சிக் காலஎல்லை |
|---|---|---|---|
| 01 | Puttalam Research Unit. | Promising one new superior cashew variety for commercial Planting. | 2016-2024 |
| 02 | | Germplasm conservation Mutative District. | 2016-2030 |
| 03 | | Germplasm conservation (Mannar District, Mulative District & Western Province). | 2014-2030 |
| 04 | | Effect of five difference spaces on cashew Plants. | 2012-2024 |
| 05 | | Evolution of the effectiveness of chemical insecticides in controlling cashew stem and root border under field conditions. | 2023 |
| 06 | Kamandaluwa Research Unit. | Promising superior cashew variety for commercial planting. | 2015-2030 |
| 07 | | Effect of five deference spaces on cashew. | 2015-2030 |
| 08 | | Bud Wood nursery on cashew 1. | 2014-2030 |
| 09 | | Bud Wood nursery on cashew 2. | 2017-2033 |
| 10 | | Living performance of patch bud demonstration 1 | 2017-2033 |
| 11 | | Living performance of patch bud demonstration 2. | 2006-2030 |
| 12 | | Distinguish the overall performance of cashew. | 2017-2033 |
| 13 | | To see the adult varietal ratio cashew. | 2017-2033 |

## 3.7 மரமுந்திரிகை பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் இரண்டு பதனிடல் நிலையங்கள் காணப்படுகின்றன. அவை நெதகமுவ மற்றும் புத்தளம் பகுதிகளில் உள்ளன. இந்த பதனிடல் நிலையங்களில் உள்ளூர் நுகர்வுக்குத் தேவையான மரமுந்திரிகை உற்பத்தி செய்யப்படுகின்றது. கூட்டுத்தாபனத் தோட்டங்களிலிருந்து கிடைக்கின்ற விளைச்சல் பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுவதுடன், உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகை சந்தையில் விநியோகிக்கப்படுகின்றது.

உயர் தரத்தைக் கொண்ட மரமுந்திரிகை பருப்பு உற்பத்திகளை சந்தையில் வழங்குவதன் மூலம் கூடுதல் விலையை உழைத்துக் கொள்வதற்காக மற்றும்

இன்று காணப்படுகின்ற சந்தையின் போட்டித்தன்மைக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பதற்கு உயர்மட்ட உற்பத்தி இயந்திரமொன்று அவசியமாக உள்ளது.

இப்பணிகளுக்கு மேலதிகமாக மரமுந்திரிகை உற்பத்திகளை பதனிடல் நடவடிக்கைகள் தொடர்பாக ஊக்கம் கொண்டுள்ள சகல தரப்பினர்களுக்கும் அவர்களின் தேவைகளை இனங்கண்டு அத்தேவைகளை தரமாகவும், உயர் விளைச்சல் மிக்கதாகவும் நிறைவேற்றுவதற்குத் தேவையான பயிற்சி மற்றும் அதற்குத் தேவையான வசதிகளை செய்துகொடுப்பதும் இப்பதனிடல் நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டு தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தோலுடனான மரமுந்திரிகை மெ.தொ. 169.35 புத்தளம் மற்றும் நெதகமுவ ஆகிய பதனிடல் நிலையங்களில் பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதுடன், மரமுந்திரிகை பருப்பு மெ.தொ. 42.09 உற்பத்தி செய்யப்பட்டதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்பு மெ.தொ. 33.72 ஐ விற்பனை செய்து ரூ.மி. 167.82 ஆன வருமானமும் உழைத்துக் கொள்ளப்பட்டது.

அவ்வாறே சந்தையின் போட்டித்தன்மைக்கு முகம்கொடுத்தல் மற்றும் செலவினத்தை குறைக்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டில் தோலுடனான மரமுந்திரிகை மெ.தொ. 99.64 கொள்வனவு செய்யப்பட்டது. இதன் காரணமாக போட்டித்தன்மைமிக்க சந்தைவாய்ப்பும் தாபிக்கப்பட்டது.

### 3.7.1 உள்நாட்டு நுகர்வுக்காக தோலுடனான மரமுந்திரிகை இறக்குமதி மற்றும் மரமுந்திரிகை இறக்குமதி

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற மரமுந்திரிகை போதியளவில் இல்லாமை காரணமாக சிறியளவிலான மரமுந்திரிகை பதனிடுபவர்களுக்குத் தேவையான தோலுடனான மரமுந்திரிகை உள்நாட்டுச் சந்தையில் பற்றாக்குறை ஏற்படுவதன் காரணமாக இதற்குத் தீர்வாக சிறியளவிலான மரமுந்திரிகை பதனிடுபவர்களுக்கு வரிச் சலுகையின்கீழ் தோலுடனான மரமுந்திரிகையை இறக்குமதி செய்ய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது.

இந்த இறக்குமதி அனுமதிப் பத்திரம் தற்காலிக அடிப்படையில் உள்நாட்டு உற்பத்திச் சந்தையில் பற்றாக்குறை காலப்பகுதியில் மாத்திரம் வழங்கப்பட்டது. இலங்கை சுங்கத்தின் அறிக்கைகளுக்கு அமைய தோலுடனான மரமுந்திரிகை மெற்றிக்தொன் 47.66 இறக்குமதி செய்யப்பட்டு சிறியளவிலான உற்பத்தியாளர்கள் மற்றும் பதனிடுபவர்களுக்கு மத்தியில் விநியோகிக்கப்பட்டது.

இதற்கமைய மரமுந்திரிகை பதனிடுதல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக மட்டத்தை மேம்படுத்துவற்கும் கூட்டுத்தாபனத்துக்குத் தலையிட வாய்ப்புக் கிடைத்தது.

## 3.8 மனிதவள முகாமைத்துவம்

நிறுவனமொன்றில் மனிதவளங்களாக விளைத்திறன்மிக்க உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய ஊழியர்களுக்கு உள்ள சக்தி, அறிவு, திறமை மற்றும் அனுபவங்களைக் குறிப்பிட முடியும். இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற ஏனைய அலுவலகங்களை ஒருங்கிணைப்புச் செய்து கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான மனித வளங்களை அபிவிருத்தி செய்தல், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மற்றும் மேம்படுத்தி மனிதவளத்தின் விளைதிறனை உச்சளவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.8.1 மனிதவள அபிவிருத்திக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பங்களிப்பு

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் ஊழியர்களின் பணிசார் விளைதிறனை மேம்படுத்தல், அவர்களின் விடய ரீதியான அறிவை இற்றைப்படுத்தல், புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பளிப்பதுடன், சுய ஊக்கம் மூலம் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும். இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை தொடர்ச்சியாக அடுத்துவரும் ஆண்டுகளிலும் நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஊழியர்களின விளைதிறன், விடயரீதியான அறிவு, வினைத்திறனை மேம்படுத்துவதன் மூலம் மரமுந்திரிகை விளைச்சலை அதிகரித்தல், மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழில் மற்றும் தோட்டங்களில் விளைதிறனை மேம்படுத்தல், மரமுந்திரிகை ஏற்றுமதியை ஊக்குவித்தல், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தை மரமுந்திரிகை உற்பத்தியின் முன்னோடியாக்குதல் மற்றும் தன்னிறைவடைந்த அரச கூட்டுத்தாபனமான மாற்றுதல் போன்ற குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் பெரும் பங்களிப்பை வழங்குகின்றன.

இந்த ஆண்டில் பதவியணியினரின் தொழில்சார் திறமைகள் மற்றும் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன், Narahenpita Institute of Personal Management நிறுவனத்தில் நடாத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வு நடைமுறை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் உதவிப் பொது முகாமையாளர் - உள்ளகக் கணக்காய்வு அலுவலர் பங்கேற்றார்.

கனிஷ்ட முகாமைத்துவ தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு வினைத்திறன்காண் தடைப் பரீட்சை இந்த ஆண்டில் நடாத்தப்பட்டது. மேலும் இந்த ஆண்டில் ஒட்டுமொத்த ஊழியர்களினதும் மனப்பாங்கு மற்றும் திறன் அபிவிருத்திக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றும் நடாத்தப்பட்டது.

## 3.9 வேறு கருத்திட்டங்கள்

### 3.9.1 ஏற்றுமதிக் கிராமம் கருத்திட்டம்

கூட்டுத்தாபனத்தினர் மரமுந்திரிகை ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு இக்கருத்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன், முழு நாட்டையும் உள்ளடக்கியதாக 11 மாவட்டங்களை மையமாகக் கொண்டு ஒட்டு மரமுந்திரிகை கன்றுகளை விநியொகிப்பது இடம்பெறுவதுடன், 25 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியதாக கூட்டுத்தாபனத்தின் வணிக நாற்று மேடைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற உயர் தரத்தைக் கொண்ட ஒட்டுக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டில் இக்கருத்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மரமுந்திரிகை கன்றுகளின் எண்ணிக்கை பற்றிய விபரம் பின்வருமாறாகும்.

**அட்டவணை 3.9.1 : 2023 ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தின் கீழ் விநியொகிக்கப்பட்ட செடிகளின் எண்ணிக்கை**

| | மாவட்டம் | விநியோகிக்கப்பட்ட செடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | அம்பாந்தோட்டை | 4,900 |
| 02 | மட்டக்களப்பு | 7,000 |
| 03 | வவுனியா | 4,410 |
| 04 | கிளிநொச்சி | 2,800 |
| 05 | முல்லைத்தீவு | 6,370 |
| 06 | மன்னார் | 700 |
| 07 | யாழ்ப்பாணம் | 700 |
| 08 | மோனராகலை | 13,793 |
| 09 | பொலன்னறுவை | 4,059 |
| 10 | கம்பஹா | 2,000 |
| 11 | குருநாகல் | 23,000 |
| **மொத்தம்** | | 69,732 |

# 4. நிருவாக நடவடிக்கைகள்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் அரச வியாபார நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டுள்ளதனால், உள்நாட்டு நுகர்வுக்குத் தேவையான தரமான உயர் மரமுந்திரியை உற்பத்தி செய்வதற்கு மேலதிமாக 20 மாவட்டங்களில் பரந்துள்ள மரமுந்திரிகை பயிர்செய்கையை மேற்கொள்ளும் பயிர்செய்கையாளர்களுக்கு தமது பயிர்செய்கைகளை வெற்றிகரமாக மேற்கொள்ளத் தேவையான வழிகாட்டல் மற்றும் தேவையான ஆலொசனைகளை வழங்கிவருகின்றது. மேலும், கூட்டுத்தாபனம் இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, புதிய மரமுந்திரிகை வகைகளை அறிமுகம் செய்து, அவ்வகைகளின் கீழ் மரமுந்திரிகை செடிகளை உற்பத்தி செய்து வருடாந்தம் அமுல்படுத்தும் விஸ்தரித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு தமது மரமுந்திரிகை பயிர்செய்கைகளை மேற்கொள்ளத் தேவையான செடிகளை இலவசமாக பெற்றுக்கொடுக்கின்றது.

மேலும், மரமுந்திரிகை பதனிடும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் தேவையை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் ஏனைய வசதிகளைச் செய்துகொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், மரமுந்திரிகை உற்பத்திகளை கொள்வனவு செய்யும் தரப்பினர்களுக்கு தரமான மற்றும் வினைத்திறன்மிக்க சேவை ஆற்றப்படுவதுடன், அவர்களுக்கு பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகளை சந்தைப்படுத்துவதன் மூலம் இலாபம் உழைப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது.

இப்பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்வதற்காக இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, பொது முகாமையாளர், பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக ஒட்டுமொத்த பதவியணியினரின் உதவியும் ஒத்துழைப்பும் வெகுவாகக் கிடைத்தது. அரசாங்கத்தின் புதிய அபிவிருத்தி உபாய முறைகளுக்கு இசைவாக மக்களின் வருமான உருவாக்கம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் இதற்கமைய செயற்பட இயலுமாயிற்று.

## 4.1 2023.12.31 ஆம் திகதிக்கு பதவியணி முகாமைத்துவம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் சிரேஷ்ட, மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை, ஆரம்ப மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவை மட்டங்களைச் சேர்ந்த ஊழியர்களினால் கடமை நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டு வருவதுடன், 2023 ஆம் ஆண்டில் 158 ஆகக் காணப்பட்ட பதவியணியினரால் கூட்டுத்தாபனத்தின்

இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வினைத்திறனும், விளைத்திறனும் மிக்க சேவையாற்றப்பட்டுள்ளது. மேற்படி பதவியணியினர் தலைமையலுவலகம் மற்றும் நாடளாவிய மற்றும் பிராந்திய அலுவலகங்களில் சேவையாற்றி வருகின்றார்கள்.

குறித்த பதவியணியினருக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள், பதனிடல் நிலையங்கள் மற்றும் ஏனைய அலுவலகங்களில் காடுகளை சுத்தம் செய்தல், குழி தோண்டல், கன்றுகளை நாட்டுதல், உரம் இடுதல், களையகற்றுதல், மரமுந்திரிகை விளைச்சலை சேகரித்தல், மரமுந்திரகைகளை வெட்டுதல், மரமுந்திரிகைகளை சுத்தம் செய்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கென நாளாந்த அடிப்படையில் சுமார் 220 தொழிலாளர்கள் சேவையாற்றி வருகின்றார்கள்.

**அட்டவணை 4.1 : 2023 ஆம் ஆண்டின் பல்வேறு சேவை மட்டங்களின் கீழ் சேவையாற்றிய பதவியிணியினர்**

| **சேவை மட்டம்** | **சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| சிரேஷ்ட | 06 |
| மூன்றாம் நிலை | 17 |
| இரண்டாம் நிலை | 74 |
| ஆரம்ப நிலை | 61 |
| **மொத்தம்** | **158** |

## 4.2 2023 ஆம் ஆண்டில் அடையப்பெற்ற வெற்றிகள்

- மரமுந்திரிகை மெ.தொ. 68.34 ஆன அளவு ஏற்றுமதி செய்யப்பட்டதன் மூலம் ரூ.மி. 311.08 ஆன வருமானம் இந்த ஆண்டில் உழைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டில் ஏற்றுமதி அளவும், வருமானமும் வளர்ச்சியடைந்துள்ளது.
- இந்த ஆண்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்பு விற்பனை அளவு மெ.தொ. 33.72 ஆகும் என்பதுடன், அதன் மூலம் ரூ.மி. 167.82 ஆன வருமானம் உழைக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதன் மூலமான வருமானம் அதிகரித்துள்ளது.
- இந்த ஆண்டில் மரமுந்திரிகை நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் பயனாளிகள் குடும்பங்கள் 1,000 இற்கு பயிற்சி வழங்க எதிர்பார்க்கப்பட்டதுடன், இந்த ஆண்டில் பயனாளிக் குடும்பங்கள் 3036 இற்கு பயிற்சி வழங்கப்பட்டதன் மூலம் 303% ஆன முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிகளுக்கு மேலதிகமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள சவால்கள் இந்த ஆண்டில் அபிவிருத்திப் பணிகளில் தடையாக அமைந்தன.

- சீரற்ற காலநிலை காரணமாக அதாவது, பூ பூக்கும் காலப்பகுதியில் அதிக வரட்சி ஏற்பட்டமையினால் பூக்கள் வெயில் காரணமாக பாதிக்கப்பட்டு தோட்டங்களில் விளைச்சல் எதிர்ப்பார்க்கப்பட்ட மட்டத்தை விட குறைவாக இருந்தமை.

- உள்நாட்டு தோலுடனான மரமுந்திரிகைக் கேள்விக்கு ஏற்றவாறு வழங்கல் பதிவு செய்யப்படாமை.

- தொழிலாளர்களின் செலவினங்கள் மற்றும் பொருட்களின் செலவினங்கள் அதிகரித்தமை.

- மீண்டெழும் மற்றும் மூலதன கொடைகள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக புதிய பணிகளை ஆரம்பிக்கும்போது மற்றும் அத்தியாவசியமான சேவைகளை நிறைவேற்றிக்கொள்ளும்போது தடைகள் ஏற்பட்டன. இதற்கமைய இந்தப் பணிகளை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு கூட்டுதாபனம் உழைத்துக்கொண்ட நிதியைப் பயன்படுத்திக்கொள்ளுவது இடம்பெற்றது. இதன் பெறுபேறாக வர்த்தக ரீதியான மற்றும் அபிவிருத்திப் பணிகளின் முதலீடுகளுக்கு நிதி பற்றாக்குறை ஏற்பட்டது.

## 5. பணிப்பாளர் சபை அறிக்கை

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுகளை இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன பணிப்பாளர் சபை சார்பாக இவ்வாறு சமர்ப்பிக்கின்றேன்.

திறைசேரியின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2003 யூன் மாதம் மாதம் 02ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் பீ.ஈ.டீ./12 இற்கு அமைய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள் 2024 அக்டோபர் 11 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

### 5.1 ஆரம்பம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, அரசாங்க விவசாயக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் இரண்டாம் பிரிவின் முதலாம் உட்பிரிவின்கீழ் 60/7ஆம் இலக்க, வர்த்தமானி அறிவித்தல் மூலம் 1973 மே 25 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தின் அங்கீகாரம் மற்றும் அப்போதைய பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரின் உத்தரவின் பேரின் ரூ.மி. 40 ஆன ஆரம்ப மூலதனத்துடன் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டது.

### 5.2 பெறுபேறு

நடப்பு ஆண்டில் நிதி பெறுபேறு மற்றும் உரிமையாண்மை மாற்றங்கள் சம்பந்தமான தரவுகள் உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 5.3 வியாபார மீளாய்வு

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டின் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைக் கூற்றுக்களில் நிதி நிலைமை கூற்றுக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அது பற்றிய மதிப்பீடு தவிசாளரின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 5.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

நிதிக் கூற்றுக்களில் நடைமுறை ஆண்டு தொடர்பான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறிப்பு இலக்கம் 7 இன் மூலம்

விளக்கப்பட்டுள்ளன. இந்த குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பெறுமதிகள் மற்றும் அவற்றின் தற்போதைய சந்தைப் பெறுமதிகளுக்கு இடையே போதியளவிலான குறிப்பிடத்தக்களவான வித்தியாசம் காணப்படுவதில்லை.

## 5.5 ஒதுக்கம்

உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்றில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த ஒதுக்கங்களின் ஒழுங்கமைப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 5.6 பணிப்பாளர் சபை

**அட்டவணை 5.6 : 2023 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | திரு டபிள்யு.எச்.எம். உதார விஜேசிங்க | தவிசாளர் |
| 02. | செலவி அசோகா லங்காதிலக | பிரதித் தவிசாளர் |
| 03. | திருமதி ஏ. யூ. கே. தொடம்வல | பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2023.02.24 திகதி வரை) |
| 04. | திருமதி சுஜந்தி மாயாதுன்னே | பணிப்பாளர் சபை உறுப்பினர் (பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் பிரதிநிதி) |
| 05. | செல்வி கே. ஏ. சீ. பிரியதர்சனி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி) (2023.03.30 திகதி முதல் 2023.09.05 திகதி வரை) |
| 06. | திருமதி ஏ.பீ.டி.டி. சந்துரங்கி | பணிப்பாளர் சபை உறுப்பினர் (திறைசேரியின் பிரதிநிதி) (2023.10.31 திகதி முதல்) |
| 07. | திரு. சாமர சுபசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 08. | திரு. உபாலி வடுஆராச்சி | பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 09. | திரு. ஐ. டப்ளியு. ஏ. சமன் குமார | பணிப்பாளர் சபை உறுப்பினர் |

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 10. | திரு. கே. எஸ். விஜயகீர்த்தி | பொது முகாமையாளர் (பதில்) பணிப்பாளர் சபைச் செயலாளர் |
| 11. | திருமதி வை.ரீ. துஷாங்கா | பிரதிப் பொது முகாமையாளர் |

## 5.7 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

அரச தொழில்முயற்சி வழிகாட்டல்களுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டுள்ளது.

## 5.8 நியாயாதிக்கக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்துக்கு மற்றும் ஊழியர்களுக்குக் கொடுக்க வேண்டிய சகல நியாயாதிக்கக் கொடுப்பனவுகளும் இந்த ஆண்டில் முறையாக செலுத்தப்பட்டுள்ளன.

## 5.9 சுற்றாடல் பாதுகாப்பு

சுற்றாடலுக்கு பாதகமான மற்றும் சுற்றாடல் மாசடைகின்றவாறான எந்தவொரு செயற்பாட்டிலும் கூட்டுத்தாபனம் தலையிட்டிருக்கவில்லை.

## 5.10 நிதி நிலைமைக் கூற்றுக்குப் பின்னரான சம்பவங்கள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் கணக்குகள் மூலம் சீராக்கல் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவற்காக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை.

## 5.11 கணக்காய்வாளர்கள்

2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் அரசாங்க கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளையின் பெயரில்,

**கே. எஸ். விஜயகீர்த்தி**
**பணிப்பாளர் சபைச் செயலாளர்**

## 6. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை

முன்னைய சுற்றறிக்கை அறிவுரைகள் மற்றும் 2021.11.16 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 01/2021இல் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய 2023 ஆம் ஆண்டுக்கு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழு தாபிக்கப்பட்டுள்ளதுடன், இது ஐந்து உறுப்பினர்களையும் அவதானிப்பாளர்கள் இருவரையும் உள்ளடக்கியதாக 7 பேர்கொண்ட குழுவாகக் காணப்படுகின்றது. மேற்படி கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுவின் ஒழுங்கமைப்பு பின்வருமாறு:

**அட்டவணை 6 : 2023 ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| தொடர் இல. | பெயர் | பதவி |
|---|---|---|
| 01. | செல்வி கே. ஏ. .சீ. பிரியதர்சனி | குழு தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி (2023.07.31 திகத வரை) |
| 02. | திருமதி ஏ.பீ.டி.டி. சந்துரங்கி | குழு தவிசாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர் - திறைசேரியின் பிரதிநிதி (2023.12.22 திகதி முதல்) |
| 03. | திருமதி ஏ. யூ. கே. தொடம்வல | குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2023.02.24 திகத வரை) |
| 04. | திருமதி ஆர்.ஏ.ஆர்.எஸ். மாயாதுன்னே | குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் (விடயப் பொறுப்பு அமைச்சின் பிரதிநிதி) (2023.06.16 திகதி முதல்) |
| 05. | திரு. சாமர சுபசிங்க | குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர் |
| 06. | திருமதி கே. எஸ். விஜயகீர்த்தி | குழு செயலாளர் (பதில்) பொது முகாமையாளர் (பதில்) |
| 07. | திரு கே.ஏ.சீ. சாமந்த | குழு அவதானிப்பாளர், பிரதம கணக்காய்வு அலுவலர், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு (2023.02.24 திகதி முதல்) |
| 08. | திருமதி வீ. யூ. லியனகே | குழுவின் ஏற்பாட்டாளர் மற்றும் குழு உறுப்பினர், உதவிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) |
| 09. | திரு டீ.எம்.யூ.எஸ். தர்மஜீவ | குழு அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியட்சகர், தேசிய கணக்காய்வு அலுவலகம் (2023.02.24 திகதி முதல்) |

2023 ஆம் ஆண்டில் திறைசேரியைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற நிறைவேற்று அல்லாத பணிப்பாளர் கணக்காய்வுக் குழுவின் தவிசாளராகச் செயற்பட்டார் என்பதுடன், குழு செயலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு இருக்காததால் பதில் செயலாளராக பதில் பொது முகாமையாளர் நடவடிக்கை மேற்கொண்டார். 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மொத்த கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை 04 ஆகும்.

மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பின்வரும் விடயங்கள் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்கும் மேற்படி சிபாரிசுகளுக்கு பணிப்பாளர் சபையின் மூலம் வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளின் முன்னேற்றம் பற்றிய முன்னாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் கணக்காய்வுக் குழு நடவடிக்கை எடுத்தது.

1. பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமான தாமதமடைந்து இருந்த இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களை மீளாய்வு செய்து, மேற்படி நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதில் எழுந்துள்ள குறைபாடுகள் மற்றும் தவறுகள் தொடர்பில் பொறுப்புவாய்ந்த தரப்பினர்களை விழிப்புணர்வூட்ட நடவடிக்கை மேற்கொண்டு, குறித்த தவறுகள் மற்றும் குறைபாடுகளை சீராக்கல் செசய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

2. மீளாய்வு ஆண்டின் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் சம்பந்தமாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் வெளிடப்பட்டிருந்த கணக்காய்வு வினாக்களில் உள்ளடங்குகின்ற அவதானிப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடி அதற்குத் தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான சிபாரிசுகளை சமர்ப்பித்தல்.

3. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் சகல விற்பனை நிலையங்களிலும் அண்மைக்காலத்துக்குரிய இலாப நட்ட நிலைமை பற்றிய தகவல்களை பகுப்பாய்வு செய்து, அதற்கமைய குறித்த விற்பனை நிலையங்களின் நடவடிக்கைகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்டப் பணிகள் பற்றி சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அதற்கமைய குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

4. கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக முறையாக தீர்மானம் மேற்கொள்வறத்காக மாதாந்த அடிப்படையில் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதன் முக்கியத்துவம் தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5. கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான எழுவங்குளம் தோட்டத்தில் காணப்படுகின்ற தேக்கு மரங்களின் எண்ணிக்கையை முறையாக கணக்கெடுப்புச் செய்து, அவற்றின் பெறுமதியை மதிப்பீட செய்துகொள்வது தொடர்பான சிபாரிசுகளை வழங்குதல் மற்றும் அதற்கமைய அடுத்தகட்டப் பணிகளை மேற்கொள்ளல்.

6. கூட்டுத்தாபனத்தின் சகல தோட்டங்கள் மற்றும் விதைப் பூங்காக்களிலும் காணப்படுகின்ற மரமுந்திரிகை மரங்கள் தொடர்பாக முறையான கணக்கெடுப்பை மேற்கொண்டு அதன் அடிப்படையில் மரமுந்திரிகை மரங்களின் பதிவேட்டைத் தயார் செய்வது பற்றிய சிபரிசுகைள சமர்ப்பித்தல்.

7. மீளாய்வு ஆண்டின் ஆரம்பத் திகதி முதல் கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய வெளிப்படுத்தப்பட வேண்டிய அரச கடன் மற்றும் செலுத்த வேண்டிய அரச கடன் தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முறை பற்றி அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் அறிவுரை பெற்றுக் கொள்வது உகந்ததென்று சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அதற்கமைய தேவையான அடுத்தகட்டப் பணிகளை மேற்கொள்ளச் செயற்படுதல்.

8. கூட்டுத்தாபனத்தின் சட்டபூர்வமான உரித்தின் கீழ் காணப்படுகின்ற புத்தளம் மற்றும் நெதகமுவ ஆகிய பதனிடல் நிலையங்கள் அமைந்துள்ள காணிகளின் இருமடிக்கட்டைக் குறிப்புக்கள் பற்றி ஆராய்ந்து, தேவையான உறுதிப்படுத்தல்களை செய்துகொள்வது தொடர்பில் சிபாரிசுகளை சமர்ப்பித்தல் மற்றும் அதற்கமைய தேவையான அடுத்தகட்டப் பணிகளை மேற்கொள்ளச் செயற்படுதல்.

**ஏ.பீ.டி.டி. சந்துரங்கி**
**தவிசாளர் – கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

## 07. 2023 ஆம் ஆண்டுக்கான இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை அறிக்கை

### 7.1 பயிர்ச்செய்கை பொருட்களை உற்பத்தி செய்தல் (மரமுந்திரிகை நிவாரண உதவிக் கருத்திட்டத்திற்கு)

கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற மரமுந்திரிகை செய்கை நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் கன்றுகளை விநியோகிக்கப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் மத்திய நாற்று மேடைகளில் மரமுந்திரிகை கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், இந்த அண்டில் இந்த நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டத்திற்கு திறைசேரி ஏற்பாடுகள் ரூ.மி. 9.00 ஒதுக்கப்பட்டதுடன். செயற்பணித் திட்டத்திற்கு அமைய ஒட்டு மரமுந்திரிகை செடிகள் 93,560 உற்பத்தி செய்வது வருடாந் இலக்காக இருந்ததுடன், இவற்றில் 93,560 உற்பத்தி செய்யப்பட்டு 100%ஆன முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.மி. 09 உம் செலவிடப்பட்டது.

### 7.2 மரமுந்திரிகை நிவாரண உதவித்திட்டத்தின் கீழ் 20 மாவட்டங்களில் பயிர்செய்கை மேற்கொள்ளல்.

திறைசேரி ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள இக்கருத்திட்டத்திற்கமைய ஒட்டு மரமுந்திரிகை 1,250 ஏக்கர் மற்றும் விதை மரமுந்திரிகை ஏக்கர் 250 உம், பயனாளிக் குடும்பங்கள் 1,000 மூலம் பயிர்செய்வது இந்த ஆண்டில் எதிர்பார்க்கப்பட்டதுடன், ஒட்டு மரமுந்திரிகை 1,250 ஏக்கர்களில் பயிரிடுவதற்காக விவசாயிகள் 2,628 பேரும், விதை மரமுந்திரிகை 250 ஏக்கர்களில் பயிரிடுவதற்காக விவசாயிகள் 408 பேரும் பயிற்றப்பட்டதன் மூலம் பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும், இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பயனாளிக் குடும்பங்கள் 1,000 இற்கு பயிற்சி வழங்க எதிர்பார்க்கப்பட்டதுடன், இந்த ஆண்டில் பயனாளிக் குடும்பங்கள் 3,036 இற்கு பயிற்சி அளித்ததன் மூலம் 303% ஆன முன்னேற்றம் அடையப்பெற்றுள்ளது. இப்பணிகளுக்கு செலவிடப்பட்ட ரூ.மி. 8.00 ஆகும்.

### 7.3 பெருந்தோட்ட முகாமைத்துவம்.

கூட்டுத்தாபனத்தின் கீழ் காணப்படுகின்ற விதை பூங்காங்களை பராமரிப்புச் செய்து, விஸ்தரித்தல் சேவைகள் மற்றும் வணிகப் பணிகளுக்குத் தேவையான

ஒட்டுச் செடிகளை உற்பத்தி செய்யத் தேவையான உயர் தரத்தைக் கொண்ட 231,250 கொளுந்தகள் மற்றும் 289,062 தாய்ச் செடிகள் தெரிவு செய்யப்பட்டன. இந்த ஆண்டுக்கான செயற்றிட்டத்திற்கு அமைய உத்தேச இலக்கும் மேற்படி எண்ணிக்கையாகும்.

மேலும், இந்த ஆண்டில் எழுவன்குளம் கட்டம் II இல் 40 ஏக்கர் அளவு புதிய பயிர்செய்கை மேற்கொள்வதற்காக ஏற்கெனவே காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், இந்த ஆண்டில் கூட்டுத்தாபன விதைப் பூங்காங்களில் 1,115 ஏக்கர் பராமரிப்பு மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு திறைசேரி மூலம் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன், இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 19.85 ஆகும்.

### 7.3.1 தோட்டங்களைப் பராமரிப்புச் செய்தல்

கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான 13 தோட்டங்கள் காணப்படுவதுடன், இத்தோட்டங்களை பராமரிப்புச் செய்வது வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆண்டின் செயற்றிட்டத்திற்கு அமைய தோட்டங்களில் 3,178 ஏக்கர்களை பராமரிப்புச் செய்ய எதிர்பார்க்கப்பட்டதுடன், குறித்த 3,178 ஏக்கர்களையும் பராமரிப்புச் செய்ய இந்த ஆண்டில் இயலுமாயிற்று. இப்பணிகளை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் மூலம் உழைத்துக் கொள்ளப்பட்ட நிதியிலிருந்த ரூ.மி. 58.24 செலவிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் மெ.தொ. 170 ஆன அளவு கூட்டுத்தாபனத் தோட்டங்களிலிருந்து பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டதுடன், நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக பெற்றுக் கொள்ள முடிந்திருப்பது மெ.தொ. 85.06 மாத்திரமாகும். கூட்டுத்தாபன தோட்டங்களில் காணப்பட்ட தேங்காய் பயிர்செய்கை வளைச்சல் 88,240 காய்களைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டதுடன், சீரற்ற காலநிலை காரணமாக 57,425 காய்களை மாத்திரம் பெற்றுக் கொள்ள முடிந்தது.

## 7.4 மரமுந்திரிகைச் செடி உற்பத்தி (நாற்று மேடை முகாமைத்துவம்)

குறித்த ஆண்டில் விஸ்தரித்தல் மற்றும் வணிகப் பணிகளுக்குத் தேவையான ஒட்ட உற்பத்திகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத் தோட்டங்களில் நாட்டுவதற்காக உயர் தரத்தைக் கொண்ட 33,900 ஒட்டு மரமுந்திரிகைச் செடிகளை உற்பத்தி செய்தல், வணிக நடவடிக்கைகளுக்காக 102,540 செடிகளை உற்பத்தி செய்தல் மற்றும் ஏற்றுமதிக் கொத்தணிக் கிராமம் கருத்திட்டத்திற்கு 35,000 ஒட்டுச் செடிகளை உற்பத்தி செய்வதும்

மேற்கொள்ளப்பட்டது. இப்பணிகளை மேற்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் உழைத்துக் கொண்ட நிதியிலிருந்து ரூ.மி. 21.06 ஆன தொகை செலவிடப்பட்டது.

## 7.5 நிலத்தின் விளைதிறனை மேம்படுத்தல்

குறித்த ஆண்டில் கூட்டுத்தாபன தோட்டங்களிலிருந்த விளைதிறன்மிக்க அறுவடையைப் பெற்றுக் கொள்வதற்காக 3,604 ஏக்கர்களுக்கு கிருமி நாசினி தெளிக்கப்பட்டது. மேலும் தோட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவுக்கு எஸடமைப்பிரிட் 20% (Mospilan 100g) 120.4kg கொள்வனவு செய்யப்பட்டு விநியொகிக்கப்பட்டுள்ளது. இதற்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட ஏற்பாடு ரூ.மி. 3.50 ஆகும் என்பதுடன், செலவிடப்பட்ட தொகை ரூ.மி. 3.45 ஆகும்.

## 7.6 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் வடமேல் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவப் பீடத்துடன் இணைந்து ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. செடிகளை இனப்பெருக்கம் செய்தல், உரப் பயன்பாடு, செடிகளின் அடர்த்தியான தன்மை, மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையில் உள்ள நோய்கள் மற்றும் பூச்சிகளை அழித்தல், இடையீட்டு உப பயிர்ச்செய்கை, கூட்டு மட்டும் விதைப் பயிர்ச்செய்கைகள், ஒட்டு தொழில்நுட்ப முறையியல்கள் அறுவடை பற்றி ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன அமுல்படுத்தப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில் 07 ஆராய்ச்சி வகுதிகளின் கீழ் புத்தளம் ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட 05 ஆராய்ச்சி நடவடிக்கைகளும், கமன்தலுவ ஆாய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட 08 ஆராய்ச்சி நடவடிக்கைளும் என்ற வயில் தொடர்ச்சியாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு திறைசெரியினால் ரூ.மி. 2.75 ஆன ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதுடன், இந்த ஏற்பாடுகளிலிருந்து ரூ.மி. 2.16 செலவிடப்பட்டுள்ளது.

மேலும் புதிய மரமுந்திரிகை வகைகளை அறிமுகம் செய்வது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான தரவுகள் சேகரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளதுடன். அவற்றின் பகுப்பாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 7.7 மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி

கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களில் இருந்து கிடைத்த தோலுடனான மரமுந்திரிகைப் பருப்பு புத்தளம் மற்றும் நெதகமுவவில் அமைந்துள்ள பதனிடல் நிலையங்களில் பதனிடலுக்காகப் பயன்படுத்தப்பட்டதுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகளாக கூட்டுத்தாபனத்தின் பிரதான விற்பனை நிலையங்கள் மற்றும் உரிமை பெற்ற விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த ஆண்டு தோலுடனான மரமுந்திரிகை மெ.தொ. 150 பதனிடல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துவது இலக்காகக் கொள்ளப்பட்டதுடன், தோலுடனான மரமுந்திரிகை மெ.தொ. 169.35 பதனிடல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு மரமுந்திரிகை பருப்பு மெ.தொ. 42.09 உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டில் சந்தைப்படுத்த எதிர்பார்க்கப்பட்ட பெறுமதிசேர்க்கப்பட்ட மரமுந்திரிகை பருப்பின் அளவு மெ.தொ. 30 ஆயினும், இந்த ஆண்டில் மரமுந்திரிகை பருப்பு மெ.தொ. 33.72 ஐ விற்பனை செய்து ரூ.மி. 167.82 ஆன தொகை உழைத்துக் கொள்ளப்பட்டது.

மேலும் இந்த ஆண்டில் மரமுந்திரிகை விற்பனை நிலையங்கள் 04 ஐ திறந்துவைக்க திட்டமிடப்பட்டதுடன், அதற்கமைய தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு நிலையம் 2024 ஆம் அண்டு கண்டி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவிருந்தது. ஏனைய விற்பனை நிலையங்களை திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது ஆயத்தப்படுத்தப்பட்டுள்ளன.

## 7.8 மனித வள அபிவிருத்தி

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த அலுவலர்களின் அறிவு, திறமை, மனப்பாங்கினை வளர்க்கும் நோக்கத்துடன் இந்த ஆண்டில் பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. இதன் மூலம் பணிச் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கும், விடய அறிவை இற்றைப்படுத்துவதற்கும் மற்றும் புதிய அறிவைப் பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைத்ததுடன், சுய ஊக்கத்தின் மூலம் வினைத்திறனை மேம்படுத்திக் கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. இந்த ஆண்டில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தவென திறைசேரியின் ஏற்பாடு ரூ.மி. 0.5 ஒதுக்கப்பட்டதுடன், இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாக மேற்கொள்ள ரூ.மி. 0.30 ஆன தொகை செலவானது.

# 8. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள பிரதான நடுத்தரக் கால நடவடிக்கைகள்

இலங்கையில் மரமுந்திரிகை பயிர்செய்கையை அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக கூட்டுத்தாபனம் பிரதானமாக 04 செயற்பாடுகளின் கீழ் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

01. மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் பரம்பலை அதிகரித்தல்.

02. மரமுந்திரிகைக் காணிகளின் விளைச்சலை அதிகரித்தல்.

03. மரமுந்திரிகை பயிர்ச்செய்கையில் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பத்தை மேம்படுத்தல்.

04. மனிதவள அபிவிருத்தி மற்றும் உற்பத்தி திறனை மேம்படுத்தல்.

## 8.1 மரமுந்திரிகை பயிர்ச்செய்கை பரம்பலை மேம்படுத்தல்

இதன் மூலம் கிராமிய ரீதியாக மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், தொடர்ச்சியாக தோலுடனான மரமுந்திரிகை வழங்கலை உறுதி செய்தல் மற்றும் வழங்கலை அதிகரிப்பதற்கு மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளும் காணிகளின் அளவை முறையாக அதிகரிப்பது இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 8.1.1 விஸ்தரித்தல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

- பயிர்செய்யப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டுக் காணிகளைக் கொண்டுள்ள பிரதேசங்களில் விவசாயிகளை இலக்காகக் கொண்டு மரமுந்திரிகை பயிர் செய்கை பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- தொடர்ச்சியாக தொழில்நுட்ப வழிகாட்டலுக்கு மரமுந்திரிகை மேற்கொள்ளும் மாவட்டங்களில் மரமுந்திரிகை பயிர்செய்கைக்கான பயிற்சிகளில் விவசாய விஸ்தரித்தல் அலுவலர்களை ஈடுபடுத்தல்.
- விவசாயிகளை மரமுந்திரிகை பயிர்செய்கையில் ஈடுபடுத்துவதற்காக மரமுந்திரிகை செய்கை மேற்கொள்வதன் மூலம் கிடைக்கும் அனுகூலங்கள்

பற்றி (கையேடு, வீடியோ, துண்டுப்பிரசுரம்) விழிப்புணர்வூட்டும் அம்சங்களை பகிர்ந்தளித்து அதன் மூலம் விவசாயிகளை இதில் ஈடுபடுத்தல்.

- நாடு முழுவதிலும் மரமுந்திரிகை பற்றிய பயிர்செய்கை சிகிச்சை முகாம், நடமாடும் பயிற்சி அலகுகளை அமுல்படுத்தல்.
- விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் இளைஞர்கள் மற்றும் பெண்களை மரமுந்திரிகை பயிர்செய்கையில் ஈடுபடுத்தல்.

### 8.1.2 மரமுந்திரிகை பயிர்செய்கைகளை புனரமைப்புச் செய்தல்

- GIS வரைபடமாக்கல் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான மற்றும் தனியார் காணிகள் ஆகிய இரண்டிலும் கைவிடப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப்படாத காணிகளை இனங்கண்டு அவற்றில் மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல்.
- அலகு மரமுந்திரிகை விளைச்சலை மேம்படுத்துவதற்காக மரக்கிளைகளை வெட்டுதல், உரம் இடுதல் மற்றும் கிருமிக் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் மற்றும் தொடர்ச்சியான கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளல்.
- காணிகளின் விளைச்சலை அதிகரிப்பதற்காக உயர் அடர்த்தியைக் கொண்ட பயிர்செய்கை முறைகள் மற்றும் முகாமைத்துவ முறைகளை அறிமுகம் செய்தல்.
- புனரமைப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக பயன்படுத்தும் அம்சங்களை நிவாரண உதவி (சேதன் பசளை, கருவிகள்) வழங்குதல்.
- வருடாந்தம் தோட்டங்களின் செயலாற்றுகையை அவதானிப்புச் சய்து அதற்கமைய புதிய ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல்.

### 8.1.3 புதிய பயிர்செய்கைகளை மேற்கொள்ளல்.

- விவசாயச் சூழலைக் கொண்ட வலயங்களின் வரைபடம் மற்றும் மழைவீழ்ச்சி பற்றிய தரவுகளைப் பயன்படுத்தி மரமுந்திரிகைக்கு தகுந்த புதிய பிரதேசங்களை இனங்காணல்.
- வணிக அளவிலான மரமுந்திரிகை பயிர்செய்கைக்கு தனியார் முதலீட்டாளர்கள் மற்றும் விவசாய சங்கங்களை ஊக்குவித்தல்.
- தோட்ட உரிமையாளர்களுக்கு பயிர்செய்கைப் பொருட்கள் மற்றும் பயிற்சி வழங்கி அடிக்கடி பரிசோதனைக்கு மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்தல்.
- கூட்டுத்தாபனம் மூலம் தெரிவு செய்யப்பட்ட நிலத்திற்கு புதிய பயிர்செய்கை பிரதேசங்களை தயார் செய்தல், எல்லைகளை அடையாப்படுத்தல், குழிகளை வெட்டுதல் போன்ற பணிகளுக்கு உதவி வழங்குதல்.

### 8.1.4 ஒட்டு மரமுந்திரிகை செடி உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல்.

- உயர் பிரச்சார முறையியல்கள் மற்றும் கிருமி நாசினி முகாமைத்துவம் பற்றி நாற்று மேடை மேற்கொள்வோரை பயிற்றுவித்தல்.
- விநியோகிக்கப்பட்ட சகல பயிர்செய்கைப் பொருட்களுக்குமான சான்றுப்படுத்தும் (GAP) தரக் கட்டுப்பாட்டு இயந்திரத்தை தயார் செய்தல்.
- பெண்களினால் வழிப்படுத்தப்படுகின்ற விவசாயப் பண்ணைகள் மற்றும் வறுமையினால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு நிவாரண விலையின் கீழ் ஒட்டுச் செடிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- நாற்று மேடைகளில் தற்போதுள்ள ஒட்டுச் செடிகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டள்ள செடிகளின் எண்ணிக்கை தொடர்பாக வெளிப்படைத்தன்மைமிக்க கண்காணிப்பு மூலம் செயற்படுதல்.

## 8.2 மரமுந்திரிகை பயிர்செய்கைக் காணிகளின் விளைதிறனை மேம்படுத்தல்.

புத்தாக்கம், தொழில்நுட்பங்களைப் பரிமாற்றிக் கொள்ளல் மற்றும் ˙துறைசார் அடிப்படையிலான திறன் அபிவிருத்தி மூலம் ஒரு ஹெக்டயருக்கான மரமுந்திரிகை விளைச்சலை அதிகரித்தல்.

### 8.2.1 ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய வகைகளை இனப்பெருக்கம் செய்தல் மற்றும் வெளிக்கள பரிசோதனைகள்.

- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தான்தின் கட்டுப்பாட்டின் கீழ் பிராந்திய ஆராய்ச்சி மற்றும் மாதிரி விவசாயப் பண்ணைகளை தாபித்தல்.
- எதிர்கால இனப்பெருக்கப் பயன்பாட்டுக்காக உள்நாட்டு மரபணு வளங்களைப் பேணிவருதல் மற்றும் பேணல்.
- உயர் விளைச்சலைக் கொண்ட தோலுடனான மரமுந்திரிகைகளின் தரம் அதிகமான, நோய் எதிர்ப்பு மற்றும் வரட்சிக்கு தாக்குப்பிடிக்கின்ற ஆற்றலைக் கொண்ட வகைகளின் பண்புகளை மதிப்பீடு செய்தல்.
- முறையானவாறு சான்றுப்படுத்தப்பட்ட தேசிய மரமுந்திரிகை வகைகளை வெளியிடும் கட்டமைப்பு ஊடாக சான்றுப்படுத்தப்பட்ட மரமுந்திரிகை வகைகளை வெளியிடுதல்.

### 8.2.2 புதிய பயிர்செய்கை நுட்பமுறைகள் மற்றும் பராமரிப்பு முறைகளை அறிமுகம் செய்தல்.

- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன் மூலம் மரமுந்திரிகைகளுக்கு விசேடமாக தயார் செய்யப்பட்டுள்ள தேசிய GAP தரநியமங்களுக்கு அமைய விசவாசிகளை பயிர்செய்கைக்கு பயிற்றுவித்தல்.
- நல்ல விவசாய நடைமுறைகள் (GAP) இசைவான தன்மை, அறிக்கைகளைப் பேணிவருதல் மற்றும் தரப் பரிசோதனை பற்றி விவசாயிகள் மற்றும் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபன பதவியணியினரை பயிற்றுவித்தல்.
- உயிரியல்சார் கிருமிக் கட்டுப்பாடு உட்பட கூட்டுக் கிருமிநாசினி முகாமைத்துவத்தை (IMP) மேம்படுத்தல்.
- தோடட்ங்களில் நிலைபேறானதன்மைக்காக பூச்சிய நீர் வழங்கல் போன்ற நீர் வினைத்திறன் நீர்ப்பாசனக் கட்டமைப்பைத் தாபித்தல்.
- பயறு வகையிலான பயிர்செய்கைகளுடன் உப பயிர்செய்கைக் கட்டமைப்பை பேணிவருவதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் மண்ணின் தரத்தை மேம்படுத்தல்.

### 8.2.3 கூட்டு கிருமிநாசினி முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

- முக்கியமாக மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளும் மாவட்டங்களில் மரமுந்திரிகை பயிர்செய்கை தொடர்பில் தாக்கம் செலுத்தும் பிரதான கிருமிகள் மற்றும் நோய்களை இனங்காண்பதற்காக விவசாயிகளுக்கு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.
- மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளும் பிரதான மாவட்டங்களில் பயிர்செய்கையில் கிருமிகள் பற்றிய அவதானிப்பு மற்றும் அவை பற்றி அறிக்கையிடுவதை மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

## 8.3 மரமுந்திரிகை பதனிடல் கைத்தொழில் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளை மேம்படுத்தல்.

உள்நாட்டு மரமுந்திரிகை சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளைப் பயன்படுத்தல் மற்றும் சந்தை விஸ்தரிப்பை மேம்படுத்துவதன் மூலம் கைத்தொழிலின் பெறுமதியை மேம்படுத்தல்.

### 8.3.1 GMP, GAP மற்றும் தரப்படுத்தலை பின்பற்றல்.

- GMP தரநியமங்களின் கீழ் மரமுந்திரிகை தயார் செய்வதற்கு நியம நடவடிக்கைமுறைகளை அறிமுகம் செய்தல்.
- உள்நாட்டு தரப்படுத்தல் நிறுவனத்தின் (SLS) மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ் (HACCP, ISO 22,000) பெற்றுக் கொள்ள வசதி செய்தல்.
- வழங்குனர்களுக்கு தரச்சான்றிதழ் பெறுதல். உணவுப் பாதுகாப்பு மற்றும் பொதியிடல் பற்றிய பயிற்சிகளை வழங்குதல்.

### 8.3.2 மரமுந்திரிகை பதனிடல் நிலையங்களை பலப்படுத்துவதற்காக சிறியளவிலான கிராமங்களை இனங்கண்டு பயிற்றுவித்தல்

- கிராமிய மட்டத்தில் பதனிடல் செய்பவர்களை இனங்கண்டு பதிவு செய்வதற்காக அவர்களுக்குப் பொருத்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைத் தயார் செய்தல்.
- இலங்கையில் இனங்காணப்பட்ட வெற்றிகரமான தொழில்முயற்சியாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் அவர்களின் அறிவைப் பகிர்ந்துகொள்வதற்குத் தேவையான வாய்ப்பை வழங்குதல்.
- நுண் நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகளுடன் கடன் தொடர்புகளுக்கான வசதிகளை செய்துகொடுத்தல்.
- இயந்திரசாதனங்கள் உபகரணங்களைப் பராமரிப்புச் செய்தல் மற்றும் குறைபாடுகளை தீர்த்துக் கொள்ளத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.

### 8.3.3 மரமுந்திரிகை உப உற்பத்திகளை அபிவிருத்தி செய்தல்

- மரமுந்திரிகைப் பழகம் சார்ந்த உற்பத்திகள் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அவற்றை உற்பத்தி செய்வதில் ஈடுபடுதல்.
- வணிகமயப்படுத்தலுக்கு சந்தை மேம்படுத்தல், ஆராய்ச்சி மற்றும் சாத்தியக்கூறுக் கற்கைகளை நடாத்தல்.
- தெரிவு செய்யப்பட்ட மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளும் கிராமங்களில் சிறிய மரமுந்திரிகை பதனிடல் நிலையங்கள் மற்றும் மரமுந்திரிகை பழங்கள் சார்ந்த உற்பத்தி அலகு முன்னோடிக் கருத்திட்டங்களை மேற்கொள்ளல்.

- மரமுந்திரிகை பதனிடல் மற்றும் வழிப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பெண்களினால் வழிநடாத்தப்படுகின்ற சமுதாயக் குழுக்கள் மற்றும் இளம் தொழில்முயற்சியாளர்களை தொடர்புபடுத்திக் கொள்ளல்.
- கண்காட்சி மற்றும் டிஜிரல் மேடைகள் ஊடாக உப உற்பத்திகளை சந்தைப்படுத்தல் மற்றும் குறியீட்டுமயப்படுத்தலுக்கு உதவுதல்.

### 8.3.4 சிறியளவிலான பதனிடலுக்கு சந்தைப் பிரவேசத்தைப் பலப்படுத்தல்.

- கிராமிய மட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்திக்கு ஒன்லையின் சந்தையை அறிமுகம் செய்தல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியில் சந்தைக் கண்காட்சிகளை நடாத்தல் மற்றும் மேற்படி கருத்தரங்குகளில் பங்கேற்றல்.
- பேரம் பேசும் அதிகாரத்தை மேம்படுத்துவதற்காக மரமுந்திரிகை பதனிடல் கூட்டுத்தாபன மேடைகளை அபிவிருத்தி செய்தல்.

## 8.4 மனிதவளத் திறன்களை மேம்படுத்தல்.

திறன், மனப்பாங்கு மற்றும் அறிவுமிக்க ஊழியப் படையணியைக் கட்டியெழுப்புதல்.

### 8.4.1 விரிவான ஊழியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

- நடவடிக்கைசார் முன்னுரிமைகளுடன் வரிசைப்படுத்தப்படும் வருடாந்த பயிற்சி தின அட்டவணைகளை அபிவிருத்தி செய்தல்.
- முகாமைத்துவத் திறன்களை மேம்படுத்துவதற்காக வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- சகல வெளிக்கள அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்களுக்கும் ஒவ்வொரு 02 வருடங்களுக்கும் ஒரு தடவை கட்டாய புதுப்பித்தல் பயிற்சியை அறிமுகம் செய்தல்.

### 8.4.2 நவீன செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறைகளை அமுல்படுத்தல்.

- KPI உடன் டிஜிரல் செயலாற்றுகை முகாமைத்துவ முறைமையை (PMIS) அறிமுகம் செய்தல்.

- காலாண்டு செயலாற்றுகை மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல் மற்றும் பிரதான முடிவு அம்சங்களுடன் ஊக்குவிப்புக்களை தொடர்புபடுத்தல்.
- விளைதிறன்மிக்க மிகையூதியம் செலுத்தல், மக்கள் அங்கீகாரம் மற்றும் நிதிசார் அல்லாத பரிசுகளை வழங்குதல்.
- தொழில்சார் முன்னேற்றத்துக்கான பயிற்சியுடன் செயலாற்றுகையை தொடர்புபடுத்தவும்.

## 8.4.3 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திறமைகள் மற்றும் டிஜிரல் நடவடிக்கைகளை மேம்படுத்தல்.

- MIS முறைமை மற்றும் கையடக்கத் தரவுகளை சேகரிக்கும் கருவிகளைப் பயன்படுத்துவது பற்றி பதவியணியினருக்கு பயிற்றுவித்தல்.
- தோட்டங்களின் செயற்பாடுகள் மற்றும் விவசாயிகளின் கேள்வி பற்றி அவதானிப்புச் செய்வதற்காக வெளிக்கள அலுவலர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் மடிக் கணினிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- உள்ளக தொடர்பாடல் அறிக்கைகளை பேணிவருதல் மற்றும் அறிக்கைகளை சமர்ப்பிப்பதை டிஜிரல்மயப்படுத்தல்.
- தொடர்ச்சியாக திறன் விருத்திக்கு இலத்திரனியல் கற்கை மேடைகளை அறிமுகம் செய்தல்.

## 8.4.4 அறிவைப் பகிர்ந்துகொள்ளல் மற்றும் உள்ளக் கற்றலை ஊக்குவித்தல்.

- சிறந்த நடைமுறைகள் மற்றும் புத்தாக்கங்கள் பற்றி காலாண்டு ரீதியாக உள்ள கருத்தரங்குகளை நடாத்தல்.
- இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் கருத்திட்டங்களின் வெற்றிகரமான கற்கைகளை ஆவணமயப்படுத்தி வெளியிடுதல்.
- சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட பதவியணியினரக்கு மத்தியில் வழிகாட்டல் கட்டமைப்பைத் தாபித்தல்.
- உள்ளக செய்திப் பத்திரிகைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவித்தல்களை மேம்படுத்தல்.

## 9. செயலாற்றுகை பற்றிய 05 வருட பொழிப்பு

| விபரம் | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| 01 | நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட மரமுந்திரிகை ஏக்கர்களின் அளவு | நிவாரண உதவி 1,356<br>வீட்டுத் தோட்டம் 366<br>மொத்தம் 1,722 | நிவாரண உதவி 1,169.26<br>வீட்டுத் தோட்டம் 468<br>மொத்தம் 1,637.26 | நிவாரண உதவி 2920<br>வீட்டுத் தோட்டம் 1,080<br>மொத்தம் 4,000 | நிவாரண உதவி 2,568<br>வீட்டுத் தோட்டம் 932<br>மொத்தம் 3,500 | நிவாரண உதவி 3,305<br>வீட்டுத் தோட்டம் 1,195<br>மொத்தம் 4,500 |
| 02 | நிவாரண உதவித் திட்டத்தின் கீழ் பயன்பெறுகின்ற விவசாயக் குடும்பங்களின் எண்ணிக்கை | 3,036 | 3,590 | 5,384 | 7,676 | 11,069 |
| 03 | உற்பத்தி செய்யப்பட்ட செடிகளின் எண்ணிக்கை | ஒட்டு செடிகள் 171,440<br>விதைச் செடிகள் -<br>மொத்தம் 171,440 | ஒட்டு செடிகள் 31,360<br>விதைச் செடிகள் 18,770<br>50,130 | ஒட்டு செடிகள் 511,230<br>விதைச் செடிகள் 17,360<br>மொத்தம் 528,590 | ஒட்டு செடிகள் 422,570<br>விதைச் செடிகள் 54,500<br>மொத்தம் 477,570 | ஒட்டு செடிகள் 270,294<br>விதைச் செடிகள் 79,945<br>மொத்தம் 350,239 |
| 04 | சேகரிக்கப்பட்ட தாய் விதைகளின் எண்ணிக்கை | 289,062 | 49,000 | 799,785 | 500,000 | 500,000 |
| 05 | சேகரிக்கப்பட்ட கிளைகளின் எண்ணிக்கை | 231,250 | 39,200 | 800,000 | 520,000 | 310,000 |
| 06 | பெற்றுக்கொண்ட அறுவடை (மெற்றிக் தொன்) | 85.06 | 88.24 | 106.0 | 149.46 | 157.81 |

| விபரம் | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| 07 | கூட்டுத்தாபனத் தோட்டங்களில் புதிய பயிர்ச்செய்கை (ஏக்கர்) | 40 | 25 | 90 | 346 | 52.5 |
| 08 | உத்தரவு பெற்ற விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை | 20 | 40 | 69 | 75 | 56 |
| 09 | தொழில்நுட்ப பரிமாற்றம் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடு மற்றும் அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தின் கீழ் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | 13 | - | 30 | 82 | 166 |
| 10 | பயிற்றப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | 3,036 | 558 | 663 | 1,369 | 2,320 |
| 11 | இறக்குமதி செய்யப்பட்ட மரமுந்திரிகை அளவு (மெற்றிக் தொன்) | தோலுடனான -<br>மரமுந்திரிகை 47.66 | தோலுடனான 207.57<br>மரமுந்திரிகை - | தோலுடனான 0.051<br>மரமுந்திரிகை 0.047 | தோலுடனான 549.2<br>மரமுந்திரிகை 0.025 | தோலுடனான 527.26<br>மரமுந்திரிகை 0.826 |
| 12 | மரமுந்திரிகை இறக்குமதி உரிமப் பத்திரம் வெளியிடப்பட்ட அளவு (மெற்றிக் தொன்) | - | 100 | - | 500 | - |

| விபரம் | | 2023 | 2022 | 2021 | 2020 | 2019 |
|---|---|---|---|---|---|---|
| 13 | மரமுந்திரிகை ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு (மெற்றிக் தொன்) | 68.34 | 58.20 | 26.26 | 34.32 | 47.40 |
| 14 | மரமுந்திரிகை ஏற்றுமதி செய்யப்பட்ட பெறுமதி (ரூ.மி.) | 311.08 | 212.83 | 89.07 | 81.13 | 93.57 |
| 15 | தோலுடனான மரமுந்திரிகை மற்றும் மரமுந்திரிகைப் பருப்பு கொள்வனவு (மெற்றிக் தொன்) | தோலுடனான மரமுந்திரிகை - 99.64 | தோலுடனான மரமுந்திரிகை - 79.05 | தோலுடனான மரமுந்திரிகை - 54.81<br>மரமுந்திரிகைப் பருப்பு - - | தோலுடனான மரமுந்திரிகை - 64.0<br>மரமுந்திரிகைப் பருப்பு - - | தோலுடனான மரமுந்திரிகை - 20.0<br>மரமுந்திரிகைப் பருப்பு - 2.30 |
| 16 | பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகைப் பருப்பு விற்பனையின் அளவு (மெற்றிக் தொன்) | 33.72 | 21.55 | 26.8 | 16.91 | 21.72 |
| 17 | பெறுமதி சேர்க்கப்பட்ட பருப்பு விற்பனையின் பெறுமதி (ரூ.மி.) | 167.82 | 112.39 | 92.12 | 47.23 | 79.08 |

# 10. அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிக்கூற்றுக்கள் 2023

01. பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகள் மற்றும் இலஙகைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் கணக்குகள் தயார் செய்யப்பட்டுள்ளன.

02. நிலையான சொத்துக்கள் நேர்கோட்டு முறையில் தேய்மானம் செய்யப்பட்டது. ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் திகதி அடிப்படையாகக் கொண்டு தேய்மானம் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆண்டினுள் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட திகதியை அடிப்படையாகக் கொள்ளாது மொத்த ஆண்டுக்கும் தேய்மானம் செய்யப்பட்டுள்ளது.

**தேய்மானம் செய்யும் விகிதங்கள் பின்வருமாறாகும்:**

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 20% |
| இயந்திர சாதனங்கள் | 10% |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 10% |
| அலுவலக உபகரணங்கள் | 10% |
| குழாய்க்கிணறு, பயிர்ச்செய்கை கிணறு | 10% |
| தளபாடம் உபகரணம் மற்றும் பொருத்துதல் | 06% |
| நிரந்தரக் கட்டிடங்கள் | 03% |
| பௌதியளவிலான நிரந்தரக் கட்டிடங்கள் | 33 1/3% |

03. ஆதனம் பொறி மற்றும் உபகரணமாக இனங்காணப்பட்டுள்ள சொத்துக்கள் செலவினத்தின் அடிப்படையில் கணக்குகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி மீள் மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் திரட்டிய தேய்மானம் மற்றும் இழப்புகளுக்கான நட்டங்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன.

04. கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படையில் இருப்புக் கணிப்பு குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மரமுந்திரிகைப் பருப்பு | : | தேறிய விற்பனை விலையில் |
| தோலுடனான மரமுந்திரிகை | : | உத்தரவாத மற்றமடையும் விலை/சந்தை விலை |
| மாடு மற்றும் ஆடு | : | அவ்வவ் மாகாணங்களில் உள்ள சந்தை விலை/ உயிருடனான நிறைக்கு அமைய |
| தேங்காய் விலை | : | தேறிய விற்பனை விலையில |
| ஏனைய சகல இருப்புக்களும | : | செலவினத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்டன |

05. தலைமையலுவகம் செலவின நிலையங்களுக்கிடைய அதன் உள்ளடக்க மொத்த சம்பள செலவினம் ஏற்புடையவாறு பகிர்ந்தளிக்கப்பட்டன.

06. தோட்டங்களில் சராசரி செலவினம் அறுவடை தரும் மற்றும் அறுவடை தராத பயிர்ச்செய்கைகள் மற்றும் விலங்கு வேளாண்மைக்கு இடையே பகிர்ந்து செல்வது அப்பிரதேசங்களுக்கான செலவிடப்பட்ட உண்மையான தொழிலாளி நாட்களின் எண்ணிக்கையின் விகிதத்துக்கு அமைய பகிரப்பட்டுள்ளது.

07. அறுவடை பெறுகின்ற பயிர்ச்செய்கைகளில் தேய்மானம் வருடத்துக்கு 5% ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டது.

08. அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் ஒதுக்கம் மொத்தக் கடன்பட்டோரில் 3.53% ஆகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒதுக்கக் கணக்கின் வித்தியாசம் வருடத்தின் அறவிடமுடியாக் கடனாக பதிவளிப்புச் செய்ய மாற்றல் செய்யப்பட்டுள்ளது.

09. பணிக்கொடை கொடுப்பனவுக்கான ஒதுக்கம் பணிக்கொடைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேவையாற்றி பூர்த்தி செய்த வருடங்களின் எண்ணிக்கைக்கு அமைய கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பணிக்கொடை உரித்துப் பெறுவதற்காக சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச சேவைக்காலம் கணக்காண்டில் பூர்த்திசெய்யப்பட்டவர்களின் சேவை செலவின வருமானக் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

10. பெற்ற மற்றும் பெற வேண்டிய வருமானம் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கிழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்திற்கொண்டு பொருட்களின் விற்பனை வருமானம் இனங்காணப்பட்டுள்ளது.

- நிறுவனம் அபாயம் மற்றும் பயன் ஆகிய இரண்டையும் கொள்வனவாளருக்குப் பெற்றுக்கொடுக்கின்றது.
- நிறுவன முகாமைத்துவத்தின் தலையீடு விற்பனை பொருட்களின் உரிமைக்கு அல்லது வினைத்திறனைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பதற்கு தலையிடுவதாக இருக்காது.
- வருமானத்தை நம்பகத் தன்மைமிக்கதாக இனங்காண முடிதல்.
- கொடுக்கல் வாங்கல் மற்றும் குறித்த பொருளாதாரப் பயன்கள் நிறுவனத்துக்குச் சென்றடையக்கூடியதாக இருக்கலாம்.
- கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான அல்லது ஏற்புடையதாகக் கூடிய செலவினம் நம்பகத்தன்மைமிக்கதாக மதிப்பிடப்படுதல்.

11. மூலதன சொத்துக்களின் தேய்மானம் மற்றும் தேய்வாக கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உண்மையான பெறுமானங்கள் குறித்த மூலதனச் சொத்துக்களில் இருந்து பதிவளிக்கப்பட்டதையடுத்து அதற்குச் சமமான பெறுமதி மூலதனக் கொடைகளில் இருந்து நீக்கப்பட்டு கணக்குப் புத்தகங்களில் வருமானமாக இனங்காணப்படுகின்றது.

12. மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வது 2009.01.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் தினமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமொன்றிலிருந்து தொழில்நுட்ப பொறியியலாளர் ஒருவரின் தலைமையிலான சுயாதீன குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

13. உற்பத்தி செய்யப்பட்ட உண்மையான செடிகள் மற்றும் பயிர் விநியோகிக்கப்பட்ட செடிகளை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுச் செடிகள் மற்றும் விதைச் செடிகள் உற்பத்தி சம்பந்தமான நிருவாக செலவினங்கள் சேவைகள் மற்றும் வணிகப் பிரிவுக்கு இடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

## இலங்கை மரமுந்தரிகைக் கூட்டுத்தாபனம்

## 2023.12.31 ஆம் திகதிக்கு நிதி நிலைமைக்கூற்று

| 31.12.2022<br>ரூபா | சொத்துக்கள் | குறிப்பு | ரூபா |
|---|---|---|---|
| | **நடைமுறையல்லாச் சொத்து** | | |
| 116,124,752.11 | ஆதனம் பொறி, உபகரணம் | 07 | 113,259,962.51 |
| 25,316,396.38 | அறுவடைபெறும் பயிர்ச்செய்கைக்கான பராமரிப்புச் செலவினம் | 08 | 81,699,082.73 |
| 98,080,023.96 | அறுவடை செய்யாத பயிர்ச்செய்கை பராமரிப்புச் செலவினம் | 09 | 46,008,475.80 |
| 588,524.09 | ஏனைய சிறிய கருத்திட்டங்கள் | 10 | 840,654.67 |
| 6,542,597.00 | மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகள் -மூலதனம் | | 22,134,175.60 |
| **246,652,293.54** | **மொத்த நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **263,942,351.31** |
| | **நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| 76,769,613.94 | இருப்பு | 11 | 105,483,926.55 |
| 31,800,793.00 | வர்த்தகக் கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய விடயங்கள் | 12 | 28,640,033.48 |
| 50,638,657.60 | வைப்புக்கள் முற்பணம், முன்செலுத்தல் | 13 | 9,751,226.20 |
| 143,842,699.56 | காசும் காசுக்குச் சமனானவையும் | 14 | 156,598,891.68 |
| 303,051,764.10 | **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | 300,474,077.91 |
| **549,704,057.64** | **மொத்தச் சொத்துக்கள்** | | **564,416,429.22** |
| | **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | |
| | **உரிமையாண்மை** | | |
| 40,000,000.00 | ஆரம்ப மூலதனம் | | 40,000,000.00 |
| 281,565,222.86 | அரச கொடைகள் | | 300,697,860.49 |
| 280,919,046.17 | ஏனைய தரப்பினர்களிடம் கிடைத்த கொடைகள் | 15 | 246,157,218.48 |
| 17,441,846.85 | மூலதன ஒதுக்கம் | 16 | 17,441,846.85 |
| (152,058,776.37) | இலாப நட்டக் கணக்கு | | (156,859,994.82) |
| **467,867,339.51** | **மொத்த உரிமையாண்மை** | | **447,436,931.00** |
| | **நடைமுறை அல்லாத பொறுப்பு** | | |
| 35,789,916.00 | பணிக்கொடை ஒதுக்கம் | 17 | 40,514,827.00 |
| 3,500,000.00 | நீண்டகாலக் கடன் | | 3,500,000.00 |
| **39,289,916.00** | **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்பு** | 18 | **44,014,827.00** |
| | **நடைமுறைப் பொறுப்புகள்** | | |
| 42,546,802.13 | வர்த்தக் கடன்பட்டோர் மற்றும் செலுத்த வேண்டிய விடயங்கள் | 19 | 72,964,671.22 |
| **42,546,802.13** | **மொத்த நடைமுறைப் பொறுப்புகள்** | | **72,964,671.22** |
| **549,704,057.64** | **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்** | | **564,416,429.22** |

சட்டத்தரணி உதார விஜேசிங்க
**தவிசாளர்**

அசோக லங்காதிலக்க
**பிரதித் தவிசாளர்**

கே.எஸ். விஜயகீர்த்தி
**பதில் பொது முகாமையாளர் (பதில்)**

எம்.ரீ.எஸ்.கே. பீரிஸ்
**உதவி பொது முகாமையாளர் – நிதி**

**(குறிப்பு 07) ஆதனம், சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள்**

| விபரம் | செலவினம் / மீள்மதிப்பீட்டுப் பெறுமதி 2023.01.01 (ரூபா) | குறித்த ஆண்டின் சொத்துகள்கொள்வனவு / மீள்மதிப்பீடு (ரூபா) | குறித்த ஆண்டின் சொத்துகள் நீக்கம் / விற்பனை (ரூபா) | சொத்துக்களின் இன்றைய செலவினம் / மீள்மிதிப்பீட்டுப் பெறுமதி 2023.12.31 (ரூபா) | 2023.01.01 ஆம் திகதிக்கு திரட்டிய பெறுமானம் (ரூபா) | 2023 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் (ரூபா | 2023.12.31ஆம் திகதிக்கு திரட்டிய தேய்மானம் (ரூபா) | பதிவளிப்புச் செய்தல் பெறுமதி 2023.12.31 (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|
| அறுதிஉறுதிக் காணி | 28,335,084.54 | 513,912.00 | - | 28,848,996.54 | - | - | - | 28,848,996.54 |
| நிலையான கட்டிடம் | 62,652,301.08 | 60,051.00 | - | 62,712,352.08 | 26,340,617.19 | 1,697,445.00 | 28,038,062.19 | 34,674,289,89 |
| பகுதியளவான நிரந்தரக் கட்டிடம் | 825,751.00 | - | - | 825,751.00 | 734,784.67 | 90,946.64 | 825,731.31 | 19.69 |
| வாகனம் | 128,075,837.84 | 2,783,825.00 | - | 130,859,662.84 | 109,288,984.29 | 5,725,787.54 | 115,014,771.83 | 15,844,891.01 |
| இயந்திர சாதனம் | 39,441,163.45 | 132,000.00 | - | 39,573,163.45 | 19,047,630.94 | 2,657,601.49 | 21,705,232.43 | 17,867,931.02 |
| கருவிகள் மற்றும் உபகரணம் | 13,886,742.45 | 1,737,540.00 | - | 15,624,282.45 | 9,277,259.11 | 643,163,42 | 9,920,422.53 | 5,703,859.92 |
| அலுவலக உபகரணம் | 13,182,407.09 | 68,440.00 | - | 13,250,847.09 | 11,198,797.90 | 397,545,09 | 11,596,342.99 | 1,654,504.10 |
| தளபாடமும் பொருட்களும் | 8,968,548.82 | 235,985.00 | - | 9,204,533.82 | 6,139,373.98 | 314,936.41 | 6,454,310.39 | 2,750,223.43 |
| குழாய்க் கிணறு | 2,827,622.18 | 3,596,280.00 | - | 6,423,902.18 | 907,577.99 | 377,848.87 | 1,285,426.86 | 5,138,475.32 |
| விவசாயக் கிணறு | 1,333,680.40 | - | - | 1,333,680.40 | 1,078,185.29 | 87,548.14 | 1,165,733.43 | 167,946.97 |
| குளம் | 608,824.62 | - | - | 608,824.62 | - | - | - | 608,824.62 |
| | **300,137,963.47** | **9,128,033.00** | **-** | **309,265,996.47** | **184,013,211.36** | **11,992,822.60** | **196,006,033.96** | **113,259,962.51** |

- நெதகமுவ மற்றும் புத்தளம் மரமுந்திரிகை பதனிடல்நிலையங்கள் இரண்டும் தாபிக்கப்பட்டு இருப்பது இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான காணியிலாகும். ஏனைய காணிகள் உரித்து அரசாங்கத்துக்கு அல்லது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் காணப்படுகின்றது. இந்தக் காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

### 2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| 31.12.2022 (ரூபா) | | | 31.12.2023 (ரூபா) |
|---|---|---|---|
| | **அறுவடை தரும் பயிர்ச்செய்கையின் செலவினம்** | | |
| 24,159,358.85 | | | 78,708,149.89 |
| 1,157,037.53 | மரமுந்திரிகை குறிப்பு – 8 (அ) | | 2,990,932.84 |
| **25,316,396.38** | தேங்காய் குறிப்பு - 8 (ஆ) | **மொத்தம்** | **81,699,082.73** |

குறிப்பு - 8 (அ)

**அறுவடைதரும் பயிர்ச்செய்கை - மரமுந்திரிகை**

| 31.12.2022 (ரூபா) | தோட்டம் | 2023.01.01 திகதிக்கான செலவினம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு திரட்டிய தேய்மானம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு தேறிய பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|---|
| 724,885.12 | ஹாடி தோட்டம் | 5,680,877.17 | 2,693,572.88 | 2,987,304.29 |
| 4,005,275.45 | கமன்தளுவ தோட்டம் | 19,223,779.11 | 14,848,013.87 | 4,375,765.24 |
| 3,618,726,16 | புத்தளம் தோட்டம் | 29,119,436.73 | 8,926,487.94 | 20,192,948.79 |
| 529,758.50 | எளுவன்குளம் செடி இனப்பெருக்க நிலையம் | 15,159,815.35 | 13,815,991.68 | 1,343,823.67 |
| 295,714.63 | விலச்சிய செடி இனப்பெருக்க நிலையம் | 985,854.48 | 409,147.95 | 576,706.53 |
| 3,065,886.40 | நாளந்த செடி இனப்பெருக்க நிலையம் | 5,963,253.57 | 3,195,529.85 | 2,767,723.72 |
| 1,000,778.60 | மகாஓயா இனப்பெறுக்க நிலையம் | 2,512,190.75 | 766,095.24 | 1,746,095.51 |
| 1,381,412.65 | மொனராகலை செடி இனப்பெருக்க நிலையம் | 2,331,959.19 | 1,067,144.50 | 1,264,814.69 |
| 1,058,004.41 | மாங்கேணி தோட்டம் | 1,410,671.56 | 423,201.78 | 987,470.78 |
| 8,478,916.93 | கொண்டச்சி செடி இனப்பெருக்க நிலையம் | 46,931,816.74 | 4,466,320.07 | 42,465,496.67 |
| **24,159,358.85** | **மொத்தம்** | **129,319,655.65** | **50,611,505.76** | **78,708,149.89** |

குறிப்பு - 8 (ஆ)

**அறுவடைபெறும் பயிர்ச்செய்கை - தேங்காய்**

| 31.12.2022 (ரூபா) | **தோட்டம்** | 2023.01.01 திகதிக்கான செலவினம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு திரட்டிய தேய்மானம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு தேறிய பெறுமதி (ரூபா) (ரூபா) |
|---|---|---|---|---|
| 692,459.27 | ஹாடி தோட்டம் | 2,465,953.32 | 1,081,631.53 | 1,384,321.79 |
| 464,577.26 | கமன்தளுவ தோட்டம் | 3,725,129.74 | 2,118,519.70 | 1,606,610.04 |
| 1.00 | புத்தளம் தோட்டம் | 431,998.76 | 431,997.76 | 1.00 |
| **1,157,037.53** | | **6,623,081.82** | **3,632,148.99** | **2,990,932.84** |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

| 2022.12.31 திகதிக்கு (ரூபா) | அறுவடை தராத பயிர்சசெய்கையின் செலவினம் | 2023.12.31 திகதிக்கு (ரூபா) |
|---|---|---|
| 93,717,023.22 | மரமுந்திரிகை குறிப்பு 9 (அ) | 43,248,820.47 |
| 4,363.000.74 | தேங்காய் குறிப்பு 9 (ஆ) | 2,759,655.33 |
| **98,080,023.96** | **மொத்தம்** | **46,008,475.80** |

**குறிப்பு 9 (அ)**

| 2022.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) | அறுவடை தராத பயிர்ச்செய்கை – மரமுந்திரிரைக<br>தோட்டம் | 2023.01.01 திகதிக்கு செலவினம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு நேரடிச் செலவினம் (ரூபா) ) | 2023.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 2,500,769.77 | ஹாடி தோட்டம் | - | 28,644.00 | 28,644.00 |
| 836,574.25 | கமன்தளுவ தோட்டம் | - | - | - |
| 18,527,780.81 | புத்தளம் தோட்டம் | 497,586.34 | 2,694,348.91 | 3,191,935.25 |
| 4,911,875.45 | எளுவன்குளம் செடி இனப்பெருக்க நிலையம |  | 621,185.90 | 4,306,431.28 |
| 1,376,042.93 | மாங்கேணி தோட்டம் | 1,376,042.93 | 597,158.71 | 1,973,201.64 |
| 870,926.45 | மகாஓயா செடி இனப்பெருக்க நிலையம் | - | - | - |
| 81,552.00 | மொனராகலை செடி இன.க நிலையம் | 81,552.22 | 250,635.00 | 332,187.00 |
| 2,103,465.79 | ஆராய்சி மற்றும் அபிவிருத்தி | 2,103,465.79 | - | 2,103,465.79 |
| 135,360.40 | நெதகமுவ பதனிடல் நிலையம் | 135,360.40 | - | 135,360.40 |
| 1,628,450.40 | பூநகரி தோட்டம் | 1,628,450.40 | - | 1,628,450.40 |
| 4,442,596.44 | வெள்ளங்குளம் தோட்டம் | 4,442,596.44 | - | 4,442,596.44 |
| 330,284.62 | விலச்சிய செடி இன. நிலையம் | - | - | - |
| 53,072,714.82 | கொண்டச்சி செடி இன. நிலையம் | 16,739,544.25 | 5,468,374.93 | 22,207,919.18 |
| 2,898,629.09 | திரியாய செடி இன. நிலையம் | 2,898,629.09 | - | 2,898,629.09 |
| **93,717,023.22** | **மொத்தம்** | **33,588,473.02** | **9,660,347.45** | **43,248,820.47** |

**குறிப்பு 9 (ஆ)**

| 2022.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) | அறுவடை தராத பயிர்ச்செய்கை - தேங்காய் | 2023.01.01 திகதிக்கு செலவினம் (ரூபா) | 2023.12.31 திகதிக்கு நேரடிச் செலவினம் (ரூபா) ) | 2023.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 1,833,521.57 | ஹாடி தோட்டம் | 1,018,361.38 | 80,022.30 | **1,098,383.68** |
| 2,529,479.17 | கமன்தளுவல தோட்டம் | 1,241,961.65 | 419,310.00 | **1,661,271.65** |
| **4,363,000.74** |  | **2,260,323.03** | **499,332.30** | **2,759,655.33** |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

| 2022.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) | குறிப்பு 10 | 2023.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) |
|---|---|---|
| | **ஏனைய சிறிய கருத்திட்டங்கள்** | |
| 482,874.09 | தேக்கு செய்கை கருத்திட்டம் | 482,874.09 |
| 93,650.00 | விளாம்பழக் கருத்திட்டம் | 93,650.00 |
| - | மரவள்ளி | - |
| 12,000.00 | மிளகு | 12,000.00 |
| - | உளுந்து | 145,740.58 |
| | பழவகைக் கருத்திட்டம் | 106,390.00 |
| **588,524.09** | | **840,654.67** |

| | குறிப்பு 11 | |
|---|---|---|
| | **நடைமுறைச் சொத்து** | |
| | **இருப்பு** | |
| 10,685,093.21 | மரமுந்திரிகைப் பருப்பு | 8,611,790.71 |
| 30,113,893.39 | பதனிடல் நிலையங்களிலுள்ள இருப்பு | 27,061,860.08 |
| 16,343,218,51 | மரமுந்திரிகைச் செடி | 20,060,120.78 |
| 14,951,472.29 | தோலுடனான மரமுந்திரிகை | 42,279,285.00 |
| 2,573,074.23 | பொதியிடல் அம்சங்கள் | 2,905,560.49 |
| 2,102,862.31 | நானாவீத | 4,565,309.49 |
| **76,769,613.94** | | **105,483,926.55** |

| 2022.12.31 (ரூபா) | குறிப்பு 12 | | 2023.12.31 (ரூபா) |
|---|---|---|---|
| | வர்த்தகக் கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டியவை | | |
| 8,263,310.76 | வர்த்தக கடன்பட்டோர் | 11,293,010.76 | |
| 291,695.00 | **குறைக்க :- அ.மு.க. ஒதுக்கம்** | | 10,894,367.76 |
| 7,971,615.76 | | | |
| 25,935,361.66 | கிடைக்க வேண்டியவை | 19,851,850.14 | |
| 2,106,184.42 | **குறைக்க :- இழப்பீடுகளின் மூலமான நட்டம்** | | 17,745,665.72 |
| **31,800,793.00** | | | **28,640,033.48** |

| | குறிப்பு 13 | |
|---|---|---|
| | **வைப்புக்கள் முற்பணம் மற்றும் முன் கொடுப்பனவு** | |
| 14,541,184.00 | முற்பணம் | 2,035,398.00 |
| 16,000.00 | சம்பள முற்பணம் | - |
| 30,793,050.40 | முன் கொடுப்பனவு | 2,327,405.00 |
| 5,288,423.20 | வாடகை மற்றும் வேறு வைப்புக்கள் | 5,388,423.20 |
| **50,638,657.60** | | **9,751,226.20** |

குறிப்பு 14 - காசும் காசுக்குச் சமமானவையும்

| 2022.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) | | | | 2023.12.31 திகதிக்கு செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 337,708.29 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1633704 | (நடைமுறை) | 5,963,501.18 |
| 8,487,922.27 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1633705 | (நடைமுறை) | 5,463,951.65 |
| 781,490.32 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1633710 | (நடைமுறை) | - |
| 659,122.04 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1633711 | (நடைமுறை) | - |
| 131,210,295.14 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1649789 | (சேமிப்பு) | 141,831,714.79 |
| 91,973.77 | இலங்கை வங்கி – கொள்ளுப்பிட்டி | 1649970 | (சேமிப்பு) | - |
| 15,593.10 | இலங்கை வங்கி – ஜா-எல | 813 | (நடைமுறை) | - |
| 7,750.00 | மக்கள் வங்கி - நுகேகொட | 174-1-001-30007348 | (நடைமுறை) | - |
| 4,587.44 | மக்கள் வங்கி - நுகேகொட | 174-2-001-1-0007348 | (சேமிப்பு) | - |
| 270,824.17 | மக்கள் வங்கி - நுகேகொட | 174-2-002-0-0007348 | (சேமிப்பு) | |
| 31,555.14 | பிரந்திய அபிவிருத்தி வங்கி | 134011100687 | (சேமிப்பு) | 31,555.14 |
| 37,840.00 | கையிலுள்ள காசு (அம்பேபுஸ்ஸ வி.நி.) | | | - |
| - | கையிலுள்ள காசு (காட்சியறை) | | | 1,158,160.00 |
| 27,540.00 | கையிலுள்ள காசு (பலங்கொட வி.நி.) | | | 48,720.00 |
| 21,320.00 | கையிலுள்ள காசு (நாரஹென்பிட்ட வி.நி.) | | | - |
| - | கையிலுள்ள காசு (இரத்தினபுரி) | | | 169,980.00 |
| 91,960.00 | கையிலுள்ள காசு (கொள்ளுப்பிட்டி வி.நி.) | | | 188,380.00 |
| 217,911.00 | கையிலுள்ள காசு (இராஜகிரிய வி.நி.) | | | 319,794.00 |
| 10,000.00 | சில்லறைக் காசு கட்டுநிதி | | | 9,500.00 |
| 80,000.00 | எரிபொருள் கட்டுநிதி | | | - |
| 10,000.00 | காசு கட்டுநிதி- முத்திரை | | | 10,000.00 |
| 275,000.00 | மரமுந்திரிகை விற்பனை நிலைய கட்டுநிதி | | | 282,500.00 |
| 200,000.00 | கையிலுள்ள காசோலை | | | - |
| 300,330.25 | கையிலுள்ள காசு (வணிக நாற்றுமேடை) | | | 201,601.00 |
| 9,892.00 | கையிலுள்ள காசு (விஸ்ரித்தல்) | | | 1,675.00 |
| 151,105.00 | கையிலுள்ள காசு (ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி) | | | 152,235.00 |
| 54,610.96 | கையிலுள்ள காசு (நெதகமுவ பதனிடல் நிலையம்) | | | 67,320.76 |
| 168,521.23 | கையிலுள்ள காசு (புத்தளம் பதனிடல் நிலையம்) | | | 232,968.96 |
| 7,404.84 | கையிலுள்ள காசு (ஹாடி தோட்டம்) | | | 261.00 |
| 28,327.52 | கையிலுள்ள காசு (கமன்தலுவ தோட்டம்) | | | 81,622.01 |
| 656.07 | கையிலுள்ள காசு (மாங்கேணி செடி இனப்பெருக்க நிலையம்) | | | 1,099.75 |
| 40,579.91 | கையிலுள்ள காசு (புத்தளம் தோட்டம்) | | | 5,881.91 |
| 11,589.25 | கையிலுள்ள காசு (எளுவன்குளம் தோட்டம்) | | | 12,347.68 |
| 19,400.00 | கையிலுள்ள காசு (எல்கடுவ செடி இனப்பெருக்க நிலையம்) | | | - |
| 154.70 | கையிலுள்ள காசு ( வெள்ளங்குளம் செடி இனப்பெருக்க நிலையம்) | | | 35,621.70 |
| 160.15 | கையிலுள்ள காசு (திரியாய செடி இனப்பெருக்க நிலையம்) | | | 160.15 |
| - | கையிலுள்ள காசு (மஹஓயா தோட்டம்) | | | 7,120.00 |
| 115.00 | கையிலுள்ள காசு (பூநகரி தோட்டம்) | | | 20,446.00 |
| 173,599.00 | கையிலுள்ள காசு (கொண்டச்சி தோட்டம்) | | | 294,913.00 |
| 5,861.00 | கையிலுள்ள காசு (வைன் கருத்திட்டம்) | | | 5,861.00 |
| **143,842,699.56** | **மொத்தம்** | | | **156,598,891.68** |

| 2022 (ரூபா) | | 2023 (ரூபா) |
|---|---|---|
| | குறிப்பு 15 | |
| | **ஏனைய தரப்பினர்களிடம் கிடைத்த கொடைகள்** | |
| 5,275,688.03 | வடக்கு, கிழக்கு கரையோர சமுதாய கருத்திட்டம் | 5,066,937.98 |
| 9,381,298.63 | சிறு கைத்தொழில் மேம்பாட்டு அமைச்சு | 9,220,261.81 |
| 266,262,059.51 | கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் | 231,870,018.69 |
| **280,919,046.17** | | **246,157,218.48** |
| | **குறிப்பு 16** | |
| | **மூலதன ஒதுக்கம்** | |
| 16,929,116.63 | மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் -வாகனம் | 16,929,116.63 |
| 512,730.22 | ஏனைய மூலதன ஒதுக்கம் | 512,730.22 |
| **17,441,846.85** | **மொத்தம்** | **17,441,846.85** |
| | குறிப்பு 17 | |
| | **ஓய்வூதிய கொடுப்பனவு செலுத்தல்** | |
| 42,948,044.00 | ஆண்டின் ஆரம்பத்தில் இருந்த மீதி | 35,789,916.00 |
| 4,656,007.00 | ஆண்டுக்கான கொடுப்பனவு | 8,517,181.00 |
| (11,814,135.00) | செலுத்தப்பட்ட/ செலுத்த வேண்டிய பணிக்கொ கொடுப்பனவு | (3,792,270.00) |
| **35,789,916.00** | **மொத்தம்** | **40,514,827.00** |
| | குறிப்பு 18 | |
| | **நீண்டகாலக் கடன்** | |
| 3,500,000.00 | நெல் சந்தைப்படுத்தல் சபை | 3,500,000.00 |
| **3,500,000.00** | | **3,500,000.00** |
| | **மொத்தம்** | |
| | **வர்த்தக கடன் கொடுத்தோர் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை** | |
| 35,448,561.19 | நானாவித கடன் கொடுத்தோர் | 64,939,680.20 |
| 7,098,240.94 | அட்டுறு செலவினம் | 8,024,991.02 |
| **42,546,802.13** | **மொத்தம்** | **72,964,671.22** |

- பணிக்கெடை செலுத்துவதற்கு ரூபா 40,514,827.00 ஆன தொகை முதலீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. இதற்காக முதலீடு செய்வது சம்பந்தமான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

## மேலதிக குறிப்புகளைச் சமர்ப்பித்தல்.

**குறிப்பு 20**

**மூலதன மற்றும் எதிர்பாராத அம்சங்கள்**

**மூலதன உருவாக்கம்**

20.1 இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான குறிப்பிடத்தக்களவான மூலதன உருவாக்கங்கள் அறிக்கை இடப்படும் திகதிக்கு அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை.

**எதிர்பாராத பொறுப்புக்கள்**

20.2 அறிக்கையிடும் திகதிக்கான எந்தவோர் எதிர்பாராத பொறுப்பும் வெளிப்பட்டிருக்கவில்லை.

**குறிப்பு 21**

**அறிக்கை காலப்பகுதிக்கு பின்னரான சம்பவங்கள்**

அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய சீராக்கல்கள் வெளிப்படுத்தல்கள்இந்தநிதிக்கூற்றுக்களுக்கு ஏற்புடையதாக இல்லை.

**குறிப்பு 22**

**22.1 சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலுத்தவேண்டிய கொடுப்பனவுகள்.**

| | |
|---|---|
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 3,500,000.00 |

**22.2 சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் அறவிடப்பட வேண்டிய தொகைகள்**

| | |
|---|---|
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 9,466,200.00 |
| தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு | 1,962,800.00 |
| | 11,429,000.00 |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

**2023.12.31** ஆம் திகதியுடன் நிறைவடையும்ஆண்டுக்கான இலாப நட்டம் மற்றும் வேறு விரிவான வருமானங்களுக்கான கூற்று

| **2022.12.31 (ரூபா)** | | | **2023.12.31 (ரூபா)** |
|---|---|---|---|
| 134,849,168.44 | விற்பனை | 01 | 176,317,074.88 |
| 83,472,666.14 | விற்பனை செலவினம் | 02 | 135,914,991.25 |
| **51,376,502.30** | மொத்த இலாபம் (நட்டம்) | | **40,402,083.63** |
| 77,500,000.00 | அரச கொடை (மீண்டெழும்) | | 80,400,000.00 |
| 69,390,183.13 | வேறு வருமானம் | 03 | 76,599,384.80 |
| **198,266,685.43** | | | **197,401,468.43** |
| 15,029,109.31 | விற்பனை மற்றும் விநியோக செலவினம் | 04 | 18,339,750.18 |
| 145,510,078.61 | நிருவாக செலவினம் | 05 | 144,792,740.06 |
| 23,101,087.38 | வேறு செலவினம் | 06 | 39,094,227.07 |
| 154,999.16 | நிதிச் செலவினம் | | 195,331.17 |
| 183,795,274.46 | | | 202,422,048.48 |
| **14,471,410.97** | ஆண்டுக்கான இலாபம்/(நட்டம்) | | **(5,020,580.05)** |
| | **வேறு விரிவான வருமானங்கள்** | | |
| **14,471,410.97** | ஆண்டுக்கான இலாபம் / (நட்டம்) | | **(5,020,580.05)** |
| (2,232,295.00) | ஆய்வுக் கணிப்பீட்டு இலாபம் /(நட்டம்) | | 153,725.00 |
| - | வேறு விரிவான வருமானங்களுக்கான வருமானவரி | | - |
| **(2,232,295.00)** | ஆண்டுக்கான வேறுவிரிவான வருமானங்கள் | | **153,725.00** |
| **16,703,705.97** | ஆண்டுக்கான உழைத்த மொத்த விரிவான வருமானங்கள் | | **(5,174,305.05)** |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தனம்

**2023.12.31 ஆம் திகதிக்கான இலாபநட்ட கணக்குக்கான குறிப்புகள்**

குறிப்பு 1

| விற்பனை | 2023 ஆண்டு | 2022 ஆண்டு |
|---|---|---|
| மரமுந்திரிகை பருப்பு | 167,922.980.38 | **113,791,178.44** |
| குறைக்க : மீளப்பெறுகை | (107,508.00) | - |
| | **167,815,472.38** | **113,791,178.44** |
| செடிகள் | 8,501,602.50 | 21,057,990.00 |
| தோலுடனான மரமுந்திரிகை | - | - |
| | **176,317,074.88** | **134,849,168.44** |

குறிப்பு 2

| | 2023 ஆண்டு | 2022 ஆண்டு |
|---|---|---|
| **2022.12.31 ஆம் திகதிக்கு வியாபாரக் கணக்கு** | | |
| **விற்பனை செலவினம்** | | |
| ஆரம்ப இருப்பு | 27,028,311.72 | 24,425,421.36 |
| மரமுந்திரிகை பருப்பு | 10,685,093.21 | 3,894,533.06 |
| மரமுந்திரிகை செடி | 16,343,218.51 | 20,530,888.30 |
| **கூட்டுக - கொள்வனவு கொள்வனவு** | - | - |
| உற்பத்திச் செலவினம்-மரமுந்திரகைபருப்பு குறிப்பு 2 .1 | 126,725,390.69 | 98,903,031.69 |
| உற்பத்திச் செலவினம் -மரமுந்திரிகைச்செடி குறிப்பு 2.2 | 20,876,162.21 | 13,985,793.66 |
| | 147,601,552.90 | 112,888,825.35 |
| **குறைக்க - இறுதி இருப்பு** | 174,629,864.62 | 137,314,246.71 |
| மரமுந்திரிகை பருப்பு | 8,611,790.71 | 10,685,093.21 |
| மரமுந்திரிகைசெடி | 20,060,120.78 | 16,343,218.51 |
| **குறைக்க:** | | |
| உள்ளக மாற்றல்கள் (செடி) | 6,780,440.16 | 21,303,755.70 |
| **விசேட செடி விநியோகம்** | 984,217.21 | 936,400.21 |
| உயிரிழந்த செடிகள் | 2,216,262.72 | 3,615,782.19 |
| மாதிரிகள் மற்றும அம்சங்கள் | 62,041.79 | 957,330.75 |
| | 38,714,873.37 | 53,841,580.57 |
| | **135,914,991.25** | **83,472,666.14** |

குறிப்பு 3

| வேறு வருமானங்கள் | 2023 ஆண்டு | 2022 ஆண்டு |
|---|---|---|
| வட்டி வருமானங்கள் (சேமிப்பு கணக்கு) | 3,471,898.56 | 4,667,302.86 |
| வட்டி வருமானங்கள் (இடர் கடன்/ விசேட கடன்) | 208,957.88 | 220,972.45 |
| தோலுடனான மரமுந்திரிகை இறக்குமதிக் கட்டணம் | - | 1,000,000.00 |
| நானாவித வருமானம் | 7,006,230.90 | 15,875,290.90 |
| விநியோக செலவினம் மீள்நிரப்பு | 1,029.00 | - |
| இபில்இபில் செடி விற்பனை | 69,750.00 | - |
| சுற்றுலா வீடுதி வாடகை வருமானம் | 61,860.00 | 117,200.00 |
| மூலதன கொடை தேய்மானம் | 62,629,190.06 | 42,786,840.22 |
| தேங்காய் வீற்பனை | 3,128,968.40 | 4,107,917.70 |
| வாசனைத் திரவிய உற்பத்தி விற்பனை | 21,500.00 | 614,659.00 |
| | **76,599,384.80** | **69,390,183.13** |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

குறிப்பு 4

| விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம் | மூலதனக் கொடை | 2023 ஆம் ஆண்டு | 2022 ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|
| விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | 18,339,750.18 | - | 18,339,750.18 | 15,029,109.31 |
| | 18,339,750.18 | | 18,339,750.18 | 15,029,109.31 |

குறிப்பு 5

| நிருவாக செலவினம் | கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம் | மூலதனக் கொடை | 2023 ஆம் ஆண்டு | 2022 ஆம் ஆண்டு |
|---|---|---|---|---|
| வணிக நாற்று மேடை | 1,728,275.50 | - | 1,728,275.50 | 2,618,117.96 |
| தலைமை அலுவலகம் | 128,178,252.61 | - | 128,178,252.61 | 129,447,214.74 |
| விற்பனை நடவடிக்கைகள் | 623,623.89 | - | 623,623.89 | 895,310.87 |
| அறுவடை பெறாத பயிர்ச்செய்கை | - | 2,440,826.53 | 2,440,826.53 | 981,754.00 |
| மனித வள அபிவிருத்தி | - | 298,600.00 | 298,600.00 | 5,000.00 |
| விஸ்தரித்தல் பிரிவு | - | 9,029,967.03 | 9,029,967.03 | 9,132,226.65 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | - | 2,493,194.50 | 2,493,194.50 | 2,430,454.39 |
| | **130,530,152.00** | **14,262.588.06** | **144,792,740.06** | **145,510,078.61** |

| குறிப்பு 6 | கூட்டுத்தாபனம் உழைத்த வருமானம் | மூலதனக் கொடைகள் | 2023 | 2022 |
|---|---|---|---|---|
| **வேறு செலவினகள்** | **-** | **-** | **-** | **-** |
| ஹெலோபெல்டீஸ் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் | - | 130,709.46 | 130,709.46 | 91,433.80 |
| அறுவடை பெறும் பயிர்ச் செய்கை - தேங்காய் | 3,517,791.89 | - | 3,517,791.89 | 1,482,884.13 |
| வாசனைத் திரவியம் கொள்வனவுக்கான செலவினம் | - | - | - | 662,758.00 |
| செடிகளுக்கான செலவினம் | - | 5,030,028.18 | 5,030,028.18 | 17,248,229.26 |
| மின்சாரம் வழங்குதல் (கொண்டச்சி தோட்டம்) | - | 28,199,434.82 | 28,199,434.82 | - |
| உயிரிழந்த செடிகள் | 2,216,262.72 | - | 2,216,262.72 | 3,615,782.19 |
| | **5,734,054.61** | **33,360,172.46** | **39,094,227.07** | **23,101,087.38** |

## இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்

**2023 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான திரட்டிய காசு பாய்ச்சக்கூற்று**

| 2022.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டு (ரூபா) | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான காசு பாய்ச்சல் | 2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டு (ரூபா) |
|---:|---|---:|
| 16,703,705.97 | ஆண்டுக்கான இலாபம் /நட்டம் | (5,174,305.05) |
| (1,697,353.10) | முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | 373,086.60 |
| | காசு அசைவு இல்லாத விடயங்களுக்கானசீராக்கல் | |
| 11,416,492.60 | தேய்மானம் | 11,992,822.60 |
| 2,736,980.19 | தேய்வு | 5,848,541.53 |
| 4,656,008.00 | பணிக்கொடை கொடுப்பனவுக்கான ஒதுக்கம் | 9,194,381.00 |
| 64,252.00 | அறவிட முடியாக் கடன் பதிவளிப்பு அல்லது ஒதுக்கம் | 106,948.00 |
| (6,837,703.50) | பணிக்கொடைக்கான மிகை ஒதுக்கம் | - |
| 1,716,845.00 | மோட்டார் வாகனங்களுக்கு பதிவளிப்பு செய்த செலவினம் | - |
| (646,578.84) | மோட்டார் வாகனங்களுக்கு பதிவளிப்பு செய்த திரட்டிய தேய்மானம் | - |
| (369,786.87) | வேறு தரப்பினர்களிடம் கிடைத்த கொடைகளைப் பதிவளித்தல் | (369,786.87) |
| 39,243.95 | ஏனைய சிறிய கருத்திட்டங்களைப் பதிவளித்தல் | - |
| (4,888,275.31) | வட்டி வருமானம் பெறுகை | (3,680,856.44) |
| (36,969,702.35) | அரச கொடைக்கான தேய்வு | (27,867,362.37) |
| (14,075,872.26) | செயற்படு மூலதனத்தின் மாற்றத்துக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் / நட்டம் | (9,576,531.00) |
| | செயற்படு மூலதனத்தின் மாற்றம் | |
| 14,182,543.37 | இருப்பு (அதிகரிப்பு)/ குறைவு | (28,714,312.58) |
| 15,525,174.63 | கடன்பட்டோர்- (அதிகரிப்பு)/ குறைவு | 3,053,811.52 |
| (6,825,739.75) | முற்பணம்முன்கொடுப்பனவுகள் -(அதிகரிப்பு)/ குறைவு | 40,887,431.40 |
| (8,405,120.92) | கடன் கொடுத்தோர் – அதிகரிப்பு / (குறைவு) | 29,491,119.01 |
| (2,172,327.32) | அட்டுறு செலவினம் -அதிகரிப்பு/ (குறைவு) | 926,750.08 |
| **12,304,530.01** | | **45,644,799.43** |
| (1,771,342.25) | | 36,068,268.43 |
| (4,976,432.50) | பணிக்கொடை செலுத்தல் | (4,469,470.00) |
| **(6,747,774,75)** | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தான தேறிய காசோட்டம் | **31,598,798.43** |
| | முதலீட்டு செயற்பாடுகளில் இருந்தான காசோட்டம் | |
| (11,058,103.55) | நிலையான சொத்துக் கொள்வனவு | (9,128,033.00) |
| (179,613.90) | மேற்கொள்ளப்பட்டு வரும் மூலதன செலவினம் | (15,591,578.60) |
| (26,488,469.85) | புதிய பயிர்ச்செய்கைகளில் முதலீடு செய்தல் | (10,159,679.75) |
| 4,888,275.31 | வட்டி வருமானம் பெறுகை | 3,680,856.44 |
| - | வேறு சிறிய கருத்திட்டங்களில் முதலீடு செய்தல் | (252,130.58) |
| **(32,837,911.99)** | | **(31,450,565.49)** |

| | நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசோட்டம் | |
|---|---|---|
| 29,000,000.00 | அரச கொடை | 47,000,000.00 |
| (5,447,351.00) | அமைச்சிடம் கிடைத்த கொடை | (34,392,040.82) |
| (16,033,037.74) | காசும், காசுக்கு சமமானவைகளினதும் தேறிய மிகை | 12,756,192.12 |
| 159,875,737.30 | ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும் | 143,842,699.56 |
| **143,842,699.56** | ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளும் | **156,598,891.68** |
| **2022.12.31 திகதிக்கு** | | **31.12.2023 திகதிக்கு** |
| 1,943,877.88 | கையிலுள்ள காசு | 3,308,168.92 |
| 10,289,586.02 | ஆவங்கியிலுள்ள காசு | 11,427,452.83 |
| 131,609,235.66 | சேமிப்பு | 141,863,269.93 |
| **143,842,699.56** | | **156,598,891.68** |

| 2023.12.31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான உரிமை மாற்றம் பற்றிய கூற்று | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாற்றம் | ஆரம்ப மூலதனம் (ரூபா) | அரச மூலதனம் (ரூபா) | வேறுதரப்பினர்களிடம் கிடைத்த கொடைகள் | மூலதன ஒதுக்கம் (ரூபா) | இலாப நட்ட கணக்கு (ரூபா) | மொத்தம் (ரூபா) |
| 2022.01.01 ஆம் திகதிக்கு மீதி | 40,000,000.00 | 289,534,925.21 | 286,736,184.04 | 17,441,846.85 | (167,065,129.24) | 466,647,826.86 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | - | - | - | - | (1,697,353.10) | (1,697,353.10) |
| ஆண்டினுள் கிடைத்த கொடைகள் | - | 29,000,000.00 | - | - | - | 29,000,000.00 |
| இலாப நட்டக் கணக்குக்கு மாற்றுதல் | - | (36,969,702.35) | (5,817,137.87) | - | - | (42,786,840.22) |
| மொத்த விரிவான வருமானம் | - | - | - | - | 14,471,410.97 | 14,471,410.97 |
| தேறிய உண்மை அதிகரிப்பு /(குறைவு) | - | - | - | - | 2,232,295.00 | 2,232,295.00 |
| 2022.12.31 ஆம் திகதிக்கு மீதி | **40,000,000.00** | **281,565,222.86** | **280,919,046.17** | **17,441,846.85** | **(152,058,776.37)** | **467,867,339.51** |
| 2023.01.01 ஆம் திகதிக்கு மீதி | 40,000,000.00 | 281,565,222.86 | 280,919,046.17 | 17,441,846.85 | (152,058,776.37) | 467,867,339.51 |
| முன்னைய ஆண்டுக்கான சீராக்கல் | - | - | - | - | 373,086.60 | 373,086.60 |
| ஆண்டினுள் கிடைத்த கொடைகள் | - | 47,000,000.00 | - | - | - | 47,000,000.00 |
| இலாப நட்டக் கணக்குக்கு மாற்றுதல் | - | (27,867,362.37) | (34,761,827.69) | - | - | (62,629,190.06) |
| வருடாந்த இலாபம் / (நட்டம்) | - | - | - | - | (5,020,580.05) | (5,020,580.05) |
| தேறிய உண்மையான அதிகரிப்பு / (குறைவு) | - | - | - | - | (153,725.00) | (153,725.00) |
| **2023.12.31 ஆம் திகதிக்கு மீதி** | **40,000,000.00** | **300,697,860.49** | **246,157,218.48** | **17,441,846.85** | **(156,859,994.82)** | **447,436,931.00** |

## 11. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

355

எனது இல. ARI/D/SLCC/FA/2023/01 திகதி : 2024 அக்டோபர் மாதம் 11 ஆம் திகதி

தவிசாளர்,
இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்.

**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வேறு சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மாற்றம் பற்றிய கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்புரையாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளை உள்ளடக்கிய 2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளையின் பேரில் கணக்காய்வு செய்யப்பட்டது. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்களுக்கான அடிப்படை எனும் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை, காசுப்பாய்ச்சல் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கான இலங்கை கணக்கீட்டு

நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) 2023 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைய மரமுந்திரிகை பருப்பு விற்பனைப் பெறுமதி ரூபா 167,815,472 ஆகவும், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்கு அமைய மேற்படி பெறுமதி ரூபா 160,485,428 ஆகவும் இருப்பதனால் ரூபா 7,330,044 ஆன வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனம் மீளாய்வு ஆண்டில் மரமுந்திரிகை பருப்பு ஒரு கிலோ கிறாம் உற்பத்தி செய்வதற்கான செலவினத்தை கணிப்பீடு செய்யும் போது பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கூறுகளுக்கு மேலதிகமாக ஆண்டின் ஆரம்ப இருப்புப் பெறுமதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளதனால் உற்பத்திச் செலவினம் மிகையாக கணிப்பிடப்பட்டு 2023 ஆம் ஆண்டின் இறுதி இருப்புப் பெறுமதி ரூபா 6,985,467 இனால் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

(இ) ஆதனம் பொறியைப் பயன்படுத்த உத்தேசிக்கும் நிலைக்குக் கொண்டு வருவதற்காக தாங்கிக் கொள்ளப்பட்ட செலவினத்தை ஒரே தடவையில் மூலதனமாக்காது பயன்படுத்திக் கொள் உத்தேசிக்கப்பட்ட நிலைமைக்குக் கொண்டு வரும் வரை மேற்கொண்டுவரும் வேலைகளின் கீழ் வகைப்படுத்திக் கொள்ள வேண்டுமாயினும், கூட்டுத்தாபனம் கொண்டச்சி தோட்டத்தில் மின்சார வேலி நிர்மாணிக்கத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கான பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டமைக்கு செலவிடப்பட்ட செலவினமான ரூபா 513,912 ஐ 2023 ஆண்டு காணிகள் கணக்கிற்கு செலவு வைத்துள்ளது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் கடன் அறவிட்டுக் கொள்ளும் காலஎல்லை 60 நாட்களாக உள்ள போதும், 90 நாட்களையும் விஞ்சியுள்ள வர்த்தகக் கடன்பட்டோர் மீதி ரூபா 4,982,960 ஆகும். மேற்படி மீதியில் இரண்டு வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற கொழும்பு பிரதேசத்தில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிடம் அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 1,474,410 ஆன கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்வதற்கு முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனம் அப்போது காணப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் ரூபா 9,466,200/= ஆன மரமுந்திரிகை கன்றுகள் வழங்கியுள்ளது. மேற்படி அமைச்சு தற்போது இல்லாதொழிக்கப்பட்டுள்ளதன் காரணமாக இக்கடனை அறவிட்டுக் கொள்ளும்

ஆற்றல் இல்லை எனினும் அதற்காக கணக்குகளில் சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஊ) 01 வருடத்திற்கு மேற்பட்ட வேறு கடன்பட்டோர் பெறுமதி ரூபா 17,447,496 ஆயினும், வேறு கடன்பட்டோருக்கு ஒதுக்கப்பட்ட இழப்பீட்டு நட்டம் ரூபா 2,106,184/= ஆகும். 2018 ஆம் ஆண்டு முதல் வேறு கடன்பட்டோருக்கு இழப்பீட்டு நட்டமாக ஒவ்வொரு வருடமும் ஒரே பெறுமதி பேணிவரப்பட்டுள்ள போதிலும், மேற்படி பெறுமதியை வருடாந்தம் இற்றைப்படுத்தல் அல்லது பெறுமதியை பதிவழிப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனம் புத்தளம் மாவட்டத்தில் எழுவங்குளம் தோட்டத்தில் 2000 ஆம் ஆண்டு பயிர் செய்திருந்த தேக்கு மரங்களில் 2023 ஆம் ஆண்டளவில் பலகை பெறுவதற்குரிய நிலைமை வரை வளர்ந்திருந்த மரங்களின் எண்ணிக்கை 4253 ஆயினும், மேற்படி மரங்களின் பெறுமதிகளை மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 (ஊழியர் பயன்கள்) இன் 139 ஆம் பிரிவுக்கு அமைய ஓய்வூதிய பணிக்கொடை ஒதுக்கத்தை முறையான முதலீட்டுத் திட்டத்திற்கு அமைய முதலீடு செய்ய வேண்டுமாயினும் மீளாய்வு ஆண்டின் இறுதியில் ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கக் கணக்கில் ரூபா 40,514,827 ஆன மீதிக்கு இசைவாக எந்தவொரு முதலீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஐ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் 135(ஆ) பிரிவுக்கு அமைய நிறுவனம் குறித்த பயன்கள் திட்டத்திற்கு ஆரம்ப மீதி முதல் இறுதி மீதி வரை ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பித்திருக்கவில்லை. கூட்டுத்தாபனம் அதன் நடைமுறை சேவைகள் செலவினம், வட்டி வருமானம் அல்லது செலவினம், மீளாய்வு ஆண்டு தொடர்பாக மேற்கொள்ளும் கொடுப்பனவுகள் மற்றும் ஆயுட் காலப் பயன் இலாபம் /நட்டம் போன்ற விடயங்களை தனித்தனியாகக் குறிப்பிடுதல் வேண்டுமாயினும், நிதி நிலைமைக் கூற்றுக்களில் குறித்த பயன்கள் திட்டத்திற்குரிய குறிப்புக்களில் நடப்புச் சேவைசார் செலவினம், வட்டிச் செலவினம், ஆயுட் கால நட்டம் ஆகிய கூறுகளின் கூட்டுத்தொகையான ரூபா 8,517,181 ஆன பெறுமதி ஆண்டுக்கான செலவினமாக நிதிக் கூற்றுக்களில் குறிப்பு 19 இல் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஒ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 79 ஆம் பிரிவுக்கு அமைய தற்போது பயன்பாட்டிலுள்ள மொத்த தேய்மானம் செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மொத்த முன்கொண்டு செல்லும் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிளப்படுத்தப்பட வேண்டுமாயினும், மொத்தமாக தேய்மானம் செய்யப்பட்ட ரூபா 136,155,472 ஆன தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் பற்றி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுததப்பட்டிருக்கவில்லை.

(ஓ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 73 ஆம் பிரிவுக்கு அமைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் கொள்ளப்படுகின்ற முறையே செலவினம் ரூபா 129,319,656 மற்றும் ரூபா 6,623,082 ஆன முதிர்ச்சியடைந்த பயிர் செய்கையின் ஆண்டின் ஆரம்ப மீதி, ஆண்டில் சேர்ந்துள்ளவை, ஆண்டில் அகற்றல் மற்றும் ஆண்டின் இறுதி மீதியைக் குறிப்பிடுகின்ற ஒப்பீட்டு ரீதியாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஔ) 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வு ஆண்டு வரை கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டம் உழைத்துள்ளதுடன், அண்மித்த 05 வருடங்களில் அதாவது 2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்குள் அரச கொடைகளை பொருட்படுத்தாது கடந்த 05 வருட காலப்பகுதியில் கூட்டுத்தாபன நிதிக் கூற்றுக்களில் கற்புல நட்டம் ரூ.மி. 148 முதல் ரூ.மி. 102 வரை பரந்துள்ளது. அதற்கமைய, கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான செயற்பாட்டு நட்டம், பதவியணி வெற்றிடங்கள், காணப்படுகின்ற மரமுந்திரிகை தோட்டங்கள் உச்சளவில் பயிர் செய்யப்படாமை காரணமாக உற்பத்தி குறைவடைதல் போன்ற காரணங்களினால் அரசின் கொடை இன்றி கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் சவாலாக மாறியுள்ளது என்பதுடன் அரச கொடைகள் கிடைக்காத பட்சத்தில் தொடர்ச்சியான நிலைத்திருத்தலும் சிக்கலானதாகும் என்பதும் அவதானிப்புச் செய்யப்படுகின்றது

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இந்த கணக்காய்வு அறிக்கையின் திகதியின் பின்னர் எனக்குப் பெற்றுத் தர எதிர்பார்க்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாதுள்ள தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதன் மூலம் கருதப்படுகின்றன. குறித்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துக்கள் மூலம் ஏனைய தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை என்பதுடன், நான் அது பற்றி எந்தவொரு வகையிலுமான உறுதிப்படுத்தலையோ அல்லது கருத்துக்களை வெளியிடுவதோ இல்லை. நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கணக்காய்வு சம்பந்தமான எனது பொறுப்பாக இருப்பது மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்களை பெற்றுக் கொள்ள இயலுமாகின்ற போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின் போது அல்லது வேறு விதகமான பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைய போதியளவில் பெருத்தமற்றதாக உள்ளதா என்பது பற்றி ஆராய்வதாகும்.

கூட்டுத்தாபனத்தின் 2023 ஆண்டறிக்கையை வாசிக்கும் போது அதன் குறிப்பிடத்தக்களவில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று நான் தீர்மானம் செய்யும் பட்சத்தில் சீராக்கல் செய்வதற்காக நிருவாகத் தரப்பினருக்கு மேற்படி விடயங்களை அறிவித்தல் வேண்டும். மேலும் சீராக்கல் செய்யப்படாத தவறுகள் குறிப்பிடப்பட்டிருப்பின், அவை அரசியலமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் நான் எதிர்காலத்தில் பாராளுமன்ற சபாபீடத்தில் வைக்கும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் பற்றிய முகாமைத்துவத்தின் மற்றும் நிருவாகத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு தரநியமங்களுக்கு தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களை தயார் செய்யும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியாக பேணிவரும் ஆற்றலை தீர்மானம் செய்வது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் கூட்டுத்தாபனத்தை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்ப்பதாயின் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத பட்சத்தில் நடவடிக்கைகளை நிறுத்திவிட நடவடிக்கை மேற்கொள்ளுமாயின் இன்றேல் தொடர்ச்சியான நிலைத்திருத்தலின் அடிப்படையில் கணக்குப் பதிவு மற்றும் கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பில் பரிசோதிக்கும் பொறுப்பை நிருவகிக்கும் தரப்பினர் ஏற்றுக் கொள்வார்கள்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தமது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் பற்றிய புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணிவரப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடும் என்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக கூட்டுத்தாபனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய பொருண்மையான உறுதியற்ற நிலைமை உள்ளதா என்பது பற்றி பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்கு நிறுவனத்தின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் பற்றிய அடிப்படையைப் பயன்படுத்திக் கொள்வதன் ஏற்புடையதன்மை தீர்மானம் செய்யப்பட்டது. பொருண்மையான உறுதியற்ற நிலைமை காணப்படுவதாக நான் தீர்மானிக்கின்ற சந்தர்ப்பத்தில் நிதிக் கூற்றுக்களில் அது பற்றிய வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன், மேற்படி வெளிப்படுத்தல்கள் போதியளவிலானதாக இல்லை எனின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலைமைகளின் பேரில் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் நிறைவு செய்யப்பட முடியும்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது மற்றும் வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதம உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் பற்றி கணக்கீட்டு அலுவலரை அறிவுறுத்தியுள்ளேன்.

## 2. வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1 எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை கூட்டுத்தாபனம் பேணிவந்திருந்தது என்பது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனம் சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளன என்பது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு அடிப்படையாக அமையும் பகுதியில் 1.2 (ஈ), (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஓ) மற்றும் (ஒ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்களைத் தவிர்த்து கடந்த ஆண்டில் நான் மேற்கொண்டிருந்த சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் கூட்டுத்தாபனத்துடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது கூட்டுத்தாபனத்தினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

| | **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கான தொடர்பு** | **அவதானிப்பு** |
|---|---|---|
| (அ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டம் | 2011 ஆண்டு முதல் வருமான வரி செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி செலுத்துவதற்கு மற்றும் வருமான வரி அறிக்கைகளை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவிலலை. எனினும் நிதிக் கூற்றுக்களில் மேற்படி கால எல்லை தொடர்பாக ரூபா 779,483/= ஆன தடுத்து வைக்கப்பட்ட வரி கிடைக்க வேண்டிய மீதியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 18 ஆம் பிரிவு | விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி முதல் முப்பது நாட்களுக்குள் கணக்காய்வுக் கட்டணத்தை தீர்த்துவைத்தல் வேண்டுமாயினும், 2024 யூன் மாதம் 11 ஆம் திகதிக்கு தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுக் கட்டணம் ரூபா 1,934,000/= ஆகக் காணப்பட்டது. |
| (இ) | 2012 யூலை 24 ஆம் திகதிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தீர்மானம் | கூட்டுத்தாபனத்திற்கு சட்டபூர்வமான உரித்து இல்லாத காணிகளை சட்டபூர்வமான சாட்டுதல் செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு அறிவித்துள்ள போதிலும், பிரதேச செயலகங்கள் |

| | | |
|---|---|---|
| | | மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள 11363 ஏக்கர் அளவான காணிகளின் சட்டபூர்வமான உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு சாட்டுதல் செய்துகொள்வதற்கு 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிகளுக்குள் குறித்த சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொண்டு பயன்படுத்திக் கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பது.

### 2.3 வேறு விடயங்கள்

(அ) மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் மரமுந்திரிகை பயிர் செய்யப்பட்டிருந்த நிலத்தின் அளவு சுமார் 3449 ஏக்கர்களாக காணப்பட்டதுடன், விளைச்சல் தரும் மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 51,685 ஆகக் காணப்பட்டன. மேற்படி மரங்களில் பதிவழிப்புச் செய்யப்பட்ட தேறிய பெறுமதி ரூபா 78,708,150/= ஆக நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் மரமுந்திரிகை மரம் கணிப்பெடுப்பை மேற்கொள்ளல், மரங்களை இலக்கமிடல் மற்றும் மரங்கள் பற்றிய பதிவேட்டை தயார் செய்வது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் இணையத்தளம் ஊடாக இணைய ஒன்லைன் முறையியலில் மரமுந்திரிகை பருப்பு விற்பனை செய்வது ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும் மேற்படி இணையத்தளம் செயலிழந்ததன் காரணமாக 2023 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை ஒன்லைன் விற்பனை ரூபா 32,230 ஆன குறைந்த பெறுமானத்தைக் கொண்டிருந்தது.

(இ) 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சேமிப்புக் கணக்கில் காணப்பட்ட ரூபா 141,831,715 ஆன மீதி உச்சளவு விளைதிறன்மிக்கவாறு முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அப்போது காணப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் தலையீட்டுடன் தோலுடனான மரமுந்திரிகை கொள்வனவு செய்வதற்காக 2005 ஆம் ஆண்டு மீளச் செலுத்தும் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தல் சபையிடம் பெற்றுக் கொண்ட ரூபா 3,500,000/= மற்றும் அதற்கான வட்டி ரூபா 927,500/= ஆன தொகையை மீளாய்வு ஆண்டு வரை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கூட்டுத்தாபனத்தை தாபிப்பதற்காக வெளியிடப்பட்ட 60/7 ஆம் இலக்க 1973 மே மாதம் 25 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் முதலாவது அட்டவணையில் (அ), (ஆ), (இ), (ஈ), (ஊ) மற்றும் (ஏ) ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பாக 2013 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் மிகக் குறைவாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதாவது அமைச்சருக்கு அறிவுரை வழங்குதல், மரமுந்திரிகை உற்பத்தியை பதனிடல், சந்தைப்படுத்தல், ஏற்றுமதியை மேம்படுத்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகம் தொடர்பாக வெளித் தரப்பினர்களுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளல், ஆராய்தல், ஆராய்ச்சி நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள செயற்பட்டிருக்கவில்லை.

(ஊ) மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான /வசம் உள்ள 13 தோட்டங்களின் காணிகளின் அளவு 11363 ஏக்கர்கள் ஆகும் என்பதுடன், இவற்றில் 3449 ஏக்கர் மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மரமுந்திரிகை பயிர் செய்யப்படாத காணிகளின் விகிதம் 70% ஆகும். மேலும் விளைச்சல் அறிக்கைகளுக்கு அமைய 2019 ஆண்டு முதல் 2023 ஆம் அண்டு வரையான காலப்பகுதியில் மெ.தொ. 157.81 முதல் 60.40 வரை மரமுந்திரிகை விளைச்சல்கு குறைவடைந்து சராசரி மரமுந்திரிகை உற்பத்தி மெ.தொ. 107.54 ஆன பெறுமானத்தைக் கொண்டிருந்தது. ஒட்டு மரமுந்திரிகை பயிர்கள் ஒரு ஏக்கருக்கு 70 உம், விதை மரமுந்திரிகை மரங்கள் ஒரு ஏக்கருக்கு 40 உம் என்ற வகையில் பயிர்செய்யப்பட்டதன் மூலம் 2022 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை விளைச்சல் மெ.தொ. 88.24 ஆகக் காணப்பட்டதனால் ஒரு ஏக்கருக்கான விளைச்சல் மரமுந்திரிகை கிலோ கிறாம் 25.38 ஆன குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது. மீளாய்வு ஆண்டின் இறுதியளவில் மேற்படி தோட்டங்களில் காய்க்கும் மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை 51685 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில் ஒட்டு மரமுந்திரிகை மரங்கள் மூலம் பெற்ற விளைச்சல் மெ.தொ. 60.40 ஆக இருந்ததுடன், ஒரு ஏக்கருக்கான விளைச்சல் கிலோ கிறாம் 17.64 ஆக் காணப்பட்டது. அதற்கமைய ஒரு மரத்தின் சராசரி விளைச்சல் 1.17 கிலோ கிறாம் எனும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்ட போதும், உற்பத்தியை அதிகரித்துக் கொள்ள வெற்றிகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான புத்தளம் கமன்தலுவ மற்றும் அம்பாறை ஹாடி தோட்டங்களில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை முறையே 4184 மற்றும் 1147 ஆகக் காணப்பட்டதுடன், முதிர்ச்சியடையாதவை 1147, விளைச்சல் பெறுபவை 2391 மற்றும் காய்காதவை 646 என்ற வகையில் இவை காணப்பட்டன. 2023 ஆம் ஆண்டில் தேங்காய் அறுவடை 57425 காய்களாகக் காணப்பட்டதுடன், அதன் விற்பனை வருமானம் ரூபா. 2,613,047/= ஆகக் காணப்பட்டது. அதற்கமைய ஒரு மரத்தின் வருடாந்த தேங்காய் விளைச்சல் 24 காய்களாகும் என்பதுடன், விற்பனை வருமானம் ரூபா. 1,092/= ஆகக் குறைவடைந்தமைக்கு தென்னை மரங்களின் பராமரிப்பு மற்றும் உரம் இடுவதன் பலவீமான நிலைமைகள் மற்றும் காய்க்காத மரங்கள் 491 ஐ அகற்றல்

மற்றும் அவற்றுக்குப் பதிலாக புதிய கன்றுகளை நாட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக் கூட்ட அறிக்கை இலக்கம் SLCC/PLC/CI/22/2023 இல் இலங்கையில் சுமார் 70000 ஹெக்டயர் அளவான மரமுந்திரிகை பயிர் செய்கை காணப்படுவதுடன், வருடாந்தம் மெ.தொ. 10000 - 120000 அளவு மரமுந்திரிகை பழத்தின் கழிவுகள் மற்றும் மரமுந்திரிகை உற்பத்தியின் பின்னர் 75% ஆன மரமுந்திரிகைத் தோல் என்ற வகையில் பருமட்டாக மெ.தொ. 59415 அகற்றப்படுகின்றன. கூட்டுத்தாபத்தின் இந்த கழிவுகளாக அகற்றப்படுகின்ற மரமுந்திரிகை பழங்கள் மற்றும் மரமுந்திரிகை தோல் மூலம் உப உற்பத்திகளை மேற்கொள்ள அல்லது காணப்படுகின்ற உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு மேற்படி உற்பத்திக் கைத்தொழிலாளர்களை கண்டுபிடித்து மரமுந்திரிகை பழங்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை மேற்காண்டிருக்கவில்லை.

(ஐ) நெதகமுவ பதனிடல் நிலையத்தில் காணப்படுகின்ற மின் பிறப்பாக்கி இயந்திரம், பொய்லர், மரமுந்திரிகை தோல் மூலம் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் மற்றும் புத்தளம் பதனிடல் நிலையத்தில் காணப்படுகின்ற பொய்லர் செயலிழந்துள்ளதுடன் அவற்றைப் புதுப்பித்துப் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நெதகமுவ பதனிடல் நிலையத்தில் மரமுந்திரிகை பதனிடல் பொய்லர் 2015 ஆம் ஆண்டு முதல் செயலிழந்துள்ளதுடன், மரமுந்திரிகை அவித்தல் செயன்முறை தடைப்பட்டுள்ளது. சேதமடைந்துள்ள பொய்லரை அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஓ) நெதகமுவ மரமுந்திரிகை பதனிடல் நிலையத்தின் தரப்படுத்தல் மற்றும் பொதியிடல் பிரிவுக்கு 2021 ஆம் ஆண்டு ரூபா 8,100,000/= ஆன தொகை செலவிடப்பட்டுள்ள ஒரு நிமிடத்திற்கு 60 பக்கட் பொதியிடக்கூடிய தன்னியக்க பொதியிடல் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை மேற்படி பொதியிடல் இயந்திரம் பயன்படுத்தப்படாது செயலிழந்து காணப்பட்டது.

(ஔ) கொண்டச்சி தோட்டத்தை புனரமைப்புச் செய்வதன் கீழ் யானை வேலி நிர்மாணித்தல், டிரக்டர் மற்றும் நீர் பவுசர் கொள்வனவு செய்தல் மற்றும் கட்டிடம் நிர்மாணித்தல் ஆகிய பிரதான பணிகளுக்கு கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர்செய்கை அபிவிருத்தி சார்ந்த கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி மேம்படுத்தல் அமைச்சினால் ரூபா 225,000,000 ஆன ஏற்பாடுகள் வழங்கப்பட்டு அக்கருத்திட்டம் 2021 ஆண்டில் நிறைவு செய்யப்பட வேண்டியிருந்தது. 26 கிலோ மீற்றர் நீளமான யானை வேலியை நிர்மாணித்தல், குழாய் கிணறுகளை மீளத் தாபித்தல், கொண்டச்சி தோட்டத்தின் சுற்றுலா விடுதியை புதுப்பித்தல் மற்றும் மின்சாரம் பெற்றுக் கொள்வது 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(க) நிலையப் பொறுப்பு அலுவலர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்க கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, கராம்பு, வெற்றிலை உள்ளிட்ட சிறிய பெருந்தோட்டப் பயிர்செய்கைகள் அபிவிருத்திக் கைத்தொழில் சார்ந்த ஏற்றுமதி மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் ரூபா 15,653,000/= ஆன தொகை ஒதுக்கம் செய்யப்பட்டு 07 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டிருந்தது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பயன்படுத்திக் கொள்ளக்கூடியவாறு பூரணமாக நிர்மாணித்து முடிக்கப்பட்டிருக்கவில்லை.

(ச) காணி கொள்ளல் கட்டளைச் சட்டத்தின் கீழ் (460 ஆவது அத்தியாயம்) 38 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் 80 ஆம் இலக்கம் மற்றும் 1980 மார்ச் மாதம் 14 ஆம் திகதிய இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் கம்பஹா மாவட்டத்தின் மினுவங்கொட பிரிவின் தாசியபத்துவ கலுவெல்கொட கிராமத்தில் 01 ஏக்கர் 02 ரூட் 29 பர்சஸ் அளவான பாரிய காணிப் பகுதி கம்பஹ மாவட்ட அரசாங்க அதிபரினால் சாட்டுதல் செய்துகொள்ளப்பட்டு 1988 சனவரி 01 ஆம் திகதிய சாட்டுதல் செய்யும் சான்றிதழ் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு மரமுந்திரிகை பதனிடல் நிலையமொன்றை நிர்மாணிக்கவென சாட்டுதல் செய்யப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டு வரையும் இந்தக் காணி சாட்டுதல் செய்யப்பட்டு 35 வருடங்கள் கடந்துள்ள போதும் அக்காணியை கூட்டுத்தாபனத்தின் பெயரில் சாட்டுதல் செய்துகொள்ளத் தவறியுள்ளமை.

(ஐ) கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கி கொல்லுப்பிட்டி கிளையிடமிருந்து 2017.09.14 ஆம் திகதிய 081430937 ஆம் இலக்க அடகுக் கடன் உடன்படிக்கைக்கு செய்துகொள்ளப்பட்டு புத்தளம் மரமுந்திரிகை பதனிடல் தொழில்சாலை அமைந்துள்ள சேக்குடியிருப்புத் தோட்டம் அடகு வைக்கப்பட்டு ரூபா 10,000,000 ஆன கடன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டு, 2018.09.19 ஆம் திகதியளவில் பெற்றுக் கொண்ட கடன் தொகை செலுத்தி முடிக்கப்பட்டுள்ள போதிலும் புத்தளம் காணிகள் மற்றும் மாவட்ட பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த அடகு உடன்படிக்கையை ரத்துச் செய்து கூட்டுத்தாபனத்திற்கு காணியை சாட்டுதல் செய்துகொள்ள 2024.02.29 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஞ) கூட்டுத்தாபனத்தின் நீர் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டத்திற்கு அமைச்சின் ஏற்பாடுகள் மூலம் ரூ.மி. 100 ஆன தொகை 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட போதும், இக்கருத்திட்டம் 2023 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(த) மன்னார் மாவட்டத்தின் கொண்டச்சி மரமுந்திரிகை தோட்டத்தில் கிழக்கு எல்லையில் கல்லாறு ஆறு அமைந்துள்ள பிரதேசத்தில் 02 ஏக்கர் நிலப்பகுதி ஒப்பந்தம் இன்றி மின்சார சபையின் கருத்திட்டமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2023 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இலங்கை மின்சார சபையின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், எந்தவொரு குத்தகை வருமானமோ அல்லது வாடகை வருமானமோ பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ந) புத்தளம் பதனிடல் நிலையத்தில் 2021 ஆம் ஆண்டு 10% ஆன தடுத்துவைத்தல் வைப்புத் தொகை தவிர ரூபா 7,092,000 செலவிடப்பட்டு மரமுந்திரிகை தன்னியக்க பதனிடலுக்காக கொள்வனவு செய்த இயந்திரம் பயன்படுத்த முடியாதிருப்பதனால் எந்தப் பயனும் பெறாது 2023.12.31 அளவில் பயனற்றதாக இருந்தது. வழங்குனருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சின் சட்டப் பிரிவின் ஆலொசனையின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ள பணிப்பாளர் சபை அறிவித்துள்ள போதிலும் 2023.12.31 ஆம் திகதியளவில் இயந்திரத்தின் வழங்குனருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ப) புத்தளம் கமன்தலுவ மரமுந்திரிகை தோட்டத்தின் பம்பிக்குளம் வாவியை அண்மித்த பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு பறறி ரஸ்நாயக்கபுர பொலிசில் மற்றும் பொலிஸ் மாஅதிபருக்கு 2021 ஆம் ஆண்டு கூட்டுத்தாபனத்தின் தவிசாளர் அறிவித்திருந்த போதிலும் குறித்த சட்டவிரோத மணல் அகழ்வை நிறுத்தத் தவறியுள்ளது. அதன் காரணமாக தோட்டத்தின் பாதுகாப்பு மற்றும் சுற்றாடலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

(ம) கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகை தோட்டங்களில் 2023 ஆம் ஆண்டின் இலக்கு அறுவடை மற்றும் குறித்த ஆண்டில் பெற்ற தோலுடனான மரமுந்திரிகை அறுவடையுடன் ஒப்பிடும் போது 13 தோட்டங்களில் கொண்டச்சி தோட்டம் தவிர ஏனைய 12 தோட்டங்களில் இலக்குகளை அடைந்துகொள்ள முடியாது போயுள்ளது. மேற்படி இலக்குகளை அடைந்துகொள்ளாததன் விகிதம் 49% ஆகக் காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டில் மரமுந்திரிகை தோட்டங்கள் 02 தவிர ஏனைய 11 தோட்டங்களிலும் தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் கிலோ கிறாம் 15,148 இனால் குறைவடைந்துள்ளது.

(ய) அநுராதபுரம் மாவட்ட அலுவலகத்தில் உதவி முகாமையளர் சமர்ப்பித்துள்ள தகவல்களுக்கு அமைய 2010 ஆம் ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை மரமுந்திரிகை பயிர் செய்கை மேற்கொள்ள வேண்டிய இலக்குக் காணிகள் 5085 ஏக்கர்களாகும் என்பதுடன், மரமுந்திரிகை பயிர் செய்யப்பட்ட ஏக்கர்களின் அளவு 4929 ஏக்கர்களாகும். 2020 முதல் 2022 ஆண்டு வரை நிவாரண உதவி மரமுந்திரிகை பயிர் செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 569 ஏக்கர்களுக்கு விவசாயிகள் 467 பேருக்கு மரமுந்திரிகை கன்றுகள் 39865 பகிர்ந்தளிக்கப்பட்ட போதும் அநுராதபுரம் மாவட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் பதனிடல் கைத்தொழிலில் ஈடுபடுகின்ற ஆட்களின் எண்ணிக்கை 01 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதற்கமைய கூட்டுத்தாபனம் மேற்படி மாவட்டத்தில் மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி பற்றிக் கவனம் செலுத்தியிருக்கவில்லை.



**கையொப்பம் / டபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

## 12. கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளைச் சீராக்கல் மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்

**இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தில் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிகூற்றுக்கள் மற்றும் வேறுசட்ட ஒழுங்குறுத்தல்கள் தேவைப்பாடுகள் பற்றி 2018 இன் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய வெளியிடப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் உள்ளடங்கும் விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தாபன தரப்பினர்களின் விளக்கமளித்தல்.**

1.2 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இக்கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்வதற்காகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள ரூபா 167,815,472/= ஆன மரமுந்திரிகை பருப்பு விற்பனைப் பெறுமதி அதற்குரிய அடிப்படை ஆவணங்களைப் பயன்படுத்திக் கொண்டு அதன் அடிப்படையில் கணக்குகளில் பதிவு செய்யப்பட்டுள்ளதனால் இது சரியான விற்பனை பெறுமதியாகும். கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவினால் வழங்கப்பட்டுள்ள ஆவணங்களுக்கு அமைய இங்கு சமா்ப்பிக்கப்பட்டுள்ள மரமுந்திரிகை பருப்பு விற்பனை பெறுமதியும் அதற்குச் சமமாக இருத்தல் வேண்டும் எனினும் குறித்த ஆவணங்களைத் தயார் செய்யும் போது ஏற்பட்டுள்ள குறைபாடுகள் காரணமாக மேற்படி பெறுமதி இங்கு குறிப்பிடப்பட்டவாறு வித்தியாவசமாக உள்ளது. அதற்கமைய இதற்கு முன்னரும் குறிப்பிட்டதைப் போன்று நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் மரமுந்திரிகை பருப்பு விற்பனைப் பெறுமதி சரியான பெறுமதியாக இருப்பதனால் மேலதிக விற்பனை பெறுமதியை கணக்குகளில் உள்ளடக்கப்படவில்லை. எவ்வாறாயினும் சந்தைப்படுத்தல் பிரிவினால் சமா்ப்பிக்கப்பட்டுள்ள விற்பனை அறிக்கையில் உள்ள குறைபாடுகளை சீா்செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1.2 (ஆ) இணங்குகின்றேன்.

இக்கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் இறுதியில் மரமுந்திரிகை பருப்பு இருப்பு ரூபா 6,985,467/= இனால் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டுளளதன் தவறு, 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது முன்னைய ஆண்டுக்கான சீராக்கலாக திருத்தம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.2 (இ) இணங்குகின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேரேட்டில் காணிகள் கணக்கில் தவறுதலாக வரவு வைக்கப்பட்டுள்ள ரூபா 513,912/= பெறுமதி தொடர்பாக 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது உரிய சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1.2 (ஈ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கடன் சலுகைக் காலத்தை விஞ்சியுள்ள வர்த்தகக் கடன்பட்டோரின் நிலுவைகளை துரிதமாக அறவிட்டுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், இந்தக் கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 1,499,410/= ஆன (லிசல என்டர்பிரைசு) நிறுவனம்) கடன்பட்டோர் நிலுவையை அறவிட்டுக் கொள்ள நீண்டகாலமாக மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தமை காரணமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு அக்கடன் நிலுவையை அறவிட்டுக் கொள்வதற்காக இந்த கடன்பட்டோர் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தேவையான அங்கீகாரங்களைப் பெற்று அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1.2 (உ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 9,466,200 ஆன கடன் பெறுமதி பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடம் அறவிட்டுக்கொள்ள கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தோல்வியடைந்தது. இந்தக் கடன் பெறுமதி தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது தற்போது செயற்படாதுள்ள அரசாங்க அமைச்சு ஒன்றிடமிருந்து கிடைக்க வேண்டியதாகவுள்ள இந்தக் கடன் தொகை தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய முறைபற்றி ஆலோசனை பெற்றுக்கொள்வதற்காக திறைசேரியின் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்ப இதன்போது சிபாரிசு செய்யப்பட்டதுடன், இது தொடர்பாக கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபையை விழிப்புணர்வூட்டி குறித்த கடிதத்தை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட கடிதத்துக்கு அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திடம் கிடைத்த பதில் கடிதம் தேவையான அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபன கணக்காய்வுக் குழுவிடம்

சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கமைய இந்தக் கடன்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு தொடர்ந்தும் ஆலோசனைகளைப் கோருவதற்காக இவ்வாறான தற்போது இயங்கிவராத அரசாங்க அமைச்சுக்களின் சொத்துக்களைச் சாட்டுதல் செய்யப்பட்ட அரசாங்க அமைச்சான நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு கடிதம் அனுப்பத் தீர்மானிக்கப்பட்டதையடுத்து, மேற்படி கடிதம் உரிய அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்துக்கு இதுவரை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சிடம் பதில் கிடைக்கவில்லை என்பதனால், அது தொடர்பாக 2024.09.05 ஆம் திகதிய நினைவூட்டற் கடிதமும் அனுப்பட்டுள்ளதுடன், அதற்குக் கிடைக்கும் பதிலுக்கு அமைய தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.2 (ஊ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது கூட்டத்தாபனத்திற்கு அறவிட வேண்டியுள்ள போதிலும் இழப்பை ஏற்படுத்தம் நட்டங்களுக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்படாத பொருள்சார் கடன்பட்டோர் நிலுவை தொடர்பிலும் கவனம் செலுத்தி தற்போது இழப்பை ஏற்படுத்தம் நட்டங்கள் தொடர்பில் தேவையான திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதுடன். மேற்படி சீராக்கல்கள் நடப்பு ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது ஏற்புடையவாறு உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

1.2 (எ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள எழுவங்குளம் தோட்டத்திலுள்ள 4253 தேக்கு மரங்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் அதற்கமைய. 2023.03.27 ஆம் திகதிக்கு மேற்படி மதிப்பீட்டுப் பெறுமதி ரூ.மி. 244.337 ஆகும். எவ்வாறாயினும், எழுவங்குளம் தோட்டத்தில் சட்டரீதியான உரித்தை கூட்டுத்தாபனத்திற்கு சாட்டுதல் செய்துகொள்ளும் பணிகள் இதுவரை நிறைவு செய்யப்படாதுள்ளதன் காரணமாக மேற்படி தேக்கு மரங்களின் விலைமதிப்புப் பெறுமதிகளை கூட்டுத்தாபன கணக்குகளில் பதிவு செய்யும் ஆற்றல் இல்லை. அதற்கமைய குறித்த தோட்டத்தின் சட்டபூர்வமான உரித்தை சாட்டுதல் செய்துகொள்ளும் நடவடிக்கைகள் அனைத்தும் நிறைவடைந்தவுடன், இந்த தேக்கு மரங்களின் விலைமதிப்புப் பெறுமதிகளை கணக்குப் பதிவேடுகளில் உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2 (ஏ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கணக்காய்வு அவதானிபுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காணப்படுகின்ற ஓய்வூதியப் பணிக்கொடை ஒதுக்கத்தின மீதிக்கு இசைவாக ரூபா 100,000/= ஆன தொகை வீதம் முதலீடு செய்வதற்கு பணிப்பாளர் சபையின் அங்கிகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன். அதற்கமைய உரிய ஏனைய அங்கீகாரங்களும் பெறப்பட்டு 2024.11.30 ஆம் திகதியளவில் ரூபா 400,000 ஆன தொகை குறித்த விடயம் தொடர்பாக சேமிப்புக் கணக்கில் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்துள்ள விடயங்களுக்கு அமைய, மேற்படி சேமிப்புக் கணக்கிற்கு நிதி சேகரிக்கப்படுகின்ற முறைக்கு அமைய குறித்த தொகைகளிலிருந்து ஒரு பகுதியை கூடுதல் வட்டி வருமானம் கிடைக்கும் வகையில் நிலையான வைப்புக் கணக்கில் முதலீடு செய்யத் தேவையான அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1.2 (ஐ) இணங்குகனிற்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணம் செய்யப்பட்ட பயன்கள் திட்டம் தொடர்பான ஒப்பீடுகள் மற்றும் செலவினங்கள் பற்றிய பகுப்பாய்வுகளை நடப்பு ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1.2 (ஒ) இணங்குகின்றேன்.

இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள முழுமையாகத் தேய்வடைந்த சொத்துக்கள் உள்ளடங்களாக கூட்டுத்தாபனத்தின் அனைத்து சொத்துக்களின் பெறுமதியை மீள மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிரூவ அதிகாரசபை தீர்மானித்துள்ளதற்கமைய ஆரம்பத்தில் கூட்டுத்தாபனத்தின் வாகனங்களின் பெறுமதியை மீளமதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் மற்றும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் காணப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் பிற அலுவலகங்ளில் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாக 101 வாகனங்கள் காணப்படுவதுடன், விலைமதிப்புச் செய்பவர்கள் எதிர்கொண்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக மீள்மதிப்பீடு செய்யும் பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ள 10 மோட்டார் வாகனங்கள் தவிர ஏனைய சகல மோட்டார் வாகனங்களையும் (அதாவது 91 வாகனங்கள்) மீள்மதிப்பீடு செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கூடிய விரைவில் குறித்த நடைமுறைச் சிக்கல்களைத்

தீர்த்துக் கொண்டு எஞ்சியுள்ள மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் பணிகளையும் நிறைவு செய்து குறித்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதிகளை கணக்குகளில் பதிவு செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனை அடுத்து நிதி ஏற்பாடுகள் கிடைக்கின்ற அடிப்படையில் படிப்படியாக மோட்டார் வாகனங்களுக்கு மேலதிகமாக ஏனைய சொத்தக்களை மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் மற்றும் குறித்த மீள்மதிப்பீட்டுப் பெறுபேறுகளை கணக்குகளில் பதிவு செய்யும் பணிகளையும் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

1.2 (ஔ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த மரமுந்திரிகை பயிர்செய்கை மற்றும் தென்னை பயிர்செய்கையின் செலவினம் தொடர்பிலான ஒப்பீடு பற்றிய வெளிப்படுத்தல்கள், நடப்பு ஆண்டு முதல் (அதாவது 2024 முதல்) நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1.2 (க) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இக்கூட்டுத்தாபனத்தை தாபிக்கும் போது அதற்கான அரச அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தை தாபிப்பதன் நோக்கங்களுக்கு அமைய மரமுந்திரிகை பருப்பு மற்றும் மற்றும் மரமுந்திரிகை கன்றுகளை சந்தைப்படுத்தல் போன்ற வணிக செயற்பாடுகளுக்கு மேலதிகமாக நாட்டில் மரமுந்திரிகை பயிர்செய்கையை விஸ்தரித்தல் மற்றும் மரமுந்திரிகை பயிர்செய்கையின் மற்றும் பொதுவாக மரமுந்திரிகை கைத்தொழில்சார் நடவடிக்கைகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்த வேண்டிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்ற சேவைசார் செயற்பாடுகள் தொடர்பான பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்திற்குக் கையளிக்கப்பட்டுள்ளன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் சேவைசார் செயற்பாடுகளாக அமுலில் உள்ள விஸ்தரித்தல் மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்திச் சேவைகளுக்கு தனியான வருமானம் மற்றும் செலவினம் கணக்கு தயார் செய்யப்படுவதில்லை என்பதுடன், வருடாந்தம் மேற்படி செலவினங்கள் நிலையங்கள் தொடர்பான பொருள்சார் பெறுமதியைக் கொண்ட செலவினமும் கூட்டுத்தாபனத்தின் வணிச் செயற்பாடுகள் சம்பந்தமான இலாபம் நிலையங்கள் சம்பந்தமான செலவினத்துடன் இணைக்கப்பட்டு கணக்குகளில் பதிவு செய்வது மேற்கொள்ளப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தின் சேவைசார் செயற்பாடுகளுக்கான செலவினம் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குகளில் பதிவு செய்யப்படுகின்ற போதும், மேற்படி சேவைகளை ஆற்றுவதன் மூலம் பொதுவாக பொருளாதாரத்திற்கு உரித்தாகின்ற பயன்கள் நிதிசார் பெறுமதியாக அளவிட முடியாமை காரணமாக அவற்றைக் கணக்குகளில் பதிவு செய்ய முடியாது என்பதனால் இக்கணக்காய்வு அவதானிப்புக்களில் அந்நிலைமைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும் என்பதைக் குறிப்பிடல் வேண்டும். எவ்வாறாயினும், கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் மற்றும் ஏனைய வருமான நிலைமைகளை மென்மேலும் மேம்படுத்தி மற்றும் செலவினங்களை முறையாக முகாமைத்துவம் செய்துகொண்டு இலாபகரமான தன்மையை வளர்த்துக் கொள்ள செயற்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கடும் செலுத்தத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதற்கமைய, மேற்படி செயற்பாடுகளின் விளைவாக 2022 ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனம் ரூ.மி. 14.471 ஆன தேறிய இலாபத்தை உழைத்துக் கொண்டுள்ளதுடன் மீளாய்வு ஆண்டிலும் தேறிய இலாபம் உழைக்க எதிர்பார்க்கப்பட்ட போதும் மரமுந்திரிகை செடிகளின் விற்பனை வருமானத்தில் பெரும்பாலானவை நடப்பு ஆண்டின் அறவிடப்படாமை காரணமாக மேற்படி இலக்கை அடைந்துகொள்ள முடியவில்லை. எவ்வாறாயினும் 2022 ஆம் ஆண்டுக்கு முந்திய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டின் தேறிய நட்டத்தை குறிப்பிடத்தக்களவு பெறுமானத்தில் குறைத்துக் கொள்ள கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

மேலும், குறித்த விடயம் தொடர்பாக 2024.10.24 ஆம் திகதி நடைபெற்ற விடயப்பொறுப்பு அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. இதன் போது கூட்டுத்தாபத்தின் வணிக செயற்பாடுகள் மற்றும் சேவைசார் செயற்பாடுகளுக்கு தனித்தனியாக இலாபநட்டம் /வருமானத்திற்கு கூடதல் செலவினத்தை கணிப்பிட்டு சமர்ப்பிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களை தயார் செய்வது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன், தற்போது பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு முறையியலுக்குப் பதிலாக மேற்படி புதிய முறையியலை அமுல்படுத்துவது பற்றிக் கவனம் செலுத்தத் தேவையான கற்கையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

2.2.2 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது குறித்த வருமான வரி அறிக்கைககளை தயார் செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு வருவதுடன். குறிப்பிடத்தக்களவு ஆண்டுகளுக்கான வருமான வரி அறிக்கைகளை தயார் செய்ய வேண்டியுள்ளதனால் அதற்கு குறிப்பிடத்தக்களவு காலம் எடுக்கும். அதற்கமைய குறித்த பணிகளை நிறைவு

செய்து மேற்படி வருமான வரி அறிக்கைளை உள்நாட்டு இறைவரிகள் திணைக்களத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி வருமான வரி அறிக்கைகளுக்கு அமைய அரசுக்கு செலுத்த வேண்டிய வருமான வரிப் பெறுமானங்கள் காணப்படுமாயின் இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 779,483/= ஆன தடுத்துவைத்தல் வருமான வரிக்கு எதிராக பதிலீடு செய்துகொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2.2.2 (ஆ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 1,934,310/= ஆன நின்ற கணக்காய்வுக் கட்டணம் தற்போது முற்றாக செலுத்தி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2.2 (இ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த அவதானிப்பின் கீழ் தற்போது சட்ட ரீதியான உரிமை கூட்டுத்தாபனத்திற்கு சாட்டுதல் செய்யப்படாதுள்ள கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற கணிகளின் அளவு மொத்தம் 11513 ஏக்கராக குறிப்பிடப்பட்டுள்ள போதும், இதற்கு முன்னர் இந்த அறிக்கையின் 1.4.3(ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, தொடர்ச்சியாக பேணிவருவது சிக்கனமாகதாக இல்லாதது என்று இனங்காண்ட்ட நாலந்த (ஏக்கர் 135) மற்றும் விலச்சிய (ஏக்கர் 25) ஆகிய தோட்டங்கள் / விதை நிலங்கள் தற்போது கூட்டுத்தாபன பணிப்பாளர் சபையின் தீர்மானம்தின் கீழ் குறித்த உரித்தை நிறுவனங்களுக்கு மீளக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதனால் சட்ட பூர்வ உரித்தை சாட்டுதல் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்படாதுள்ள காணிகளின் திருத்திய ஏக்கர் அளவு 11353 ஆகும். (11513 – 160) மேற்படி திருத்திய ஏக்கர் அளவான காணிகள் தொடர்பாக கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையிடம் விளக்கங்களைச் சமர்ப்பித்து அதற்கமைய அடுத்த கட்டப் பணிகளை மேற்கொள்ள அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த திருத்திய காணிகளின் ஏக்கர் அளவுகள் பற்றிய பகுப்பாய்வு பின்வருமாறாகும்.

| தோட்டம் / விதைப் பூங்கா | உரித்து | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | ஏக்கர்களின் அளவு |
|---|---|---|---|---|
| 1. எளுவன்குளம் - கட்டம் 1 | அரசாங்கத்துக்கு உரித்தானது | புத்தளம் | வணாத்துவில்லு | 212 |
| 2. எளுவன்குளம் - கட்டம் 11 | அரசாங்கத்துக்கு உரித்தானது | புத்தளம் | வணாத்துவில்லு | 407 |
| 3. ஆச்சிகே வத்த | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | புத்தளம் | வணாத்துவில்லு | 961 |

| தோட்டம் / விதைப் பூங்கா | உரித்து | மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | ஏக்கர்களின் அளவு |
|---|---|---|---|---|
| 4. கமன்தளுவ | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | புத்தளம் | ரஸ்நாயக்க | 548 |
| 5. ஹாடி | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு | மட்டக்களப்பு | வாழைச்சேனை | 365 |
| 6. சுதுவத்துர –ஆர | வன பாதுகாப்புத் திணைக்களம் | மொனராகலை | மொனராகலை | 200 |
| 7. மகாஓயா | அரசாங்கத்துக்குஉரித்தானது (வனபாதுகாப்புத் திணைக்களம் ) | அம்பாறை | மகாஓயா | 81 |
| 8. மாங்கேணி | அரசாங்கத்துக்குஉரித்தானது | மட்டக்களப்பு | கோரளைப்பற்று வடக்கு | 1075 |
| 9. கொண்டச்சி | அரசாங்கத்துக்குஉரித்தானது | மன்னார் | முசலி | 6498 |
| 10. திரியாய | அரசாங்கத்துக்குஉரித்தானது | திருகோணமலை | கோமரன்கடவல | 27 |
| 11. பூநகரி | அரசாங்கத்துக்குஉரித்தானது | கிளிநொச்சி | பூநகரி | 479 |
| 12.வெல்லன்குளம் | அரசாங்கத்துக்குஉரித்தானது | மன்னார் | மாந்தை மேற்கு | 500 |
| **மொத்தம் (ஏக்கர்)** | | | | **11,353** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தற்போது இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் ஆதனவுரிமையைக் கொண்டுள்ள அரச மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் சட்டரீதியான உரித்தை சாட்டுதல் செய்துகொள்வதற்காக அவற்றின் அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ரூ.மி. 21.348 ஆன ஏற்பாடுகள இக்கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொடுக்க தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம் ஊடாக ஏற்கெனவே இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, இந்த ஆண்டின் அடுத்துவரும் காலஎல்லைக்குள் அல்லது 2025 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் அளவை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் ஆற்றல் உள்ளதுடன், இப்பணிக்கான நிலஅளவை கட்டளை காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு மற்றும் குறித்த காணிகள் காணப்படுகின்ற பிரதேசங்களைச் சேர்ந்த பிரதேச செயலகங்கள் ஊடாக நிலஅளவைத் திணைக்களத்திற்கு வழங்கப்படல் வேண்டும்.

மேலும் தற்போது கூட்டுத்தாபனம் அனுபவித்துவருகின்ற காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகள் தொடர்பாக 1999–2009 காலப்பகுதிக்குரிய சகல குத்தகைத் தொகைகளும் மேற்படி ஆணைக்குழுவுக்கு செலுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த காணிகளை அளவை செய்த பின்னர் நில

அளவைகள் திணைக்களத்திடமிருந்து அளவைத் திட்டத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் நடப்பு ஆண்ட வரையான நிலுவை குத்தகைத் தொகைகளை செலுத்த நடவடிக்கை மேற்கொண்டு அக்காணிகளின் குத்தகை உறுதிகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க முடியும்.

2.3 (அ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள் மற்றும் விதைப் பூங்காக்களில் காணப்படுகின்ற மரங்களை இலக்கமிடுவதற்கு பாரியளவில் நிதியைச் செலவிட வேண்டி ஏற்படுவதுடன், அதற்காக குறிப்பிடத்தக்களவு காலமும் எடுக்கும். கூட்டுத்தாபனத்தின் நிதி ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளமை மற்றும் காணப்படுகின்ற ஊழிய வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளமை காரணமாக அப்பணியை நிறைவு செய்வது நடைமுறையில் சிக்கலானதாகும்.

எவ்வாறாயினும், காணப்படுகின்ற ஏற்பாடுகளின் கீழ் மரங்களை இலக்கமிடாது, தோட்டங்களில் பதவியணியை பயன்படுத்திக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் சகல தோட்டங்களிலும், விதைப் பூங்காக்களிலும் காணப்படுகின்ற மரமுந்திரிகை மரங்கள் மற்றும் தென்னை மரங்கள் பற்றிய ஆரம்ப கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2024.10.31 ஆம் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டதுடன், அதற்கமைய குறித்த கணக்கெடுப்புத் தகவல்கள் தொடர்பாக தேவையான அறிக்கைகளை சமர்ப்பிப்பதும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

2.3 (ஆ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

கூட்டுத்தாபனத்தின் இணையத்தளம் ஊடாக ஒன்லையின் முறையில் மரமுந்திரிகை பருப்பு உற்பத்திகளை விற்பனை செய்யும் நடவடிக்கைகளைப் பேணிவரும் போது அதற்காக தாங்கிக் கொள்ள வேண்டியுள்ள வங்கிக் கட்டணங்கள், எழுதுகருவி செலவினம், தொலைபேசி மற்றும் இணையத்தள செலவினம் போன்றன பற்றிக் கவனம் செலுத்தும் போது மேற்படி ஒன்லையின் விற்பனை நடவடிக்கைகள் மூலம் உழைத்துக் கொள்ளக்கூடிய இலாபம் குறைந்த மட்டத்தில் காணப்படுவதனால் ஒன்லையின் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளதுடன், கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்கள் மூலம் மரமுந்திரிகை பருப்பு உற்பத்திகளை விற்பனை செய்வதில் சிக்கல் இல்லாமையினாலும், அதன் மூலம் உழைத்துக் கொள்ளக்கூடிய இலாபம் ஒப்பீட்டு ரீதியில் உயர் மட்டத்தில் காணப்படுவதனாலும், முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பத விற்பனை நிலையம் ஊடாக மரமுந்திரிகைப் பருப்பு விற்பனை செய்வதற்காகும்.

2.3 (இ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த சேமிப்புக் கணக்கில் காணப்படுவது கூட்டுத்தாபனத்தின் கொண்டச்சி தோட்டத்தில் மீளத் தாபித்தல் மற்றும் நீர் வழங்கல் கட்டமைப்பை புதுப்பிப்பதற்காக அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கு விடயப்பொறுப்பு அமைச்சினால் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த திகதிக்கு செலவிடப்படாதுள்ள நிதி ஏற்பாடுகளாகும்.

மீளாய்வு ஆண்டில் குறித்த கருத்திட்டத்தின் பணிகளுக்காக தொடர்ச்சியாக குறித்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்திக் கொள்ளப்பட்டதன் காரணமாக வேறு முதலீடுகளில் அநிதியை ஈடுபடுத்தும் ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டது. தற்போது மேற்படி ஏற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு தொகை குறித்த கருத்திட்டத்தின் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டின் இறுதியளவில் குறித்த கருத்திட்டத்தின் பணிகள் பூரணமாக நிறைவு செய்யப்படவுள்ளன.

2.3 (ஈ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த அறிக்கையில் மேலே இலக்கம் 1.2 (உ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து இக்கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 9,466,200/= ஆன கடன் தொகையை மீள அறவிட்டுக் கொள்வது தொடர்பாக ஏற்கெனவே நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு அனுப்பியுள்ள கடிதத்திற்கு கிடைக்கும் பதிலுக்கு அமைய இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு செலுத்த வேண்டியுள்ள கடன் பெறுமதி மற்றும் வட்டியை செலுத்தி விடுவித்துக் கொள்ள வேண்டிய முறை பற்றி தீர்மானம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (உ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை, பதனிடல் மற்றும் விற்பனை செய்தல் ஆகிய சகல பணிகள் தொடர்பிலும் தாபிக்கப்பட்டுள்ள ஒரே அரச நிறுவனமென்ற வகையில் 60/7 ஆம் இலக்க, 1973.05.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய மேற்படி பணிகள் தொடர்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களைத் தயார் செய்வது சம்பந்தமாக விடயப்பொறுப்பு கௌரவ அமைச்சருக்கு உரிய தகவல்களையும் ஆலோசனையையும் பெற்றுக்கொடுப்பதை இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

கௌரவ அமைச்சருக்கு குறித்த தகவல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்கும் நிறுவன பதவி வழிமுறையில் உயர்நிலையில் காணப்படுகின்ற நிறுவனமான விடயப்பொறுப்பு அமைச்சு ஊடாக (தற்போதைய

விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு) மேற்படி தகவல்கள் கூட்டுத்தாபனத்திடமிருந்து கோரப்படுவதுடன் கூட்டுத்தாபனத்தினால் அத்தகவல்கள் பெற்றுக்கொடுக்கப்படும்.

இதற்கு மேலதிகமாக எழுகின்ற அவசர, விசேட மற்றும் ஏனைய விடய ரீதியான விடயங்களின்போது விடயப்பொறுப்பு அமைச்சினால் நடாத்தப்படுகின்ற கூட்டங்களில் குறித்த விடயம் சம்பந்தமாக அலுவலர்கள் தமது கருத்துக்களையும் உரிய தகவல்களையும் நிபுணத்துவ கருத்துக்களையும் சமர்ப்பிக்கின்றார்கள்.

மேலும், மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் தமது சம்பவக் கற்கைகளின்போது இனங்காணப்படுகின்ற அரச தலையீட்டுக்குத் தேவையான சிக்கலான விடயங்களின்போது மற்றும் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் தலையிட வேண்டிய அதன் அடிப்படைக் குறிக்கோள்களுக்குப் புறம்பான விடயங்களின்போது அது பற்றி கௌரவ அமைச்சரின் கவனத்தைக் கோருவதற்காக விடயப்பொறுப்பு அமைச்சரின் செயலாளரிடமிருந்து கோரிக்கை மேற்கொள்ளப்பட்டு கிடைக்கின்ற அங்கீகாரத்துக்கு அமைய உரிய நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் மரமுந்திரிகைப் பயிர்செய்கை, மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை சார்ந்த பரவும் நோய்கள், கிருமிநாசினி, உரம் மற்றும் மரமுந்திரிகைத் தோட்டத்துறைக்குச் சம்பந்தமான தற்போது உருவாகி உள்ள மற்றும் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சிக்கல்கள் மற்றும் சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கு மற்றும் அவற்றைத் தீர்த்துக்கொள்வதற்குத் தேவையான ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மரமுந்திரிகை பதனிடல் நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான சகல ஆராய்ச்சிகளும் இந்த கூட்டுத்தாபனத்தின் தரச் சான்றிதழ்படுத்தும் அலுவலர்களின் தலையீட்டின்கீழ் கூட்டுத்தாபனத்தின் நெதகமுவ பதனிடல் நிலையத்தில் மேற்கொள்ளப்படுவதுடன், இதன் பெறுபேறாக பெறுமதி சேர்க்கப்பட்ட மரமுந்திரிகை உற்பத்திகள் பல சந்தைக்கு அறிமுகம் செய்ய இயலுமாகி உள்ளது.

மேலும் மரமுந்திரிகைச் சந்தைப்படுத்தலை மேம்படுத்தும் நோக்கத்துடன் உலக சந்தையின் நிலைமைகளை ஆராய்ந்து மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு வர்த்தகக் குறியீடொன்றையும் (Trade mark) சுலோகத்தையும் (Slogan) மற்றும் சர்வதேச தர நியமங்களுடன் ஒத்திசையக்கூடிய வகையிலான பொதி மாதிரி அமைப்பொன்றை தயார் செய்வதும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வர்த்தகக் குறியீடு மற்றும் சுலோகத்தைப் பதிவுசெய்யும் நடவடிக்கைக்காக புதிய

ஆவணங்கள் தற்போது தேசிய புலமைச்சொத்து அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவின் கீழும் கொள்ளப்படுகின்ற தகவல்கள் முறையாக ஒன்று திரட்டப்படாமை காரணமாக அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து அடிக்கடி மேற்கொள்ளப்படுகின்ற தகவல் கோரல்களுக்கு முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க முடியாது போயுள்ளது. இந்தப் பலவீனத்தை இனங்கண்டுள்ள விடயப்பொறுப்பு அமைச்சான பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுடன் இணைந்து தகல்களை ஒன்று திரட்டி வலயமைப்பாக மாற்றும் நடடிவக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் உரிய மாவட்டச் செயலகங்கள், சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கைக் கட்டளைகள் நிருவகத்துடன் நிறுவன மட்டத்தில் இணைந்து நடவடிக்கை மேற்கொள்வது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மேற்படி நிறுவனங்களுடன் தகவல்களைப் பரிமாற்றிக்கொண்டு விடயப்பொறுப்பு அமைச்சின் கண்காணிப்பின்கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டமொன்றில் இந்தக் கூட்டுத்தாபனம் தொடர்புபட்டுள்ளது.

மேலும், நாடு முழுவதிலும் மரமுந்திரிகை விஸ்தரிப்பு பரவலாக உள்ள பிரதேசங்களில் குறிப்பாக அமையப்பெற்றுள்ள பதனிடல் நிலையங்களை கண்காணிப்புச் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்வதற்காக குறித்ததொரு பதனிடல் நிறுவனத்தினால் தோலுடனான மரமுந்திரிகையை உள்நாட்டு நுகர்வுக்கு அல்லது TIEP (Temporary Importation for Exports) முறையின் கீழ் பெறுமதி சேர்க்கப்பட்டு மீள்ஏற்றுமதி செய்வதற்காக வேறு நாடொன்றிலிருந்து தோலுடனான மரமுந்திரிகையை இறக்குமதி செய்வதற்கு கோரிக்கை விடுக்கும் போது மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அந்நிறுவனங்களின் இறக்குமதி ஆற்றல் மற்றும் பதனிடல் கொள்ளளவு பற்றிய சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு அமைச்சரவை விஞ்ஞாபனம் மூலம் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்திற்கு முறையாக பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. .

அதற்கமைய, அவ்வாறு தோலுடனான மரமுந்திரிகை இருப்பை இறக்குமதி செய்வதற்காக நிறுவனங்கள் முன்வரகின்ற சந்தர்ப்பங்ளில் மேற்படி பதனிடல் நிலையங்கள் அல்லது தொழில்சாலைகளின் கொள்ளளவு மற்றும் இறக்குமதி சாத்தியக்கூறு தொடர்பாக இக்கூட்டுத்தாபனத்தினால் சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேலும், சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கு சர்வதேச வகைப்படுத்தல்கள் மற்றும் தர நியமத் தேய்வு ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் தற்போது

பெரும்பாலானவற்றை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதற்கு முன்னரும் குறிப்பிடப்பட்டவாறு வர்த்தகக் குறியீடு மற்றும் சுலோகம் மற்றும் சர்வதேச தர நியமங்களுக்கு இணங்கியவாறான பொதியிடல் மாதிரி அமைப்பு கூட்டுத்தாபனத்தினால் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், பதனிடலுக்கான தர நியமங்களைப் பெற்றுக்கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய ஆராய்ச்சிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைத் தயார் செய்வதற்கான யோசனைகளும் கருத்திட்ட அறிக்கைகளும் விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விடயப்பொறுப்பு அமைச்சிடமிருந்து நிதி ஏற்பாடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய தற்போது இந்தக் கூட்டுத்தாபனத்தினால் அது சம்பந்தமான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் முக்கிய நோக்கமாக இருப்பது மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை நாடு முழுவதும் விஸ்தரிப்பதாகும். அதற்காக அரசாங்க விவசாய நிவாரண உதவிக் கொள்கையின் கீழ் விடயப்பொறுப்பு அமைச்சின்மூலம் வழங்கப்படுகின்ற ஏற்பாடுகளின் அடிப்படையில் மற்றும் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைக்கு நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம், மரமுந்திரிகை விவசாய ஏற்றுமதிக் கிராமக் கருத்திட்டம் மூலம் இந்தக் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தான நாற்றுமேடைகளில் உரிய நடைமுறைகளைப் பற்றி உற்பத்தி செய்யப்படுகின்ற உயர் தரத்தைக் கொண்ட ஒட்டு மற்றும் விதை மரமுந்திரிகைச் செடிகளைப் பெற்றுக்கொடுப்பதன் மூலமும் சிறந்த விவசாய நடைமுறைகளைப் பின்பற்றி மரமுந்திரிகைச் செடிகளை நாட்டுவது தொடர்பாக தேவையான தொழில்நுட்ப அறிவைப் பெற்றுக்கொடுப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலமும் இந்த மரமுந்திரிகை பயிர்ச்செய்கையை விபரிக்கும் பணிக்கு இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் முனைப்புடன் பங்களிப்பு வழங்கி வருகின்றது.

இதற்கு மேலதிகமாக Dilma Conservation போன்ற நிலைபேறான விவசாய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தைக் கொண்டுள்ள நிறுவனங்களுடன் இணைந்து மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை விஸ்தரிப்பதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் நிவாரண விலையில் மரமுந்திரிகைச் செடிகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் இலவசமாக நிபுணத்துவ அறிவைப் பெற்றுக்கொடுப்பது இந்தக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலுள்ள விளக்கங்களுக்கு அமைய இக்கூட்டுத்தாபனத்தை தாபிப்பது தொடர்பிலான 60/7 ஆம் இலக்க 1973.05.25 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைய கூட்டுத்தாபனத்தின் செயற்பாடகள்

தொடர்பாக கௌரவ அமைச்சரவை விழிப்புணர்வூட்டல் மற்றும் அது சம்பந்தமான அறிவுரைகளைப் பெற்றுக் கொடுத்தல், மரமுந்திரிகை உற்பத்திகளைப் பதனிடல், விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தல், பகிரங்கப்படுத்தல், விநியோகித்தல் தொடர்பில் வெளிரத்தரப்பினர்களுடன் இணைந்த நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் ஆகிய பணிகள் குறிப்பிடத்தக்களவு மட்டத்தில் கூட்டுத்தாபனத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிட முடியும்.

2.3 (ஊ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

மரமுந்திரிகை அறுவடைக் காலத்தில் நிலவும் பாதகமான காலநிலை மற்றும் வானிலை நிமைகள், கடும் காட்டு யானைகளின் பாதிப்புக்கள், கிருமிகளின் பாதப்பு, தோட்டங்களில் மிகப் பழைய மரமுந்திரிகை மரங்கள் பெரும் எண்ணிக்கையில் காணப்படுதல் போன்ற விடயங்கள் காரணமாக மீளாய்வுக் காலப்பகுதிக்குரிய ஒரு சில ஆண்டகளில் எதிர்பார்க்கப்பட்ட மரமுந்திரிகை விளைச்சலை குறித்த தோட்டங்களிலிருந்து சேகரித்தக் கொள்வதில் அசௌரியம் எழுந்ததனால் மரமுந்திரிகை உற்பத்தி ஒரு சில ஆண்டுகளில் குறைவடைந்துள்ளது.

எவ்வாறாயினும், கூட்டுத்தாபன தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் தோலுடனான மரமுந்திரிகை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் கூட்டுத்தாபனத்தின் புத்தளம் அச்சிகெவத்த தோட்டத்தில் காணப்பட்ட பழைய மரமுந்திரிகை பயிர்செய்கை முற்றாக அகற்றப்பட்டு அதில் புதிய மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அடுத்துவரும் ஆண்டுகளில் இப்புதிய மரமுந்திரிகை பயிர்செய்கை மூலம் திருப்திகரமாக மரமுந்திரிகை விளைச்சலைப் பெற்றுக் கொள்ள இயலுமாகும்.

மேலும் மரமுந்திரிகை உற்பத்தியை அதிகரித்துக் கொள்வதற்காக 2021 – 2023 காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் கொண்டச்சி தோட்டத்தில் 420 ஏக்கர் அளவான நிலப்பகுதியில் புதிதாக மரமுந்திரிகை பயிர்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டிலும் (அதாவது 2024 இல்) கொண்டச்சி தோட்டத்தில் 330 ஏக்கர்களில் புதிய மரமுந்திரிகை பயிர்செய்கையை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் நடப்பு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் எழுவன்குளம் தோட்டத்தினுள் 105 ஏக்கரிலும் (இதில் 40 ஏக்கர் 2023 ஆண்டில் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்ட போதிலும் அப்பயிர்செய்கை நடவடிக்கைகளையும் நடப்பு ஆண்டில் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.) புதிய மரமுந்திரிகை பயிர்செய்கைகளை மேற்கொள்ளத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்படக்கூடிய தோலுடனான மரமுந்திரிகை விளைச்சல் அளவை அதிகரிக்க நடப்பு ஆண்டில்

கூட்டுத்தாபதன்தின் வெல்லன்குளம் மற்றும் பூநகரி தோட்டங்களில் கடுமையாக காடு வளர்ந்திருந்த மரமுந்திரிகை பயிர்செய்கையைக் கொண்ட 100 ஏக்கர் அளவான காடுகளை அழிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன். அதன் மூலம் வெற்றரகமான பெறுபேறு கிடைத்துள்ளது.

மேலும், இடைக்காலப் பயிர்செய்கை நடவடிக்கைகளுக்காக தனியார் துறை பெருந்தோட்டப் பயிர்செய்கையாளர்களுக்கு காணிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் அவர்களன் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு தோட்டங்களி புதிய மரமுந்திரிகை பயிர்செய்கைகளை மேற்கொள்ள செயற்படுவதுடன், பயிர்செய்கையில் ஊக்கம் கொண்டுள்ள தனியார் துறை முதலீட்டாளர்களுடன் முறையாக உடன்படிக்கை செய்துகொண்டு அவர்களின் நிதியைப் பயன்படுத்தியும் புதிய மரமுந்திரிகை செய்கைகளில் ஈடுபடுத்தத் தேவையான திட்டங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

2.3 (எ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை மற்றும் கூட்டுத்தாபனத்தின் சீரற்ற நிதி நிலைமை காரணமாக கடந்த 05 வருட காலப்பகுதியில் தென்னைப் பயிர்செய்கைக்கு இரசாயன உரம் பயன்படுத்த முடியாது போனதன் காரணமாக, தென்னை அறுவடை குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்திருந்தது.

எவ்வாறாயினும் நடப்பு 2024 ஆம் ஆண்டில் தென்னை மரங்களுக்கு உரம் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதனால் அடுத்துவரும் ஆண்டுகளில் தேங்காய் விளைச்சலில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும். காணப்படுகின்ற நிதி நிலைமைக்கு அமைய மீளாய்வு ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் கமன்தலுவ தோட்டத்தில் 25 ஏக்கர் அளவில் புதிய தென்னை பயிர்செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.3 (ஏ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

<u>மரமுந்திரிகை பழம்</u>

இக்கூட்டுத்தாபனத்தினால் 2020 ஆம் ஆண்டு வரை மரமுந்திரிகை பழம் மூலம் வையின் உற்பத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இறுதியாக கூட்டுத்தாபனத்தினால் வையின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்புபடுத்தக் கொள்ளப்பட்ட உற்பத்தியாளின் உற்பத்திக் குறைபாடு காரணமாக ஆரம்ப வையின் உற்பத்தியை பதப்படுத்துவதற்காக வைத்திருக்கும் போது அதிகளவில் வண்டல் படிந்திருந்தது.

இந்நிலைமை காரணமாக குறித்த வையின் உற்பத்தி துரிதமாக வீழ்ச்சியடைந்து அவை வினாக்கிரியாக மாற்றமடையும் அடையாளம் வெளிப்படுத்தப்பட்டதனால் குறித்த வையின் உற்பத்தி நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுட்ன, மேற்படி குறைபாட்டைத் தவிர்த்துக் கொண்டு மீண்டும் வையின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு குறித்த உற்பத்தியாளருக்கு அறிவுரை வழங்கப்பட்ட போதிலும், குறித்த உற்பத்தியை வழமை நிலைக்குக் கொண்டுவர மேற்படி உற்பத்தியாளர் தொடர்ந்தும் தவறியுள்ளதனால் வையின் உற்பத்தி நடவடிக்கைகளை கைவிட வேண்டி ஏற்பட்டது.

பின்னர் இந்த வையின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக மற்றும் அதற்கு மேலதிகமாக மரமுந்திரிகை பழம் மூலம் எல்கஹோல் உற்பத்தி செய்வதற்கு பல தடவைகள் வேறு உற்பத்தியாளர்களின் தலையீட்டுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும், ஆராய்ச்சி மட்டத்திலேயே குறித்த உற்பத்திகள் எதிர்பார்க்க நிலைமையிலிருந்து வெளியேறியதனால் மற்றும் வேறு நடைமுறைச் சிக்கல்கள் உருவாகியதனால் மேற்படி உற்பத்தி நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக பேணிவருவது கடினமாகியுள்ளது.

எவ்வாறாயினும் இந்த மரமுந்திரிகை பழங்கள் மூலம் எல்கஹோல் உற்பத்தி செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பான எண்ணக்கருப் பத்திரமொன்று விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிப்பது உகந்தது என்று 2024.12.02 ஆம் திகதி நடைபெற்ற கூட்டுத்தாபன்தின் ஆராய்ச்சி மற்றும் முகாமைத்துவக் குழுவில் தீர்மானிக்கப்பட்டதனால் தற்போது குறித்த எண்ணக்கருப் பத்திரத்தை விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024.12.19 ஆம் திகதி விடயப்பொறுப்பு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட அழைப்புக்கு அமைய மரமுந்திரிகை பழம் மூலம் எல்கஹோல் ஸ்ப்ரிட் உற்பத்தி செய்வதற்கு முன்வந்துள்ள முதலீட்டாளருடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன், இதன் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைய குறித்த முதலீட்டாளருக்கு குறித்த விடயம் தொடர்பாக வியாபார யோசனைத்திட்டமொன்றை தயார் செய்து குறித்த விடயப்பொறுப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்டப்பட்டதுடன், குறித்த உற்பத்தி தொடர்பாக சந்தை நிலைமையை ஆராய்ந்து பார்த்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இதன் போது கூட்டுத்தாபன அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

<u>மரமுந்திரிகை தோல்</u>

மரமுந்திரிகை தோல் மூலம் திரவம் / எண்ணெய் (Cashew Nut Shell Liquid - CNSL) வடிக்கும் இயந்திரமொன்று கூட்டுத்தாபனத்தின் நெதகமவ பதனிடல்

நிலையத்தில் காணப்படுவதுடன், நீண்டகாலத்திற்கு முன்னர் குறித்த இயந்திரம் மூலம் ஆராய்ச்சி மட்டத்தில் குறித்த மரமுந்திரிகை தோல் மூலம் திரவம் /எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், விற்பனை செய்வதற்காக கொள்வனவாளர்களை தேடிப்பெற்றுக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள் காரணமாக குறித்த உற்பத்தியும் கைவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது மரமுந்திரிகை பதனிடல் ஊடாக விரயமாக கிடைக்கின்ற மரமுந்திரிகை தோல் வெளிக் கொள்வனவாளர்களுக்கு விற்பனை செய்யப்படுவதன் மூலம் கூட்டுத்தாபனம் வருமானம் உழைத்துக் கொள்வதுடன், எதிர்காலத்தில் மரமுந்திரிகை தோல் மூலம் பெறும் திரவம்/ எண்ணெய்க்கான சந்தையை உருவாக்கிக் கொள்ள முடியுமாயின் அது தொடர்பில் கவனம் செலுத்தி தேவையான தீர்மானங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (ஐ) (ஒ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள மின் பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் பொய்லர் இயந்திரம் மிகப் பழைமைவாய்ந்தவையாயினும் குறித்த இயந்திரங்கள் அடிக்கடி புதுப்பிக்கப்பட்டு பதனிடல் நிலையத்தின் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படும் இயந்திரங்களாகும் என்பதுடன், பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக இவற்றின் ஒரு சில புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இதுபற்றி விசேட கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும், இதற்கு முன்னர் இந்த அறிக்கையில் இலக்கம் 2.3(ஏ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மரமுந்திரிகை தோல் எண்ணெய்க்கு தற்போது சந்தையில் கேள்வி இல்லாமை காரணமாக இந்த மரமுந்திரிகை தோல் மூலம் எண்ணெய் உற்பத்தி செய்யும் இயந்திரம் பயன்படுத்தப்படாது காணப்படுகின்றது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் சந்தைக் காரணிகளில் மாற்றம் ஏற்படும் பட்சத்தில் தேவையின் அடிப்படையில் சேர்விஸ் செய்து இந்த இயந்திரங்களை மீண்டும் குறித்த உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் ஆற்றல் உள்ளது.

2.3 (ஓ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

மரமுந்திரிகைத் துறையில் காணப்படுகின்ற ஒரே அரச துறை நிறுவனம் என்ற வகையில் இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்துக்கு நாட்டில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை, மரமுந்திரிகை விஸ்தரித்தல், மரமுந்திரிகை பதனிடல், மரமுந்திரிகையைப் பற்றி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, மரமுந்திரிகை விற்பனை போன்ற பல துறைகளைப் பிரநிதித்துவம் செய்யும் வகையில் அவை சம்பந்தமான பணிகளில் தலையீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நாடு முழுவதிலும் பரவிய 'கொவிட் – 19' தொற்றுநோய் காரணமாக தொற்றுநோய் நிலைமைக்கு மத்தியில் மரமுந்திரிகைத் துறையைச் சேர்ந்த பயிர்ச்செய்கையாளர்கள், பதனிடுபவர்கள், விற்பனை செய்பவர்கள் என்ற வகையில் பெரும் திரளானவர்கள் வருமான வாய்ப்புக்களை இழந்திருந்தார்கள் என்பதுடன், அவ்வாறு பொருளாதார ரீதியாக அசௌகரியமான நிலைமைக்கு தள்ளப்பட்ட மரமுந்திரிகைத் துறையை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஆட்களை அந்த நிலைமையில் இருந்து விடுவித்துக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளும் பொறுப்பும் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதனால், அது தொடர்பில் துரித தீர்மானம் மேற்கொள்ள வேண்டி தேவை எழுந்துள்ளது.

இந்த நிலைமைக்குத் தீர்வு வழங்குவதற்காக அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் இந்தக் கூட்டுத்தாபனத்தில் அப்போது இருந்த தவிசாளரின் கோரிக்கைக்கு அமைய மற்றும் அப்போதைய விடயப்பொறுப்புக்கான கௌரவ இராஜாங்க அமைச்சரினால் கூட்டுத்தாபனத்தின் பதனிடல் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பு செய்யும் விஜயங்களின் போது மேற்கொண்ட அவதானிப்புக்களின் பொறுபேறாக கூட்டுத்தாபனத்துக்கு மற்றும் மரமுந்திரிகைத் துறையைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற பதனிடுபவர்களுக்குப் பொதுவாக நன்மை பயக்கக்கூடிய வகையில் இந்தக் கணக்காய்வு அவதானிப்புக்கு அடிப்படையாக அமைந்துள்ள மரமுந்திரிகை பொதியிடல் இயந்திரம் மற்றும் மேலும் மரமுந்திரிகைப் பதனிடல் இயந்திரக் கட்டமைப்பை (பதனிடல் இயந்திரக் கட்டமைப்புத் தொடர்பாக எந்தக் கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிக்கையில் 2.3(க) இன்கீழ் கணக்காய்வு அவதானிப்பு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது) கொள்வனவு செய்யத் தேவையான நிதி ஏற்பாடுகள் விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சினால் இந்தக் கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் மரமுந்திரிகைப் பதனிடல் நடவடிக்கைகளின் இரு நடவடிக்கைகளில் இறுதிப் பெறுமதிசேர்க்கும் நடவடிக்கைகள் மற்றும் இறுதி பொதியிடல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது நெதகமுவ பதனிடல் நிலையத்திலாகும் என்பதனால், மரமுந்திரிகை பொதியிடல் இயந்திரத்தை அந்த வளவில் தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், மரமுந்திரிகை பதனிடல் இயந்திரக் கட்டமைப்பும் நெதகமுவ பதனிடல் நிலையத்தில் தாபிக்கப்பட முடியுமான எனும் இத்துறையில் உள்ள ஆட்களுக்கு கூடுதல் பயன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நாட்டில் மரமுந்திரிகை கைத்தொழில் நடவடிக்கைகள் கூடுதலாக வியாபித்துள்ள புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள கூட்டுத்தர்பனத்தின் பதனிடல் நிலையத்தில் அந்த மரமுந்திரிகை பதனிடல் இயந்திரக் கட்டமைப்பு தாபிக்கப்பட்டது.

மேலும் 2020 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் முன்வைக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டுக்கான அரசாங்க வரவு செலவுத்திட்டத்துக்கு அமைய அப்போதைய விடயப்பொறுப்பு இராஜாங்க அமைச்சினால் மன்னார், கொண்டச்சித் தோட்டத்தின் மீளத்தாபித்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா. மில்லியன் 225 ஆன ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்துக்குப் பெற்றுத் தரப்பட்டுள்ளதுடன், மேற்படி ரூபா. மில்லியன் 225 ஆன ஏற்பாடுகளில் ரூபா. மில்லியன் 125 கொண்ட கொண்டச்சித் தோட்டத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான கருத்திட்டத்தின் கீழ் 1000 ஏக்கர்கள் நிலப் பிரதேசத்தில் புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளல், ஏனைய அபிவிருத்தி உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 3 வருட காலப்பகுதிக்குள் மேற்படி 1000 ஏக்கர் நிலப்பகுதிக்குள்ளும் படிப்படியாக புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடையின் அளவு தொடர்பாக எதிர்வுகூறலும் முன்வைக்கப்பட்டு உயர் வினைத்திறனைக் கொண்டதாக மேற்படி தோலுடனான மரமுந்திரகை உற்பத்திகளின் பதனிடல் நடவடிக்கைகளை பேணிவரத் தேவையான பதனிடல் மற்றும் பொதியிடல் இயந்திரங்களின் அவசியத்தன்மையையும் இந்தக் கொள்வனவுகளின்போது கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், 'Covid – 19' தொற்றுநோய் நிலைமை நீண்டகாலம் நாடு முழுவதிலும் பரவியிருந்தமை மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி நிலைமை காரணமாக மேற்படி புதிய மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைகளின் நடவடிக்கைகளை முறையாகப் பூர்த்திசெய்ய முடியவில்லை என்பதுடன், அதற்கமைய மேலே குறிப்பிடப்பட்டவாறு கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் மூலம் உத்தேசிக்கப்பட்ட உற்பத்திக் கொள்ளளவை அடைந்துகொள்ள முடியவில்லை. இதற்கமைய குறித்த பொதியிடல் இயந்திரம் கூட்டுத்தாபனத்தில் தற்போது மரமுந்திரிகை உற்பத்திக் கொள்ளளவுக்குப் பொருத்தமானவையாக இல்லாமையினால் மேற்படி பொதியிடல் இயந்திரத்தை முறையான பெறுகை முறைகளைப் பயன்படுத்தி உச்சளவான சந்தை விலைக்கு விற்பனை செய்து அந்த நிதியில் இருந்து கூட்டுத்தாபனத்தின் தற்போதைய உற்பத்திக் கொள்ளளவுக்கு பொருத்தமான புதிய பொதியிடல் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்துகொள்ள அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கமைய மேற்படி பொதியிடல் இயந்திரத்த விற்பனை செய்வதற்காக மேற்கொள்ள வேண்டிய ஆரம்ப கட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய முக்கியமாக தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்திடம் (NERD) குறித்த இயந்திரத்தின் தற்போதைய சந்தைப் பெறுமதி பற்றிய மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக குறித்த பொதியிடல் இயந்திரத்தின் தற்போது செயற்பாடு பற்றி அறிக்கையையும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்கமைய கூடிய விரைவில் இந்தப் பொதியிடல் இயந்திரத்தை விற்பனை செய்யும் பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.3 (ஔ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

<u>குழாய்க் கிணறு மீளத் தாபித்தல் மற்றும் நீர்த்தாங்கிகளை நிர்மாணித்தல் நிர்மாணிப்பு</u>

இதில் குறிப்பிடப்பட்டுள்ள குழாயக்கிணறுகளை மீளத்தாபிக்கும் பணிகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், குறித்த குழாய்க் கிணறினை பயன்படுத்துவதற்காக மேலும் நிர்மாணிக்க வேண்டியுள்ள 04 நீர்த்தாங்கிகளில் ஒரு தாங்கியை நிர்மாணிப்பது நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 02 நீர்த்தாங்கிகளின் ஆரம்ப நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் அங்கு நீர்த்தாங்கிகளை தாபிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மற்றைய நீர்த்தாங்கியின் நிர்மாணப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் நடப்பு ஆண்டின் இறுதிக்குள் குறித்த பணிகளை நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>யானை வேலியை நிர்மாணித்தல்</u>

கொண்டச்சி தோட்டத்தை சுற்றி 26 கிலோ மீற்றர் நீளமான யானை வேலியை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தொடர்பான பெறுகை செயன்முறை சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த நடவடிக்கைகளில் ஏற்பட்ட பொருள்சார் தாமதம் காரணமாக அது தொடர்பில் பல சந்தர்ப்பங்களில் அடிக்கடி நினைவூட்டல்கள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. குறிப்பிடத்தக்களவு நீண்ட கால எல்லைக்குப் பின்னர் சிவில் பாதுகாப்புத் திணைக்களம் மேற்படி பெறுகை நடவடிக்கைகளை நிறைவு செய்யும் ஆற்றல் இல்லை என்று அறிவித்து அந்நடவடிக்கைகளிலிருந்து நீங்கியது.

அதற்கமைய தற்போது கூட்டுத்தாபனத்தினால் மேற்படி பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பணிக்காக தற்போது காணப்படுகின்ற நிதிசார் ஏற்பாடுகளுக்கு அமைய திருத்திய மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய விலைமனுக்கோரலுக்காக பகிரங்கப்படுத்த வேண்டிய பத்திரிகை அறிவித்தல் மற்றும் விலைமனு ஆவணங்கள் தயார் செய்யப்பட்டு குறித்த ஆவணங்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இப்பெறுகையின் எஞ்சியுள்ள பணிகளையும் துரிதமாக

நிறைவு செய்துகொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சுற்றுலா விடுதியை நிர்மாணித்தல்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொண்டச்சி சுற்றுலா விடுதியின் வேலைகள் சுமார் 80% ஆனவை நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், நடப்பு ஆண்டின் இறுதிக்குள் குறித்த சகல வேலைகளையும் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

மின்சாரம் பெற்றுக் கொள்ளல்

கொண்டச்சி தோட்டத்தில் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற சுற்றுலா விடுதிக் கட்டிடம் தவிர விடயரீதியான கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ள ஏனைய சகல கட்டிடங்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிட்ட சுற்றுலா விடுதிக்கு வயரின் செய்யும் பணிகள் எஞ்சியுள்ளதுடன், அப்பணிகள் நிறைவடைந்தவுடன், அக்கட்டிடத்திற்கும் மின் இணைப்பைப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.3 (க) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இக்கணக்காய்வு அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்களில் தற்போது 04 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிக்கும் பணிகள் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கமைய குறித்த இல்லங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், இக்கருத்திட்டத்தின் கீழ் நாலந்தா விதைத் தோட்டம் /தோட்ட வளவில் ஆரம்ப நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தின் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான காரணம் தொடர்ந்தும் பெணிவருவது சிக்கமானதாக இல்லாமை காரணமாக கூட்டுத்தாபதன்தின் பணிப்பாளர் சபைத் தீர்மானத்திற்கு அமைய நாலந்த விதைப் பூங்கா / தோட்டத்தை அதன் ஆரம்ப உரித்தைக் கொண்டிருந்த எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு மீண்டும் சாட்டுதல் செய்ய கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளமையாகும்.

மேலும், மொனராகலை, தம்புளை ஆகிய பிரதேசங்களில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடாபாக குறித்த பிரதேசங்களில் நிலத்தின் தன்மைக்கு அமைய எஞ்சிய நிர்ாணப் பணிகளை ஆரம்பிக்க முன்னர் மீண்டும் பொறியியலாளர் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கமைய குறித்த பணிகளில் ஓரளவு தாமதம் காணப்படுகின்றது. குறித்த தாமதங்களைத் தவிர்த்துக் கொண்டு

அவ்உத்தியோகபூர்வ இல்லங்களின் நிர்மாணப் பணிகளையும் கூடிய விரைவில் பூர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.3 (ச) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள நெதகமுவ காணியின் உறுதியை சிக்கலற்றதாக உறுதி செய்துகொள்வதற்கு கம்பஹா காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவ் அலுவலகத்திடம் விண்ணப்பிக்கப்பட்ட சகல ஆவணங்களையு் அனுப்ப தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த பணியை நிறைவேற்றிக் கொள்வது தொடர்பான பின்னாய்வும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 (ஜ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது புத்தளம் பதனிடல் நிலையம் அமைந்துள்ள காணியின் உறுதியின் சிக்கலற்றதாக்கப்பட்டு பெற்றுக் கொள்வது நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்கமைய, குறித்த இருமடிக் கட்டைகளை இற்றைப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

2.3 (ஞ) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த நீர் விநியோகக் கட்டமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டத்தை 2021 ஆண்டில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட போதும், இதன் கீழ் பல உப கருத்திட்டங்கள் காணப்படுதல் மற்றும் மேற்படி உப கருத்திட்டங்களில் உள்ளடங்கும் பணிகளை தனித்தனியாக திட்டமிட்டு பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஆகிய காரணங்களினால் குறித்த கருத்திட்டத்தை நிறைவு செய்ய எதிர்பார்த்த கால எல்லையைத் தாண்டியும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது.

அத்துடன் 2022 ஆண்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையுடன் இக்கருத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவினத்திலும் பார்க்க உண்மையாக தாங்கிக் கொள்ள வேண்டி ஏற்படுகின்ற செலவினம் அதிகரிப்பதன் மூலம் அதற்கான மாற்று வழிமுறைகளை தயார் செய்வதற்கும், மேலும் திருத்திய மதிப்பீடுகளைத் தயார் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், குறித்த கருத்திட்டத்தின் கீழ் காணப்பட்ட நிர்மாணிப்புக்களுக்குத் தேவையான சீமேந்து, இரும்பு போன்ற நிர்மாணப் பொருட்களின் பற்றாக்குறையும் இக்கருத்திட்டம் மந்தகதியில் இடம்பெறக் காரணமாக அமைந்தன.

எவ்வாறாயினும், இந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட வேலைகளின் ஒரு பகுதியிலிருந்து ஒரு நீர்த் தாங்கியை நிர்மாணித்தல் மற்றும் கொண்டச்சி தோட்டத்தைச் சுற்றி யானை வேலி நிர்மாணித்தல் ஆகிய பணிகள்

தவிர ஏனைய சகல நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இந்த அறிக்கையில் 2.3 (ஓ) இன் கீழ் அந்நடவடிக்கைகளின் தற்போதைய முன்னேற்றம் குறிப்பிடப்பட்டுள்ளது.

2.3 (த) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டள்ள விடயம் தொடர்பாக பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த மின்சார சபைக்கு கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள கொண்டச்சி தோட்டத்தின் 02 ஏக்கர் அளவான காணிப்பகுதிக்கு முறையான உடன்படிக்கையொன்றின் கீழ் அச்சபையிடமிருந்து குத்தகை வாடகையை அறவிட்டுக் கொள்ள அங்கீகாரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய இருதரப்பினர்களும் குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிட நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், இதற்கமைய மின்சார சபைக்கு குறித்த காணிப்பகுதியைப் பயன்படுத்திக் கொள்ள இடமளிக்கப்பட்டுள்ளதுடன், ஒட்டுமொத்த காலப்பகுதிக்குமான குத்தகை வாடகையை அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

2.3 (ந) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

மேற்படி கணக்காய்வு அவதானிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதனிடல் இயந்திரத்தின் வழங்குநருக்கு எதிராக ஆரம்ப கட்ட சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி பதனிடல் இயந்திரக் கட்டமைப்பில் தோலுடனான மரமுந்திரிகை வெட்டும் அம்சம் மற்றும் மரமுந்திரிகை பருப்பு சுத்தம் செய்யும் அம்சம் தற்போது செயற்படும் நிலையில் உள்ளதுடன், அதற்கமைய மேற்படி இயந்திரம் தேவையின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் புத்தளம் பதனிடல் நிலையத்தின் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கட்டமைப்பின் சகல அம்சங்களையும் ஒரே தன்னியக்கக் கட்டமைப்பாக செயற்படுத்துவதற்காக மேற்கொள்ள வேண்டிய புதுப்பித்தல்களை இனங்கண்டு அப்பணிகளை பூர்த்தி செய்வதற்கு நிபுணர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ளத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2.3 (ப) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இந்த அவதானிப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கமன்தலுவ தோட்ட வளவில் இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் பொலிசுக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ள போதிலும், இதன் மூலம் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

கமன்தலுவ தோட்டம் அமைந்துள்ள காணி, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் கீழ் காணப்படுகின்ற காணியாக உள்ளதனால் இந்த நிலைமை தொடர்பாக மேற்படி ஆணைக்குழுவின் அலுவலர்களுக்கும் அறிவிக்கப்பட்டதுடன், அதற்கமைய இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஆகியன இணைந்து மேற்படி விடயம் தொடர்பில் அவசியமான அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான விடயங்கள் பற்றி கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகளையும் ஆரம்பித்துள்ளன.

எவ்வாறாயினும் இதற்கு முன்னர் இந்த அறிக்கையில் 2.2.2 (இ) பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சட்ட ரீதியான உரித்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் கூட்டுத்தாபனத்தின் தோட்டங்கள், விதை நிலங்களின் காணிகளை அளவை செய்யும் பணிகளை பூர்த்தி செய்யும் போது இந்த கமன்தலுவ தோட்டத்தின் காணியையும் அளவை செய்து சட்ட விரோத மணல் அகழ்வு மேற்கொள்ளும் காணிப் பகுதியையும் கூட்டுத்தாபனத்தின் ஒரு பகுதியாக உறுதி செய்து கொண்டதன் பின்னர் இந்த சிக்கல் நிலைமையை பெரும்பாலும் தீர்த்துக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2.3 (ம) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

2023 ஆண்டு நிலவிய கடும் உலர் காலநிலை காரணமாக அதிக வெப்பக் காலநிலையினால் மரமுந்திரிகை பூக்கள் உலர்ந்துவிடுதல், மகரந்தச் சேர்க்கை செய்யும் பூச்சுக்கள் அழிவடைதல் போன்ற விடயங்களினால் 2023 ஆண்டில் மரமுந்திரிகை அறுவடை குறைவடைந்துள்ளதுடன், இவ்விடயங்கள் இதற்குக் காரணமான அடிப்படை காரணிகளாகும். இந்த நிலைமை மரமுந்திரிகை கூட்டுத்தாபனத்தின் தோட்டங்களுக்கு மாத்திரமன்றி பொதுவான நாட்டில் உள்ள ஏனைய தோட்டங்களிலும் இவ்வாறே தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

மேலும், கூட்டுத்தாபனத்தின் எழுவங்குளம், நாலந்த, வெல்லன்குளம் மற்றும் பூநகரி ஆகிய தோட்டங்களில் காணப்பட்ட காட்டு யானைகளின் அழிவு காரணமாக பெரும் எண்ணிக்கையான மரங்கள் உயிரிழந்தமையும் இதில் மறைமுகமாக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. காட்டு யானைகள் காரணமாக வருடாந்தம் அழிவடையும் மரமுந்திரிகை மரங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவாக உள்ளதுடன், இந்த அழிவு காரணமாக மரமுந்திரிகை மரங்களில் மரக்குற்றி மீதான பூச்சுக்களின் பாதிப்பு பரவுவதும் வேகமடைந்துள்ளது. இந்நிலைமையத் தடுத்துக் கொள்வதற்காக குறித்த தோட்டங்களை சுற்றி யானை வேலி, யானை அகழி நிர்மாணிக்கத் தேவையான அடுத்த கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பு ஆண்டில் (அதாவது 2024 ஆம் ஆண்டு) ஒட்டுமொத்த தோலுடனான மரமுந்திரிகை

விளைச்சல் கிடைக்கும் அளவு 55% அண்மித்த விகிதத்தில் அதிகரித்துள்ளது என்பதைக் குறிப்பிடல் வேண்டும்.

2.3 (ய) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

அநுராதபுரம் உட்பட நாட்டில் மரமுந்திரிகை பயிர் செய்கை மேற்கொள்ளப்படும் மாவட்டங்களில் மரமுந்திரிகை பயிர் செய்கை மற்றும் அது சம்பந்தமான ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட போதும், அதற்கு சிறந்த பதில் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும், குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக மாற்று நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்கமைய எதிர்காலத்தில் குறித்த மாவட்டங்களில் மரமுந்திரிகை உற்பத்தி மற்றும் பதனிடல் கைத்தொழில் அபிவிருத்தி சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக் கொண்டு அதற்கமைய தேவையான அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது.

2.3 (ர) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

இதில் குறிப்பிடப்பட்டுள்ள மிகிந்தலை மரமுந்திரிகை நாற்றுமெடை வளவில் நிர்மாணிக்கப்படுகின்ற குழாய்க் கிணறு கொண்டச்சி நீர் வழங்கல் கட்டமைப்பை புனரமைப்புச் செய்யும் கருத்திட்டத்தின் கீழ் காணப்படுகின்ற ஏற்பாடுகளிலிருந்து உரிய அங்கீகாரத்துடன், மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்பாகும் என்பதுடன், தற்போது நீர் மோட்டரை பொருத்தும் பணிகள் தவிர விடயரீதியான அம்சங்களுக்குரிய ஏனைய சகல பணிகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மிகத் துரிதமாக குறித்த மோட்டரும் பொருத்தப்பட்டு இந்த குழாய்க் கிணறு பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2.3 (ல) பின்வருமாறு விளக்கமளிக்கின்றேன்.

தற்போது கூட்டத்தாபனத்தின் அநுராதபுரம் பிராந்திய அலுவலகம் பேணிவரப்படுவது வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடமொன்றிலாகும் என்பதுடன், மேற்படி இடத்தில் மரமுந்திரிகை நாற்றுமெடைகளை பேணிவருவதற்கு உகந்த சூழல் இல்லை.

எவ்வாறாயினும், அநுராதரபும் நகரத்தில் அமைந்துள்ள புகையிரதத் திணைக்களத்திற்கு உரித்தான இடவசதிகளைக் கொண்ட கட்டிடமொன்று, கூட்டுத்தாபனத்தின் அநுராதபுரம் பிராந்திய அலுவலகத்தை தாபிப்பதற்காக கோரப்பட்டுள்ளதுடன், அதற்கமைய எதிர்காலத்தில் மேற்படி இடத்தில் பிராந்திய அலுவலகம் தாபிக்கப்பட்டதன் பின்னர் போதயளவு இடவசதிகள் காணப்படுவதானல் அவ்விடத்திலேயே மரமுந்திரிகை செடிகளை விற்பனை செய்வதற்காக வைத்திருப்பதற்கு ஆற்றல் கிடைக்கும்.

## 13. 05 வருட கணக்குகளின் பொழிப்பு.

| **இலாப நட்டக் கணக்கு** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேறிய விற்பனை | 176,317 | 134,849 | 139,223 | 109,120 | 100,082 |
| விற்பனை செலவினம் | 135,915 | 83,472 | 99,661 | (72,190) | (67,857) |
| **மொத்த இலாபம்** | **40,402** | **51,377** | **39,562** | **36,930** | **32,225** |
| ஏனைய வருமானங்கள் | 76,599 | 69,390 | 42,727 | 43,300 | 48,343 |
| மீண்டெழும் கொடை | 80,400 | 77,500 | 64,800 | 60,000 | 60,000 |
| நிருவாகச் செலவினம் /ஏனைய செலவீனம் | (196,573)<br>(5,849) | (181,059) | (160,419) | (147,982<br>) | (167,334) |
| தேய்மானம் | | (2,736) | (3,082) | (3,134) | (3,420) |
| **வணிக நடவடிக்கைகளில் இருந்தான தேறிய இலாபம்** | **(5,021)** | **14,472** | **(16,412)** | **(10,886)** | **(30,186)** |
| **சேவை துறை – வருமானத்தை விஞ்சிய செலவினம்** | **-** | **-** | **-** | **-** | **-** |
| **ஆயுள் கணிப்பீடு (இலாப) /நட்டம்** | **(154)** | **(2,232)** | | | |
| **தேறிய இலாபம் /நட்டம்** | **(5,175)** | **16,704** | **(16,412)** | **(10,886)** | **(30,186)** |
| **ஐந்தொகை** | | | | | |
| **நடைமுறையல்லாத சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 113,260 | 116,125 | 117,553 | 77,883 | 82,027 |
| அறுவடை பெறும் பயிர்ச்செய்கைக்கான பராமரிப்பு | 81,699<br>46,008 | 25,316 | 28,053 | 31,135 | 34,270 |
| அறுவடை பெறாத பயிர்ச்செய்கைக்கான பராமரிப்பு | 22,134<br>841 | 98,080 | 71,592 | 60,329 | 37,862 |
| மேற்கொண்டு வரும் மூலதன வேலை | | 6,543 | 628 | 576 | 69 |
| ஏனைய சிறிய கருத்திட்டங்கள் | | 588 | 6,363 | 122 | 675 |
| **மொத்த நடைமுறையல்லாத சொத்துக்கள்** | **263,942** | **246,652** | **224,189** | **170,045** | **154,903** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்பு | 105,484 | 76,770 | 90,952 | 64,467 | 38,264 |
| வர்த்தக கடன்பட்டோர் மற்றும் கிடைக்க வேண்டியவை | 28,640 | 31,801 | 47,390 | 18,474 | 21,207 |
| முற்பணம் மற்றும் முன்கொடுப்பனவு | 9,751 | 50,639 | 43,813 | 9,828 | 6,093 |
| காசும் காசுக்குச் சமமானவையும் | 156,599 | 143,842 | 159,876 | 42,516 | 5,202 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | **300,474** | **303,052** | **342,031** | **135,285** | **70,766** |
| | | | | | |
| **மொத்த சொத்துக்கள்** | **564,416** | **549,704** | **566,220** | **305,330** | **225,669** |
| **உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **உரிமையாண்மை** | 40,000 | | | | |
| ஆரம்ப மூலதனம் | 300,698 | 40,000 | 40,000 | 40,000 | 40,000 |
| அரசாங்க கொடைகள் | 246,157 | 281,565 | 289,535 | 256,381 | 202,788 |
| ஏனைய தரப்பினர்களிடம் கிடைத்த கொடைகள் | 17,442 | 280,919 | 286,736 | 32,337 | 15,766 |
| மூலதன ஒதுக்கம் | (156,860) | 17,441 | 17,442 | 17,441 | 17,442 |
| இலாப நட்டக் கணக்கு | | (152,058) | (167,065) | (149,638<br>) | (141,197) |
| **மொத்த உரிமையாண்மை** | **447,437** | **467,867** | **466,648** | **196,521** | **134,799** |
| **நடைமுறையல்லா பொறுப்பு** | | | | | |
| பணிக்கொடைக் கொடுப்பனவுக்கான ஒதுக்கம் | 40,515 | 35,790 | 42,948 | 38,953 | 35,046 |
| நீண்ட காலக் கடன் | 3,500 | 3,500 | 3,500 | 3,500 | 3,500 |
| **மொத்த நடைமுறையல்லாப் பொறுப்பு** | **44,015** | **39,290** | **46,448** | **42,453** | **38,546** |
| **நடைமுறைப் பொறுப்பு** | | | | | |
| வணிகக் கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய அறவிடவேண்டியவை | 72,964 | 42,547 | 53,124 | 66,359 | 52,324 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **மொத்த நடைமுறைச் பொறுப்பு** | **72,964** | **42,547** | **53,124** | **66,359** | **52,324** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்பு** | **564,416** | **549,704** | **566,220** | **305,333** | **225,669** |
| தேறிய சொத்துக்களின் பயன்கள் %<br>தேறிய இலாப விகிதம்<br>நடைமுறை விகிதம்<br>உடனடி சொத்து விகிதம்<br>**மொத்த வருமானத்துக்கான மொத்த செலவினம்** | (1.16)<br>(2.9%)<br>4.1<br>2.7<br>0.98 | 3.6%<br>12.4%<br>7:1<br>5:3<br>1:1 | (3.5%)<br>11.8%<br>0:3<br>4:7<br>( 0.93) | (5.5)<br>(9.98)<br>2:01<br>1:1<br>(0.89) | (22.39)<br>(30.2)<br>1:4<br>0:4<br>(1.3) |